Azim Premji Foundation

# திசைமானி

ஒன்று கூடிய பயணம் THISAIMAANI | VOLUME : 1 | ISSUE : 2 | OCTOBER 2019






## முன் மழலையர் கல்வி (Pre-Primary)








## ஆண்டு மலர் - 2019

# PRE-PRIMARY WORKSHOPS













# FOREWORD

I had the good fortune of reading this good compilation of first-hand experiences and practical solutions to some of the most daunting tasks faced by pre-primary school teachers in their classrooms. The articles are well-written and contain sound and practical advice. They discuss each side of the issue, present great insights and raise many questions that most teachers would not have anticipated.

While the situation is very challenging for teachers in classrooms, I am sure the practical solutions presented by the writers in this edition of Thisaimaani will help them to a great extent in handling multiple roles such as preparing, planning and executing tasks in their classroom effectively.

I compliment the efforts taken by the Thisaimaani Team in compiling these resources for teachers. Thank you and I hope these good articles keep coming.



**C. KUMAR**
Deputy Inspector of Schools, Zone II,
Directorate of School Education,
Puducherry

# Medaiyil Thisaimaani 2019

www.azimpremjifoundationpuducherry.org


4 முன் மழலையர் கல்வி - ஓர் கண்ணோட்டம்

9 கருப்பொருளை மையப்படுத்திய கற்றலில் மழலையர் வகுப்பறை

13 நாடகம் மூலம் மகிழ்ந்து கற்றல்

16 எழுத்துகளின் அடையாளம் - எளிய வழியில்

19 என் வகுப்பறையும் விளையாட்டும்

21 குழந்தைகள் மனதில் உருவான காய்கறிகள்

24 ஒரு குடம் தண்ணீர் ஊற்றினால் ஒரு பூதான் பூக்குமா?

27 விளையாட்டுகளின் மூலம் எண்கள்

29 முன்மழலையர் வகுப்பில் எண்கள் மற்றும் எண்ணிக்கை

32 தமிழ் எழுத்துக்கள் கற்பிக்கக் கையாண்ட புதிய முயற்சி

34 கதை கூறுதல் - ஒரு பகிர்வு

36 மழலையர் பருவத்தில் அன்பும் அரவணைப்பும்

39 எழுத்துகள் படுத்தும் பாடு

41 உடல் பாகங்களின் மூலம் வடிவங்கள்

















44 முன் மழலையர் வகுப்பிற்கான ஆயத்தம்

47 மகிழ்வான வழியில் மொழிக்கற்பித்தல்

50 கற்றல் திறனை மேம்படுத்துதல்

52 பூக்கும் வகுப்பறை

55 பூக்கள் வகுப்பறையும் கொண்டாட்டமும்

59 வண்ணங்கள் தருவாயா? இப்படிக்கு வண்ணத்துப் பூச்சி

62 உற்சாகமான வகுப்பறை; மகிழ்ச்சியான மாணவர்கள்

64 விளையாட்டுக்களின் மூலம் மொழி கற்பித்தல்

66 பூக்களோடு பூத்த எனது எண்ணங்கள்

69 NOURISHING THE ROOTS IN PRE-PRIMARY: FEW ACTIVITY IDEAS

72 NUMBER GAMES IN KINDERGARTEN

74 Science Exhibition by Pre-Primary Kids

76 என் உடம்பு

79 முன்மழலையர் வகுப்பில் ஒரு நாள் பொம்மலாட்டம்.
















# முன் மழலையர் கல்வி - ஓர் கண்ணோட்டம்

குழந்தையின் பிறப்பு முதல் 6 வயது வரையிலான காலகட்டங்கள் என்பது குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத காலங்கள் ஆகும். குழந்தை மேம்பாடு, குழந்தை உரிமைகள், நரம்பியல் அறிவியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய அனைத்தின் முன்னோட்டங்களும் குழந்தைகளின் இந்தக் காலகட்டங்களைத் தான் மேம்படுத்த முயல்கின்றன. குழந்தை மேம்பாட்டுக்கான கண்ணோட்டத்தின் கூற்றுப்படி பிறப்பு முதல் 6 வயதிலான காலங்கள் குழந்தையின் மேம்பாட்டுக்கு அடித்தளமாக அமைகின்றது. இந்த காலகட்டங்களில் தான் குழந்தையின் நடத்தை, மனப்பாங்கு மற்றும் திறன் ஆகியவைகள் கட்டமைக்கப்படுகின்றன. குழந்தைகள் நுண் தசை வளர்ச்சிக்கு முறையான பயிற்சிகள் பெறும்பட்சத்தில் அவர்கள் பள்ளிக்குச் செல்லும் பொழுது எழுத்துக்களை எளிதாக எழுதமுடியும்.

நரம்பியல் அறிவியல் கண்ணோட்டத்தின்படி குழந்தைகள் சந்திக்கும் நேர்மறையான அனுபவங்கள் மற்றும் செயல்பாடுகள் அவர்களின் முளை நரம்புகளில் இணைப்புகள் ஏற்பட வழிவகுக்கின்றன. மூளை நரம்புகளின் இணைப்புகள் மூளையின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். குழந்தைகள் சந்திக்கும் நேர்மறையான அனுபவங்கள் நரம்புகளின் இணைப்புகளை வலுப்படுத்துகின்றது, எதிர்மறையான அனுபவங்கள் இணைப்புக்களை வலுவிழக்கச் செய்கின்றன.

நமது இந்திய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் சாசன ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. எனவே, கட்டாயமாகக் குழந்தைகள் அனைத்து உரிமைகளையும் பெற்றிட வழிவகுக்க வேண்டும். குழந்தை பாதுகாப்பு, வளர்ச்சி, பங்கேற்பு மற்றும் உயிர் வாழ்தல் ஆகியவை குழந்தையின் அடிப்படை உரிமைகள் ஆகும். பேராசிரியர் ஷேம்ஸ் ஹக்மேன் அவர்களின் பொருளாதாரக்



கண்ணோட்டத்தின் படி முன் மழலையர்களுக்காச் செலவழிக்கும் ஒவ்வொரு மடங்கும் எதிர்காலத்தில் நான்கு அல்லது ஐந்து மடங்குகளாகத் திரும்பக் கிடைக்கும் என்கின்றார். அதாவது நாம் அல்லது அரசாங்கம் ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு 1 ரூபாய் செலவழித்தால் அது எதிர்காலத்தில் நாட்டிற்கு 4 அல்லது 5 ரூபாயாகத் திரும்பக் கிடைக்கும். இந்தக் கூற்று மிகவும் பின்தங்கிய குடும்பத்தில் இருக்கும் குழந்தைகளின் வாழ்வில் உண்மையாக அமைகின்றது. மேற்கூறிய அனைத்து விசயங்களுமே பிறப்பு முதல் 6

வயது வரையில் இருக்கும் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் தேவையான தரமான சேவைகளை வழங்கிட வேண்டும் என்பதையே ஊக்குவிக்கின்றன.



## தரமான முன் பருவ குழந்தைத் திட்டங்கள்:

தரமான முன் பருவ குழந்தைத் திட்டங்கள் என்பது கீழ்க்காணும் அடிப்படை விசயங்களைப் பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும்.

**செயல்முறை வழிக் கற்றல்;** குழந்தைகளின் கற்றல் என்பது செயல்பாடுகள், சோதனைகள், பலவிதமான உபகரணங்களைக் கையாளுதல் மற்றும் சிந்தித்தல் ஆகியவற்றின் மூலம் அமைகிறது.

**கருத்து உருவாக்கத்திற்கான கற்றல்:** கருத்து உருவாக்கத்திற்கான கற்றலானது அடிப்படை விசயங்களைப் புரிந்துகொள்வதற்கும், திறமைகளைப் பெறுவதற்கும் வழிவகுப்பதாக அமைகிறது. அளவுகள், வரிசைப்படுத்துதல், எடை, நிறங்கள் மற்றும் பகிர்ந்து கொடுத்தல், வாய்ப்புக்காக காத்திருத்தல், ஒற்றுமை, வேறுபடுத்துதல், ஒப்பிடுதல் போன்ற பல்வேறு கருத்தாக்கங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றனர்.

**பயனுள்ள மற்றும் பொருத்தமான கற்றல் அனுபவங்கள்:** இதன் செயல் திட்டங்கள் குழந்தைகளின் விருப்பம் மற்றும் அவர்களின் வயதுக்கு ஏற்ப அவர்களின் அன்றாட வாழ்க்கைச் சூழல் மற்றும் அனுபவங்களைப் புரிந்து கொள்வதற்கு உதவும் செயல்பாடுகளாக இருத்தல் வேண்டும்.

**கலந்துரையாடல் மற்றும் ஒன்றிணைந்து கற்றல்:** ஆசிரியர் ஓர் வழிகாட்டியாக மட்டும் செயல்பட்டு, குழந்தைகளுடன் கலந்துரையாடி, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

**முறையான அனுபவங்கள்;** இதற்கான செயல்பாடுகள் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுப்பதாகவுகம், பாடத்திட்டங்களைக் (மொழி, கணிதம், சமூக அறிவியல், சூழ்நிலையியல்) கற்பிக்கும் நோக்கிலும் இருக்க வேண்டும். முன் மழலையர் குழந்தைகளுக்குக் கணிதத்தில் வடிவங்கள் மற்றும் அளவுகள் பற்றிப் புரிதல் இருக்க வேண்டும், அவர்கள் வகுப்பறையில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றிச் சூழ்நிலையியலில் இருக்க வேண்டும்.

தரமான முன் பருவ குழந்தைத் திட்டத்தில் முன் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்குக் குழந்தைகளின் மேம்பாடு பற்றிய முழுமையான புரிதல் இருத்தல் வேண்டும். மேலும் அவர்கள் வடிவமைக்கும் வகுப்பறைச் செயல்பாடுகள் அனைத்தும் மேற்கூறிய குழந்தைகள் மேம்பாட்டுக்கான விசயங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். குழந்தைகளின்

கற்றல் செயல்பாடுகளில் பெற்றோரையும், சமுதாயத்தினரையும் ஈடுபடுத்த வேண்டும்.

## மேம்பாட்டுக் களங்கள்:

### உடல் இயக்கம்:

உடல் இயக்க வளர்ச்சி என்பது உடல்பாக இயக்கங்கள் மேம்பாடு, உடல் நலம் மற்றும் நலமான வாழ்வை உள்ளடங்கியதாகும். உடல்பாக இயக்கங்களின் மேம்பாடானது பெருந்தசை வளர்ச்சி, நுண் தசை வளர்ச்சி மற்றும் புலன் உணர்வு திறன்களின் வளர்ச்சியைச் சார்ந்ததாகும். உடல் நலம் மற்றும் நல்வாழ்வானது அன்றாட வாழ்க்கைத் திறன்கள், ஊட்டச்சத்து, உடற் தகுதி, தன் சுத்தம் மற்றும் சுய பாதுகாப்பை உள்ளடக்கியதாகும்.

### உணர்வு எழுச்சி மேம்பாடு:

உணர்வு எழுச்சி மேம்பாடு என்பது தனி ஒருவரின் செயல்திறன்கள், உணர்வுக் கட்டுப்பாடுகள், உணர்வு வெளிப்பாடுகள் மற்றும் தங்களுடைய உணர்வுகளையும் மற்றவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொள்வது ஆகும்.

### சமூக உணர்வு மேம்பாடு:

சமூக உணர்வு மேம்பாடானது மற்றவர்களுடன் உறவு ஏற்படுத்துதல், இளைஞர்கள், குழந்தைகள் மற்றும் சம வயதினருடன் பழகும் விதம், கலாச்சார வேறுபாடுகளைப் பாராட்டுதல் மற்றும் சமுதாய செயல்பாடுகளுக்கு ஏற்ப பழகிக் கொள்வதாகும்.

### படைப்பாற்றல்:

கலை, இசை மற்றும் நடனம் இவை அனைத்தையும் உள்ளடக்கியது படைப்பாற்றல் திறன். திறமைகளை வெளிப்படுத்துதல், தலைமைப் பண்புகளை வளர்த்தல், புரிந்து கொள்ளுதல் மற்றும் பாராட்டுதல், மாறுபட்டு சிந்தித்தல் போன்றவற்றைக் குறிக்கும்.

### அறிவாற்றல் மேம்பாடு:

அறிவாற்றல் மேம்பாட்டுக் களம் என்பது பொதுஅறிவு, பகுத்தறிதல், பொருளறிதல், கணிதம் மற்றும் எண்ணறிவு மற்றும் சமூக மரபு பற்றிய அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இது மேலும் புதியவற்றைப் பற்றிய ஆர்வம், அறிந்து கொள்ளுதல், தொடர்ந்து முயற்சித்தல், கவனித்தல், கற்பனை செய்தல், கண்டுபிடித்தல், மற்றும் புதிய விசயங்களைக் கற்றுக் கொள்ளுதல், வெளிப்படுத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

### மொழி வளர்ச்சி:

மொழி வளர்ச்சி திறன் என்பது கேட்டல், புரிந்து கொள்ளுதல், பேசுதல் மற்றும் தகவல் பரிமாறுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். மேலும் கல்வியறிவு, வாசிப்பதற்கு/எழுதுவதற்குத் தயாராதல் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

### முன் மழலையர் பள்ளியின் சூழல்:

முன் மழலையர் பள்ளியின் சூழல் குழந்தைகளின் கற்றலில் முக்கியப் பங்கு வகுக்கிறது. அதிலும் பாதுகாப்பான சூழல் என்பது கருத்தில் கொள்ள வேண்டிய அம்சம் ஆகும். மழலையர்கள் பயன்படுத்தும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் பாதுகாப்பானதாகவும், நச்சுதன்மையற்ற நிறங்களை உடையதாகவும், எளிதில் துருப்பிடிக்காததாகவும் இருத்தல் அவசியம். அவ்வுபகரணங்களின் முனை கூர்மையற்றதாக இருத்தல் வேண்டும். மின் சுவிட்ச்கள், மின்சார கம்பிகள் மற்றும் மருந்து வகைகள் மழலையர் தொடும் தூரத்தில் இருக்க கூடாது.

சாலைகளின் அருகாமையில் அமைந்திருக்கும் முன் மழலையர் பள்ளிகளில் குழந்தைகள் சாலைக்குச் சென்று விடாத வண்ணம் கவனம் கொள்ளுதல் வேண்டும். பள்ளி வளாகத்தில் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழலையும் உறுதிப்படுத்துதல் அவசியமாக அமைகிறது. பள்ளி வளாகத்தின் வெளிச்சுவர் வெள்ளை நிறத்திலோ அல்லது லேசான நிறத்திலோ அமைவது நன்று. பள்ளிக்கட்டிடத்தில் உள்ள வகுப்பறையில் குறைந்தது ஒரு சன்னலாவது இருத்தல் நல்ல காற்றோட்டத்தை உறுதி செய்யும். கற்றல் கற்பித்தல் உபகரணங்களை குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் எளிதாக எடுத்து பயன்படுத்தும் வகையில் வைக்க வேண்டும்.

முன் மழலையர் பள்ளியின் சுற்றுச்சூழல் குழந்தைகளுக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருத்தல் வேண்டும். எளிதல் மாற்றக்கூடிய கற்றல் உபகரணங்களைத் தொங்கவிடுவது நல்லது. இந்த உபகரணங்கள், பழங்களாகவோ

காய்கறிகளாகவோ வாகனங்களாகவோ அல்லது மழலையரின் ஆர்வத்தைத் தூண்டக் கூடிய தலைப்புகளில் அமையலாம். வகுப்பறைச் சுவர்களில் சில விளக்கப்படங்கள் மற்றும் வரைப்படங்களைத் தொங்கவிடலாம். மழலையர் உட்கார தரைவிரிப்புகளையும் வகுப்பறை பயிற்சிகளுக்குத் தாழ்வான மேசையையும் பயன்படுத்தலாம்.

## முன் மழலையர் பள்ளித் திட்டம்:

உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டுகளின் போது மழலையர் தாங்கள் விரும்பிய விளையாட்டுகளை விளையாட வேண்டும். அவர்களோடு கூட ஆசிரியர் இருத்தல் நன்று. ஆனால், ஆசிரியர்கள் இன்னமுறையில் விளையாட வேண்டுமென மழலையரை வற்புறுத்தக் கூடாது. உட்புற விளையாட்டுகளின் போது விளையாட்டு உபகரணங்களை மழலையருக்குக் கொடுக்க வேண்டும். வேறுசில நாட்களில் வழிகாட்டுதலோடு கூடிய விளையாட்டுப் பயிற்சிகளை அறிமுகப்படுத்தலாம்.



பாடல், இசை மற்றும் துள்ளல் நேரம் என்பது பாடல்களையும் நடனங்களையும் இசையுடன் கூடிய பயிற்சிகளையும் உள்ளடகியதாக இருத்தல் வேண்டும். மேலும் துள்ளல் நேரத்தில் விரும்பிய படி குதித்தல், முயலைப் போல குதித்தல், சிங்கத்தைப் போல உறுமுதல் போன்றவைகளைச் செய்ய வைக்கலாம். ஆசிரியர் வாரத்திற்கு ஒரு புதிய பாடலைக் கற்றுக்கொடுக்கலாம். அதனோடு கூட முன்பு கற்ற பாடல்களைப் பாடுவதும் அவசியம். ஏனென்றால், குழந்தைகள் நன்கு பழக்கமான பாடல்களைப் பாடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவர்.

## உரையாடல் நேரம்:

மழலையர்களுடனான உரையாடல் என்பது குறிப்பிட்ட கருப்பொருளை ஒட்டியதாக இருத்தல் வேண்டும். அக்கருப்பொருள்கள் சார்ந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளலாம். தொடர்ச்சியாக குழந்தைகளிடம் கேள்வி கேட்காமல் அவர்களைத் தாமாக பேச விட வேண்டும். கருப்பொருள் சார்ந்த உரையாடல்கள் மேற்கொள்ளும் பொழுது அதற்கான வரைப்படங்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்.

## கதை சொல்லும் நேரம்:

கதை சொல்லும் நேரங்களில் மழலையரின் ஆர்வத்தைத் தூண்ட பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக பட அட்டைகள், போஸ்டர்கள், படப் புத்தகங்கள், பொம்மலாட்டம் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தலாம். கதைகளைக் கூறும்போது உணர்ச்சி மிகுந்து குரல் ஏற்ற இரக்கத்துடன் கூற வேண்டும். கதைகள் மழலையரின் வயதிற்கேற்ப இருத்தல் நல்லது. எந்த ஒரு உபகரணமுமின்றிச் சிறப்பான முறையில் கதைகளைக் கூறலாம்.

மழலையர் தங்கள் சொந்த கதைகளைக் கூற வாய்ப்புகள் உண்டாக்க வேண்டும். அந்த வாய்ப்புகள் அவர்களின் சொந்த கதைகளைச் சித்தரிப்பதாக இருக்கலாம் அல்லது முன்னரே கேட்ட கதைகளாகக் கூட இருக்கலாம்.

## பள்ளிக்கு தயார்படுத்துதல்:

வடிவம், நிறம், அளவு போன்ற அடிப்படை திறன்களில் மழலையரை மேம்படுத்துவது பள்ளிக்குத் தயார்படுத்தும் செயல்பாடுகள் ஆகும். கண் மற்றும் கைகளுக்கான ஒருங்கிணைப்பு, நுண் தசை வளர்ச்சி ஆகியவை பள்ளிக்குத் தயார்படுத்தும் பயிற்சியின் பகுதிகளே ஆகும். இந்தப் பயிற்சிகளே மழலையரின் வருங்கால பாடத்திறன்களான வாசித்தல், எழுத்துதல் மற்றும் கணிதத்திற்கான முன்னோடி எனலாம்.

**படைப்பு மற்றும் கலை சார்ந்த பயிற்சிகள்** வாயிலாக மழலையர்கள் தங்கள் படைப்புத்திறன்களையும், தனித்துவத்தையும் வெளிப்படுத்தலாம். ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், விரல்களில் வரைதல், களிமண் செய்முறை, படங்களை ஒன்றிணைத்தல் இந்தப் பயற்சிகளுள் அடங்கும்.

## மழலையர் பள்ளி ஆசிரியரின் அர்ப்பணிப்பு வாக்குறுதி

அனைத்து மழலையர் பள்ளி ஆசிரியர்களும் அர்ப்பணிப்பு வாக்குறுதிகளை நன்கு புரிந்து கொண்டு பொறுப்புணர்ச்சியுடன் அதனைக் கைகொள்ள வேண்டும்.

- ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான மரியாதையைக் கொடுத்தல் அவசியம். ஒவ்வொரு குழந்தையின் தேவைகள், திறன்கள் மற்றும் ஆர்வங்கள் என ஒவ்வொன்றும் வேறுபடும். குழந்தைகளின் திறன்களும் மேம்பட வேண்டும்.
- அனைத்து குழந்தைகளையும் சமமாக நடத்த வேண்டும். குழந்தைகளுக்கான பயிற்சிகளை வடிவமைக்கும் போது அவர்களின் வயது, பாலினம், மதம், சமூக மற்றும் கலாச்சார பின்புலம், வாழும் சூழல் போன்றவைகளைக் கருத்தில் கொள்ளுதல் நன்று.
- குழந்தைகளுக்குப் பாதுக்காப்பான சூழலை உருவாக்குவதோடு அதன் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அன்பு மற்றும் அரவணைப்போடு குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும்.
- நேர்மறைப் பழக்க வழக்கங்களை மழலையரின் மனதில் வளர்க்க உறுதுணை செய்ய வேண்டும். குழந்தைகளை அடித்தல் அல்லது அவமானப்படுத்தும் எந்தத் தண்டனைகளும் கொடுக்கக் கூடாது.
- குழந்தைகள் குழந்தைகளிடம், பெரியவர்களிடமும் சகஜமாக நேர்மறையான கலந்துரையாடல்கள் ஆற்ற ஊக்குவிக்கலாம்.
- நமது நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் குழந்தைகளிடம் எதிர்காலத்தில் விளைவுகளை உருவாக்கும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கிடையே ஆரோக்கியமான உறவுகளை வளர்க்க வேண்டும்.
- மழலையரின் பெற்றோர்களின் பலத்தையும், திறமைகளையும் அறிந்து அவர்களை ஊக்குவிக்கலாம்.
- மழலையரின் பெற்றோர்கள் மற்றும் ஊர் மக்களைப் பள்ளி நிகழ்ச்சிகளில் முடிந்தளவு ஈடுபடுத்த வேண்டும்.
- குழந்தைகளுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்குமாறு இருக்க வேண்டும்.
- குழந்தைகளுக்குப் பாதுக்காப்பான, சுகாதாரமான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்கள் விளையாடும் உபகரணங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
- நீங்கள் மழலையருக்கு ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

# கருப்பொருளை மையப்படுத்திய கற்றலில் மழலையர் வகுப்பறை

### கருப்பொருளை மையப்படுத்திக் கற்றல் சூழலை உருவாக்கக் காரணங்கள்

இன்றைய மழலைகள், எதிர்கால இந்தியாவைத் தாங்கப் போகும் தூண்கள். எனவே மழலையர்களை வழிநடத்துதலை கவனத்துடன் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

குழந்தைகளின் மொழி மற்றும் அறிவு வளர்ச்சியுடன் நுண்தசை, பெருந்தசை இயக்கங்களை மேம்படுத்துதல், அவர்களின் மன எழுச்சிகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல், அவர்களிடம் சமூகச் சூழலோடு இயைந்து வாழ்வதற்கான நற்பண்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய கற்றல் சூழலை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டியதை எனது பணியின் முக்கிய அம்சமாக உணர்ந்தேன். மேலும் குழந்தைகள் எவ்வித கண்டிப்பும், நிர்பந்தமும், இன்றி அவர்களாகவே எளிதாகக் கற்பதற்கானக் கற்றல் சூழலை ஏற்படுத்த வேண்டியதைக் கவனத்தில் கொண்டேன்.

அடிப்படையில் கற்பித்தல் என்ற பெயரில் எழுத்துகளையும் எண்களையும், குழந்தைகளிடம் திணிப்பதில் பல்வேறு உத்திகளைக் கையாண்டாளும், அவை குழந்தைகளை மட்டுமின்றி என்னையும் சோர்வடைய வைத்தன. சமூகம், வாழ்க்கை, இயற்கை சார்ந்த விஷயங்களைப் புதிய உத்திகள் மூலம் அறிமுகப்படுத்த நினைத்தேன்.

### செயலாக்கப் பகிர்வு :

காய்கறிகள் என்ற தலைப்பை மையப்படுத்திய செயலாக்கச் சூழலில் மழலைகளுடனான என் அனுபவத்தைப் பகிர்கிறேன்.

### மொழிவளர்ச்சி

மொழிவளர்ச்சி என்பது பிள்ளைகளுடனான உரையாடலுக்கு முக்கியத்துவம் தருவதாக இருக்கவேண்டும். உரையாடலின் போது பிள்ளைகள் கற்பனைகளை இணைத்தோ தவறாகவோ கூறும்போது உடனடியாக அதைத் தவறு என்று சொல்வது தவிர்க்கப்பட வேண்டும். தவறு என்றும் கூறும் பட்சத்தில் குழந்தைகள் ஒரு வித கூச்சத்திற்கு ஆட்பட்டு மனதில் நினைப்பதை கூறத் தயங்கி தெரிந்ததைக் கூட பேசாமல் இருந்துவிடுவர். இவ்வுரையாடலின்போது குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களையும், அவர்கள் எழுப்பும் வினாக்களையும் கருத்தில் கொண்டு அடுத்தடுத்த நாட்களுக்கான உரையாடல் அமைக்கப்பட்டது.

முதல்நாள் காய்கறிகள் மற்றும் பட அட்டைகள் மூலம் காய்கறிகள் பற்றிய உரையாடல் நடந்தது. உங்கள் வீடுகளில் அம்மா என்னென்ன காய்கறிகள் சமைப்பார்கள் என்ற கேள்வி எழுப்பப்பட்டவுடன் காய்கறி பெயர்களை எல்லாம் கூறினர். அப்போது எல்.கே.ஜி. குழந்தை ஒன்று என் அம்மா மீன் குழம்பு, கறி



குழம்பு வைப்பார்கள் என்று கூறிய பொழுது அக்குழந்தைக்குக் காய்கறிகள் எங்கிருந்து கிடைக்கிறது என்பதற்கானப் புரிதல் இல்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. யு.கே.ஜி. குழந்தைகள் சிலர் காலிப்ளவர். முட்டைக்கோஸ் பெயர்களைச் சரியாகக் கூற இயலாமல் ஒருவர் கூறுவதை மற்றொருவர் மறுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர்களாக வந்து இரண்டிற்குமானப் பெயரை என்னிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர். உரையாடலுக்குப் பின் காய்கறிகளின் பெயர்களில் இருந்து p என்ற எழுத்தை அறிமுகப்படுத்தி எந்தெந்த காய்கறி பெயர்களில் அவ்வெழுத்து உள்ளது என்பதை அடையாளம் காட்டச் செய்தேன்.

பிள்ளைகளின் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக இரண்டாம் நாள் செடிகள் மற்றும் மரங்களில் விளையும் காய்கறிகள் பற்றியும், மூன்றாவது நாள் படர்கொடி, ஏறுகொடி, மண்ணிற்குள் விளையும் காய்கறிகளைப் பற்றியும், நான்காம் நாள் விதையுள்ளக் காய்கறிகள், விதையில்லாக் காய்கறிகள் பற்றியும், ஐந்தாம் நாள் எந்தெந்த காய்கறிகள் நம் உடலின் எந்தெந்த உறுப்புகளுக்குப் பயனளிக்கின்றன என்பது பற்றியும் உரையாடல் மற்றும் கற்றல் நடந்தேறியது. ஒவ்வொரு நாளும் எழுத்துக்களை அடையாளம் காட்டுதலையும் பிள்ளைகள் தொடர்ந்தனர்.

இத்தகைய உரையாடல் மூலம் பிள்ளைகள் யோசித்து வார்த்தைகளை இணைத்து வாக்கியங்களாக்கிப் பேசும் திறன்பெறுவதோடு தெளிவாக உச்சரிக்கும் திறனும் பெறுகின்றனர். இத்திறன் மேல்வகுப்புகளுக்குச் செல்லும் போது பாடரீதியாக மனதில் தோன்றும் சந்தேகங்களை, வார்த்தைகளாக அமைத்து வினாக்களாக மாற்றி ஆசிரியரிடம் தன்னம்பிக்கையுடன் பேசி பதில் பெறுவதற்கான திறனை ஏற்படுத்துகிறது.

## அறிவு வளர்ச்சி :

மழலையர்களுக்குப் பொதுவாக வண்ணம், வடிவம், இடம், பொருட்கள், இயற்கையின் விநோதங்கள், நிகழ்வுகள் போன்றவற்றுடனானத் தொடர்புகள் மேலோட்டமானதாகவும், ஐயப்பாடுகள் நிறைந்தாகவும் இருக்கின்றன. எனவே மேலே

**இத்தகைய உரையாடல் மூலம் பிள்ளைகள் யோசித்து வார்த்தைகளை இணைத்து வாக்கியங்களாக்கிப் பேசும் திறன்பெறுவதோடு தெளிவாக உச்சரிக்கும் திறனும் பெறுகின்றனர். இத்திறன் மேல்வகுப்புகளுக்குச் செல்லும் போது பாடரீதியாக மனதில் தோன்றும் சந்தேகங்களை, வார்த்தைகளாக அமைத்து வினாக்களாக மாற்றி ஆசிரியரிடம் தன்னம்பிக்கையுடன் பேசி பதில் பெறுவதற்கான திறனை ஏற்படுத்துகிறது.**

குறிப்பிட்டவைகளின் தனித்துவம், வேறுபாடுகள், தொடர்புகள் ஒற்றுமை ஆகியவற்றை அறியும் விதமாக உற்று நோக்குதல், நினைவுக்குக் கொண்டு வருதல், யோசித்து செயல்படுதல் ஆகிய திறன்களைத் தூண்டுவதோடு, கற்ற விஷயங்களைக் குழந்தைகள் உள்வாங்கிக் கொள்ளும் வகையிலும் கற்றல் சூழல் அமைக்கப்பட்டது.

முதல்நாள் குழந்தைகளிடம் சுரைக்காய், பாகற்காய்களைத் தொட்டுப்பார்க்கச் செய்த போது வழவழப்பு, சொரசொரப்பு ( smooth , rough) வேறுபாட்டையும் அறிந்தனர். இதன்மூலம் அவர்களின் தொடு உணர்வு புலன் மேம்பாடு அடைகிறது. மேலும் பல்வேறு சுவையுள்ள காய்கறிகளைத் துண்டுகளாக்கி பிள்ளைகளிடம் கொடுத்து சுவைக்கச் செய்ததின் மூலம் இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு, சுவைகளின் வேறுபாடு அறிந்து கொண்டனர். இப்புலனறிவு மேம்பாடு குழந்தைகள் மேல்வகுப்புகளுக்குச் செல்லும் போது ஒரு பொருளின் தன்மை, சுவை பற்றியக் கற்றலைத் தெளிவாக்கி அவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ள உதவும்.

இரண்டாம் நாள் பூசணிக்காய், பீட்ரூட் காண்பித்து சிறியது, பெரியது வித்தியாசமும், அதிக எடை, குறைந்த எடை வித்தியாசமும் அறிய வைக்கப்பட்டது. வெள்ளரிக்காய், சுரைக்காய்களை ஒப்பிட்டுக்காட்டி உயரம், குட்டை வித்தியாசமும் அறிய வைக்கப்பட்டது. இதன்மூலம் குழந்தைகள்

பின்னாட்களில் கற்கவிருக்கும் கணிதத்திற்கான முன் பயிற்சியைப் பெற்றனர்.

**colour concept:**

மூன்றாம் நாள் அனைத்து வண்ணக் காய்கறிகளையும் கலந்துவைத்து பச்சை வண்ணக் காய்களை மட்டும் பிரித்து எடுக்கச் செய்ததன் மூலம் பச்சைவண்ணத்தையும், அடர், வெளிர் பச்சை வண்ண வேறுபாட்டையும் அடையாளம் காணும் திறன் பெறுகின்றனர்.

இச்செயலாக்கத்தின் போது எல்.கே.ஜி குழந்தைகளில் சிலர் மிகமிக வெளிர்பச்சையில் இருந்த காய்கறிகளை அடையாளம் காண சிரமப்பட்டனர். எனவே பல வண்ணக்காய்கறிகளின் படங்களை அட்டைகளில் ஒட்டிக் கலந்து வைத்து இச்செயல்பட்டைப் பலமுறை செய்யவைத்ததன் மூலம் அவர்களின் புரிதல் மேம்பட்டது.

**PROBLEM SOLVING**

நான்காம் நாள் மரத்திலான காய்கறி உருவங்களை, மரப்பலகையில் அமைந்திருந்த அவற்றிற்குரியச் சரியான வடிவத்தினுள் பொருத்தினர். இச்செயல்பாட்டைச் செய்தபோது யு.கே.ஜி. குழந்தைகள் முதல் இரண்டு காய்கறிகளைப் போடும் போது சற்று தடுமாறினர். பிறகு காயின் வடிவத்தையும், மரப்பலகையில் இருந்த வடிவத்தையும், ஒப்பிட்டுப்பார்த்து மிக விரைவாகச் செய்து முடித்தனர். எல்.கே.ஜி. குழந்தைகளில் சிலர் ஒவ்வொரு வடிவமாக முயற்சி செய்து அதன் பின் பொருத்தினர். வகுப்பறையில் அதிலும் முன்பு ஈடுபாடுகாட்டாத, ஒதுங்கியே இருக்கும் குழந்தை மிகச்சரியாகப் பொருத்தியதைக் கண்டு வகுப்பே ஆரவாரம் செய்த போது அக்குழந்தை அடைந்த மகிழ்ச்சி எனக்கே ஒரு புது அனுபவமாக இருந்தது.

மிக ஆச்சரியப்படும் வகையில் மனவளர்ச்சிக் குறைபாடு உடைய எல்.கே.ஜி குழந்தை சற்று அதிக நேரம் எடுத்துக் கொண்டாலும் சரியாகச் செய்துமுடித்ததை இச்செயல்பாட்டின் வெற்றியாக எண்ணுகிறேன். இச்செயல்பாட்டின் மூலம் பொருத்துவதற்குச் சிரமப்பட்டபோது, ஏன் பொருந்தவில்லை, எப்படிப் பொருத்தலாம்? எங்கே தவறு நிகழ்கிறது என யோசித்து அவர்களாகவே முயன்று சரியானத் தீர்வுக் காணும் திறனும் பெறுகின்றனர்.

இச்செயல்பாடு மூலம் பெறும் இத்திறன் எந்த ஒரு அறிவுசார் விஷயத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அதனை ஆராயும் திறனை குழந்தைகளிடம் மேம்படுத்துகிறது.

ஐந்தாவது நாள், ஏற்கனவே குழந்தைகள் மொழிவளர்ச்சி உரையாடலில் காணொளி மூலம், தக்காளிச்செடி வளர்த்தலை அறிந்திருந்த நிகழ்வுகள் கற்றல் கருவியாகத் தயாரிக்கப்பட்டது. 1. தக்காளி செடி 2. அச்செடி பூ விடுதல் 3. அது சிறு பிஞ்சாக மாறுதல் 4. பின் தக்காளி வடிவமாக மாறுதல் ஆகிய நிகழ்வுகள் படங்களாக ஒட்டப்பட்ட அட்டைகளைக் கலந்து வைத்து வரிசைக்கிரமமாக அமைக்கும் செயல்பாடு நடந்தது இதில் சிலகுழந்தைகள் பார்த்ததுமே புரிந்துக் கொண்டு விரைவாக முடித்தனர். சிலர் மாற்றி வைத்து பின் சரியாக அடுக்கினர். சில எல்.கே.ஜி குழந்தைகள், .யூ.கே.ஜி குழந்தைகளைப் போல நிகழ்வின் ஒரு பகுதியை உள்வாங்கிக்



கொண்டு தொடர முடியவில்லை என்ற புரிதல் எனக்கு ஏற்பட்டது. பின் விதை போடுதல், செடி துளிர்விடுதல் நிகழ்வுகளின் அட்டையைத் தயார் செய்து அக்குழந்தைகளைச் செயல்பாட்டில் ஈடுபடுத்தினேன்.

இச்செயல்பாட்டின் மூலம் காய்கறிகள் விளைவதை அறிந்து கொண்டதோடு அறிவியல் மற்றும் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளைப்பற்றி பின் நாட்களில் அறியும்போது அவை எப்படி நிகழ்கின்றன? ஒன்றிற்குப்பின் அடுத்த நிகழ்வு என்னவாக இருக்கும்? என்று ஆராய்ந்தறியும் திறன் பெறுகின்றனர்.

இதுபோன்ற அறிவு வளர்ச்சிக்கானப் பல்வேறு செயல்பாடுகளை, எடுத்துக்கொள்ளும் கருப்பொருளுக்கேற்ப உருவாக்கி, கற்றல் கருவிகளை உருவாக்கி, செயல்பட வாய்ப்பளிப்பதன் மூலம், கற்றல் நிகழ்வோடு கற்றல் திறனும் தூண்டப்படுவதால் கற்றல் திறன் குறைபாடுகளை நீக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

## நுண்தசை இயக்கமேம்பாடு (fine motor development)

இதற்கான செயல்பாடுகளாக முதல் நாள் கத்திரிக்காய் படம் வரைதலும், இரண்டாம் நாள் கேரட் படத்திற்கு வண்ணம் தீட்டுதலும், மூன்றாம் நாள் புள்ளிகளை இணைத்துக் சுரைக்காய் படம் உருவாக்குதலும், நான்கு மற்றும் ஐந்தாம் நாட்களில் தக்காளி படத்திற்குச் சிவப்பு வண்ணத்தாள்களைக் கிழித்து ஒட்டுதலும் பிள்ளைகளால் செய்யப்பட்டது.

இத்தகைய செயல்பாடுகள் மூலம் குழந்தைகள் விரல்களை இலாவகமாக இயக்குவதற்கும், குறிப்பிட்ட இலக்கிற்குள் விரல்களைச் சிரமமின்றி இயக்குவதற்கும். நுண்மையான, மென்மையானப் பொருட்களைக் கையாள்வதற்கும், கைகள், கண்கள் ஒருங்கிணைந்துச் செயல்படுவதற்கும், மேல்வகுப்புகளுக்குச் செல்லும் போது எளிதாகவும், வேகமாகவும், எழுதுவதற்கு மற்றும் வரைவதற்கு வேண்டிய திறன் கிடைக்கிறது.

## சமூக மனவெழுச்சி வளர்ச்சி (social emotional development)

குட்டை குட்டை கத்திரிக்காய், பாடல் பற்றிய முன் உரையாடலுக்குப்பின் செய்கைகளோடு பாடி ஆடினர். இப்பாடல் மூலம் சமூகவாழ்வில் நமக்கு முதன்மையானது ஆரோக்கியம் என்பதை உணர்ந்தனர்.

பரங்கிக்காயைப் பறித்துப், பாடல் மூலம் சமைத்தல் என்பது மகிழ்வான செயல் என்பதையும், எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பது மிகமிக மகிழ்வானது என்பதையும் உணர்ந்து கொண்டனர். காய்கறித்தோட்டத்தில் கலாட்டா கதை வாயிலாக ஒவ்வொருவரிடமும் ஒரு திறமை இருக்கும் என்பதோடு, ஒற்றுமையே உயர்வு தரும் என்பதையும் உணர்ந்துக்கொண்டனர். மேலும் கருணை காட்டுதல், பகிர்ந்தளித்தல் ஆகியன நல்ல விஷயங்கள் என்பதையும் உணர்ந்துக் கொண்டனர்.

## பெருந்தசை இயக்க மேம்பாடு:

காய்கறி சேகரித்தல், கண்டுபிடி கண்டுபிடி, காய்கறித்தோட்டம் போடலாம், போன்ற விளையாட்டுக்களை விளையாடியது குழந்தைகளுக்கு ஓடி, ஆடி, குதித்து, குனிந்து, நிமிர்ந்து, அமர்ந்து கைகால்கள் வலுப்பெறுவதற்கும், உடல் தசைகள் வலுப்பெறுவதற்கும், பயிற்சி கிடைக்கச்செய்தன.

மேற்குறிப்பிட்ட கற்றல் சூழலில் குழந்தைகள் கற்பதற்கு ஈடுபாடுகாட்டுவதோடு மகிழ்ச்சியும், அடைகின்றனர். மேலும் வரும் நாட்களில் கல்வி கற்றல் எளிதானதாகவும், இனிமையானதாகவும் மாறி, கற்றல் சுமையல்ல, சுகமானது என்ற உணர்வினை குழந்தைகளுக்கு ஏற்படுத்தும்.




**அமுதா. க.ச.**

முன்மழலையர் ஆசிரியர்
கோலக்கார அரங்கசாமி
நாயக்கர் நடுநிலைப்பள்ளி,
இலாஸ்பேட்டை

# நாடகம் மூலம் மகிழ்ந்து கற்றல்

குழந்தைகளின் மனதில் உற்சாக அலைகளை நொடிப்பொழுதில் பரவவிடும் வல்லமை கலைகளுக்கு உண்டு. அதிலும் நாடகம் என்பது பலவகைக் கலைகளின் கூட்டுச்சேர்க்கை இதன்மூலம் ஓர் ஆசிரியரால் புத்தகத்தையும் தாண்டிய நிகழ்வுகளால் கற்றலை நிறைவு காணச் செய்ய இயலும்.

ஆனால், சந்தர்ப்ப நிர்பந்தத்தால் பாடத்திட்டத்தைப் பின்பற்ற வேண்டிய நிலை வரும்போது, இவை போன்ற நியாய அநியாயங்கள் மதிப்பிழப்பது சகஜமாகி விடுகின்றது. சரியாகவோ, தவறாகவோ நிறைய நாட்களாகவே, வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் திசைமாறிப் போய்விட்டன. சில அதிகப்படியான எதிர்பார்ப்புகளால், உயிரும் உணர்வுமான குழந்தைகள் அங்கே சுயசிந்தனையின் பரிச்சயமின்றி, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாகி வகுப்பறைகளில் தங்களது அடையாளத்தைத் தொலைத்து விடுகின்றனர். குழந்தைகளின் தேவை எவை என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் செய்யப்படுகின்ற எந்தவொரு செயல்பாடும் இவ்வாறு தான் பலவீனமாகி பயனற்று அவலம் கொண்டு விடும்.

இவ்வுண்மையின் தாக்கத்தினால் தான் நாங்கள் எங்களது முன்மழலையர் வகுப்பறையில் கலைகளின் ஆதிக்கத்தை அதிகப்படுத்தியுள்ளோம். இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் இருந்தே குழந்தைகளுக்கான அனைத்துவித உடல் மற்றும் கருத்தியல் வளர்ச்சிக்குக் கலைகளையே அடிப்படைக் கற்பித்தல் கருவியாக்கியுள்ளோம்.

அதற்குச் சான்றாக வண்ணத்துப்பூச்சியும் வண்ணங்களும் என்ற தலைப்பிலான கதையை நாடகமாக்கி நடிக்க வைத்ததன் மூலம் பெற்ற அனுபவத்தை உங்களுடன் இங்கே பகிர்ந்து கொள்கிறோம்.

- **கற்றலில் பின்தங்கியிருக்கும் மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள வகைசெய்யும் கலைவழி கற்றலைக் கைக்கொண்டு, கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை மகிழ்வானதாக்கி வகுப்பறைகளை உயிர்ப்புடன் வைத்திருப்போம்.**
- **நாடகத்தினை மாணவர்கள் தாங்களே பங்கேற்று நடித்தபோது, பலவகை மலர்கள் அவற்றின் பெயர்கள், நிறங்கள், அடிப்படை எண்ணிக்கை அறிதல், நிகழ்வுகளை நிரல்பட நிறுத்திக் கோர்வைப்படுத்தும் திறன், மொழி வளர்ச்சி, உதவி மனப்பான்மை, நடிப்பாற்றலுடன் பெருந்தசை இயக்கச் செயல்பாடுகள் எனப்பலவகை கருத்தியல்களை அனுபவப்பூர்வமாகத் தெரிந்து கொண்டனர்.**
- **கற்றலில் பின்தங்கியிருக்கும் மாணவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ள வகைசெய்யும் கலைவழி கற்றலைக் கைகொண்டு கற்றலை மகிழ்வானதாக்கி வகுப்பறைகளை உயிர்ப்புடன் வைத்திருப்பது அவசியமாகிறது.**

## வண்ணத்துப்பூச்சிகளும் வண்ணங்களும் கதை :

ஒரு நாள் நிறமற்ற வண்ணத்துப்பூச்சி பலவகையான வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கும் தோட்டம் ஒன்றில் பறந்து வந்தது அது, அங்குள்ள மலர்களின் அழகிய வண்ணங்களையே கண்ணுற்ற போது, தனக்கும் இவை போன்ற நிறங்கள் ஏதுமில்லையே என்று தவித்து, தன்னிரக்கம் கொண்டது. அதனுடைய வருத்தத்தைக் கண்ட மலர்கள், அவ்வண்ணத்துப்பூச்சியின் துயரைப் போக்க, தங்களது வண்ணங்களை அதற்குக் கொடுத்தன. நிறமற்றிருந்த அந்த வண்ணத்துப்பூச்சி தற்போது பல அழகிய வண்ணங்கள் பெற்று மகிழ்ச்சி அடைந்தது. இந்தக்கதையைக் குழந்தைகளிடம் சொல்லும் பொழுது பயன்படுத்துவதற்காக



நான்கு பாகங்கள் கொண்ட வண்ணமில்லா பட்டாம்பூச்சி படம் மற்றும் ரோஸ், செம்பருத்தி, சாமந்தி, சங்குப்பூ இவற்றையும் அட்டைகளில் தனித்தனியே ஒட்டினோம்.

ஒவ்வொரு பூவிடமும் செல்லும் பொழுது வண்ணம் பெற்றதைக் காட்டும் வகையில் நான்கு பட்டாம்பூச்சிகளின் இறகுகளில் வண்ணம் இருப்பது போன்ற படங்களையும் அட்டையில் ஒட்டினோம். படங்கள் அனைத்திற்கும் மாணவர்களை வைத்தே வண்ணமும் தீட்டச்செய்ததில் அவர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சி எங்களுக்கும் மாணவர்களைக் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் செய்ய ஈடுபடுத்தியதில் மிக்க மகிழ்ச்சி.

## கதைகூறல்

குழந்தைகளை வட்டமாக அமரவைத்து அட்டைகளை எல்லாம் எடுத்துச் சென்றவுடன் மிகவும் ஆரவாரத்துடன் காணப்பட்டனர். 50 குழந்தைகள் என்பதால் சத்தம் அதிகமாகவே இருந்தது. இரண்டு ஆசிரியர்கள் என்பதால் இருவரும் மிகவும் தொந்தரவு செய்யும் குழந்தைகளின் அருகில் உட்கார்ந்து கொண்டது மிகவும் பயனளித்தது. அட்டைகளுடன் குழந்தைகளிடம் உணர்வுப்பூர்வமான முகத்தோற்றத்துடன், அவ்வப்பொழுது குரலில் ஏற்ற இறக்கங்களுடன் சொன்னபொழுது குழந்தைகளும் கதையில் ஆழ்ந்து விட்டனர். அவ்வப்பொழுது அட்டைப்படங்களைத் தூக்கிக்காட்டிய பொழுதும் மாணவர்களின் விழிகள் விழிப்புடன் இருந்தது தெளிவாகத் தெரிந்தது. ஒரு சில மாணவர்கள் ஆர்வ மிகுதியில் இடத்தை விட்டு எழுந்து வந்து பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

## நாடகத்திற்கான பயிற்சி

நிறம், மலர்கள், எண்ணிக்கை சார்ந்த கருத்தியல் கோட்பாடுகளைக் கற்பிக்கும் முயற்சியில், இக்கதையை மேற்கூறப்பட்டவை சார்ந்த கருத்தாக்கங்களுக்கு ஏற்ப காட்சிகள் அமைக்கப்பட்டு, உரிய துணைப்பொருட்கள் மற்றும் அட்டைகள் தயார் செய்யப்பட்டு நாடக வடிவில் வகுப்பறைக்கு எடுத்துச்சென்ற போது மாணவர்கள் அதை ஆர்வத்துடன் வரவேற்பதை உணர முடிந்தது.

விருப்பமுள்ள மாணவர்களை அழைத்ததும் அனைவரும் எதற்காக அழைக்கின்றோம் என்பது தெரியாமலேயே நான் நீ என்று ஓடி வந்தனர். அவர்களில் அதிகம் சத்தமிடும் மாணவர்களை மட்டும் அழைத்துக் கதை தெரியுமல்லவா என்று ஞாபகப்படுத்தினோம். பின்பு மாணவர்கள் யார் என்ன பாத்திரமாக நடிக்க விரும்புகின்றார்கள் எனக்கேட்டு உறுதி செய்தோம். பின்பு கதையின்படி நடிப்பதற்குப் பயிற்சி கொடுத்தோம். ஆரம்பத்தில் குழந்தைகள் பேசுவதற்குத் தயங்கினார்கள். ஊக்கப்படுத்தி ஒன்று இரண்டு முறை பயிற்சி செய்த பின்பு நன்கு பேச ஆரம்பித்து விட்டார்கள். மேலும், அவர்களுக்குக் கிரீடம் போல் வண்ணத்துப் பூச்சியையும், பூக்களையும் தலையில் சூட்டிய பின்பு மற்ற மாணவர்களும் மிகுந்த உற்சாகமடைந்து நாடகத்தின் மேல் ஆர்வமானார்கள்.

## நாடகமாக நடித்ததால் வந்த பலன்கள் : -

இந்நாடகத்தினை மாணவர்கள் தாங்களே பங்கேற்று நடித்த போது, பலவகை மலர்கள் அவற்றின் பெயர்கள், நிறங்கள், அடிப்படை எண்ணிக்கை அறிதல், நிகழ்வுகளை நிரலாக நிறுத்தி, கோர்வைப் படுத்தும் திறன், மொழிவளர்ச்சி, உதவி மனப்பான்மை, நடிப்பாற்றலுடன் பெருந்தசை இயக்கச்செயல்பாடுகள் எனப்பலவகை கருத்தியல்களை அனுபவப்பூர்வமாகத் தெரிந்து கொண்டனர். நாடகத்தில் குறைந்த மாணவர்களே பங்கேற்றாலும் வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் நாடகம் நன்கு பரிச்சயமானதாக இருந்தது என்றால் அது மிகையாகாது. எழுத்தட்டைகள், படங்கள் அல்லது கரும்பலகையில் எழுதிக்காட்டுதல் என்ற உத்திகளால் மட்டுமே இந்த அளவிற்கு மாணவர்கள் உள்வாங்கிக் கொண்டிருப்பார்களா என்று கேட்டால், அதற்கு விடை நிச்சயம் இல்லை என்று தான் வந்திருக்கும். இது மறுக்க முடியாத நிஷம்.



### சக ஆசிரியர்களின் உணர்வு

- குழந்தைகள் தாங்களாகவே முயற்சி செய்து நாடகம் நடிப்பதற்கு வாய்ப்பளித்து அவர்களுக்கு உதவியது மிக்க மகிழ்ச்சி. இது போன்ற புரிதல்கள் அனைவருக்கும் இருப்பது மிகவும் வியப்பாக இருக்கின்றது.
- மாணவர்களின் வீட்டுச்சூழலுக்கு ஏற்ப வகுப்பறை சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருப்பது மிகவும் நன்றாக இருந்தது.

## நிறைவுரை

குழந்தைகளுக்கான உலகம் ஒரு பூந்தோட்டம், அதில் அடர்ந்த வனத்தின் பாம்புகளின் சீறல்களுக்கும், புலியின் உறுமல்களுக்கும் இடம் தரும் மேலை நாடுகளின் மேல் வர்க்க இரவல்களான சில கற்பித்தல் அணுகுமுறைகளைத் தவிர்ப்போம். கற்றலில் பின்தங்கியிருக்கும் மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள வகைசெய்யும் கலைவழிக் கற்றலைக் கைகொண்டு கற்றலை மகிழ்வானதாக்கி வகுப்பறைகளை உயிர்ப்புடன் வைத்திருப்போம்.




**உமாதேவி. ஆ**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, மீனாட்சி பேட்டை



**சிவகாமசுந்தரி. ம**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, இந்திராநகர்





# எழுத்துகளின் அடையாளம் - எளிய வழியில்

## பின்புலம்:

சென்ற ஆண்டு நான் காமராஜ் நகர் அரசு தொடக்கப்பள்ளியில் பணியாற்றினேன். என் வகுப்பில் மொத்தம் 19 மாணவர்கள் இருந்தனர். அதில் 12 UKG 7 LKG மாணவர்கள். அவர்களை மாணவர்கள் என்று சொல்வதைவிட குழந்தைகள் என்று கூறினால் சரியாக இருக்கும். ஏனெனில் முன் மழலையர்பள்ளி ஆசிரியர்களாகிய நாங்கள் 3 முதல் 5 வயது உடைய குழந்தைகளைப் பராமரிக்கும் தாயாகப் பரிநாமம் எடுக்கிறோம் என்று சொன்னால் ஐயமில்லை.

இக்குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையான பராமரிப்புத் தருவதில் மிக கவனமாகவே இருக்கிறார்கள். எனிலும் அவர்களுக்குப் படிக்க-எழுதத் தெரியாததால் நான் படிப்புத் தொடர்பான அனைத்து விஷயங்களையும் பள்ளிக்கூடத்திலேயே முடித்துவிட முயலுவேன்.

## பணிசார்ந்த அனுபவங்கள் :

நான் கடந்த 13 ஆண்டுகளாக முன்மழலையர் பள்ளி ஆசிரியராகப் பணிசெய்து வருகிறேன். இத்தனை வருட அனுபவத்தில் நான் பெரும் சவாலாகக் கருதிய விஷயம் குழந்தைகளுக்கு எழுத்துக்களைக் கற்பிப்பது. அதற்கு நான் ஒரு சில உத்திகளைப் பயன்படுத்தி,

மாணவர்கள் எழுத்துக்களைப் பிழையின்றி அடையாளம் காட்டிக் கற்பதற்கு செயலாற்றி வருகிறேன். தற்போது என்னுடைய வகுப்பில் உள்ள LKG குழந்தை கூட A to Z எழுத்துக்களை எளிதில் அடையாளம் காண்கிறது.

## அனுபவப் பகிர்வு:

மூன்று வயதில் பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்குக் கற்றல்-கற்பித்தல் என்ற முறையில் இல்லாமல் விளையாட்டு வழியில் எழுத்துக்களை அறிமுகம் செய்தேன்.

முதலில் கரும்பலகையில் A எழுத்தைப் பெரிதாக எழுதி அதை மாணவர்களுக்கு A என்று சொல்ல வேண்டும்.

அதனுடைய வடிவத்தைக் கூறவேண்டும் நான் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே comment கொடுப்பது வழக்கம்.

/ Standing line another / slanting line then ___ sleeping line . Stick மூலம் மாணவர்களுக்குக் கோடிட்டுக் கற்பித்தல் எழுத்துகளின் அறிமுகத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

எழுத்துகளை அறிமுகம் செய்வதற்கு நான் பயன்படுத்தும் முறை என்னவென்றால், முதலில் அந்த எழுத்தை எழுதி எழுத்தின் மீது கற்களை அடுக்கச் செய்துவிடுவேன். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுக்கு எழுத்தின் வடிவம் மனதில் நன்றாகப் பதிந்து விடும்.

ஒவ்வொரு ஆங்கில எழுத்து மற்றும் எண்களுக்குக் குறைந்தது இரண்டு நாட்கள் எடுத்துக் கொள்வேன். கரும்பலகையில் A என்ற எழுத்தைப் பெரிதாய் எழுதி வைப்பேன். இதன் மூலம் எழுத்தின் வடிவத்தை மாணவர்கள் தெளிவாக அடையாளம் காணமுடியும்.

பிறகு ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியே அழைத்து கரும்பலகையில் உள்ள எழுத்தைக் கூறச் செய்ய வேண்டும். அவ்வாறு சொல்லும் போதும் செய்யும் போதும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களும் ஆர்வத்துடன் எழுத்தைக் கூறுவதற்கு முன்வருவார்கள். முதலில் ஆர்வமான மாணவர்களை ஈடுபட வைக்க வேண்டும். இக்குழந்தைகள் படிக்கும்போது பின்தங்கிய மாணவர்கள் கவனிப்பார்கள். இதன் மூலம் அவர்களும் படிக்க ஆர்வம் காட்டினர்.

எழுத்து அறிமுகத்தின் கடைசியாக நான் கற்பிப்பது புத்தகத்தை மாணவர்களே வாசிக்கச் செய்வது.



## சிறு உரையாடல்:

ஆசிரியர்: Hello children இந்தப் பக்கத்துல என்ன இருக்கு?
மாணவர்கள் : ஆப்பிள் மிஸ்
ஆசிரியர் : Very good children. Apple பக்கத்துல என்ன இருக்கு?
மாணவர்கள்: A

இவ்வாறு அனைவரும் சத்தமாகக் கூறுவார்கள்.

இந்த முறையில் மாணவர்களை உற்சாகப் படுத்தும் போது ஆர்வத்துடன் எழுத்துகளைக் கற்பதுடன் எளிதில் அடையாளம் காண்கின்றனர்.

இந்த முறையைப் பயன்படுத்தியே ஒவ்வொரு எழுத்தையும் அறிமுகம் செய்வேன். இவ்வாறாக வாரத்திற்கு ஒரு எழுத்தை எடுத்துக் கொண்டால் முதல் பருவத்தில் A முதல் J வரை மாணவர் எளிதாகக் கற்கின்றனர்.

முதல் பருவம் முடியும் போது மாணவர்கள் அவர்களாகவே A முதல் J வரை படிக்க முடியும்.

இது போலவே இரண்டாம் பருவத்தில் அடுத்த பத்து எழுத்துகளை (K to T) எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதல் பருவத்தை விட இரண்டாம் பருவத்தில் மாணவர்களுக்குப் பள்ளி சூழல் நன்றாகப் பழகிவிடும்.

மூன்றாம் பருவத்தில் மீதமுள்ள 6 எழுத்துக்களை அறிமுகம் செய்வேன். இம்முறை மாணவர்கள் எந்தவிதக் குழப்பமும் இன்றி தெளிவாக எழுத்துகளைக் கற்க ஏதுவாகிறது. என்னுடைய வகுப்பில் LKG மாணவர் A page எடு என்றால் அவர்களாகவே புத்தகத்தில் A பக்கத்தை எடுப்பார்கள்.

ஒரு சில மாணவர்கள் சற்று பின்தங்கி இருப்பார்கள். அவர்களிடம் முதலில் படத்தைக் கொண்டு எழுத்தை வாசிக்கச் செய்வேன்.

Goat-இருக்கும் page எடு என்றவுடன் சரியாக அந்த பக்கத்தை எடுப்பார்கள். பின்னர் goat பக்கத்துல என்ன இருக்கின்றது என்று கேட்பேன். மாணவர்கள் ஆர்வத்துடன் G என்று சரியாகச் சொல்லுவார்கள்.

ஒரு சில குழந்தைகள் சொல்வதற்குத் தயங்கும். அவர்களை நாம் உற்சாகப்படுத்தி goat பக்கத்துல G இருக்கு, என்ன இருக்கு, G இருக்கு என திரும்பத் திரும்பக் கூறினால் மாணவர்கள் அதை கற்பது எளிதாகும்.

பொதுவாக அரசுப்பள்ளி மாணவர்களின் பெற்றோர் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அந்த மாணவர்களின் கற்றல் என்பது நம்முடைய தலையாயக் கடமையாகிறது. என்னுடைய பணியை நான் மிகவும் சிறப்பாகச் செய்தேன் என்பதில் பெருமிதம் அடைகிறேன்.

## முடிவுரை:

மூன்றாம் பருவத்திற்கு மாணவர்கள் வரும் பொழுது அவர்களாகவே புத்தகத்தை எடுத்துப் படிப்பார்கள். நாம் மாணவர்களிடம் ஏதாவது ஒரு பக்கத்தை எடுக்கச் சொன்னால் சரியாக எடுப்பார்கள்.

Chart-ல் உள்ள எழுத்துகளை அவர்களாகவே சொல்வார்கள்.
கல்வி ஆண்டின் இறுதியில் மாணவர்களிடம் இருந்த கற்றல் ஆர்வமும் திறனும் கல்விஸ்ஆண்டின் தொடக்கத்தில் இருந்ததை விட இம் முறையினால் மேம்பட்டது.



**கு. கன்னிகா**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, காமராஜ் நகர்

# என் வகுப்பறையும் விளையாட்டும்

முதல் நாளில் பயந்து அரண்டு வரும் பிள்ளைகளுக்கு நாம் யார் என்று தெரியாது. நமது முகம் அந்நியமாக இருக்கும். யாரோ ஒருவர் நம்மை அம்மாவிடம் இருந்து பிரிக்கிறார்கள் என்று அழுது அடம் பிடித்து, விழுந்து, கை கால்களை அசைத்து, எட்டி உதைத்துக் கூச்சலிடும் அக்குழந்தைகளுக்கு எப்படித் தெரியும் நான் தான் அவர்களின் ஆசிரியர் என்று. அம்மாவின் மடியிலிருந்து கீழே இறங்கும் இடம் பள்ளி என்பதாலோ, வேறு ஒருவரிடம் நம்மை விட்டுவிட்டு செல்கிறார்கள் என்பதாலோ அவர்களின் அழுகை நிற்பதற்கு சில மணி நேரமோ அல்லது சில நாட்களோ ஆகலாம். நான் கொடுக்கும் சாக்லேட்டைக் கூட வாங்க மறுக்கும் பிள்ளைகளே ஏராளம்.

வகுப்பறையில் விளையாட்டுப் பொருட்கள் இருந்தாலும் அதைப் பார்த்துக் கொண்டே அழுவார்கள். சில பிள்ளைகள் தொட்டுப் பார்ப்பார்கள் நாம் விளையாடலாமா என்று கேட்டுப் பக்கத்தில் போனால் அவர்கள் நம்மைப் பார்த்துப் பயந்து அமைதியாக நிற்பார்கள். எனக்கும் என் பிள்ளைகளுக்கும் எப்பொழுதும் ஒரு பிணைப்பு இருக்க வேண்டும் என்று நினைப்பேன். முதல் நாளிலிருந்து நான் அவர்களுடன் இணக்கமாக இருக்கவே விரும்புவேன். பள்ளிக்கு வர ஆர்வமும், பெயரைக் கேட்டு அறிமுகம் ஆகவும் மேலும் பேச வைக்கவும், என்னை அவர்கள் பக்கத்தில் அனுமதிக்கவும் இந்நாள் வரை விளையாட்டு எனக்குச் சிறந்த வழியாக இருந்து வருகிறது..

பள்ளியின் ஆரம்ப நாட்களில் நான் ஒரு அட்டைப்பெட்டியுடன் வந்து அமர்ந்து விடுவேன். ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் மட்டும் தான் என்னவாக இருக்கும் என்ற ஆர்வத்தில் பக்கத்தில் வந்து அமர்வார்கள். ஒரு விளையாட்டு விளையாடலாமா என்று ஆரம்பித்து அந்தப் பெட்டியின் உள்ளே கையை விட்டு, வெளியே எடுக்கும் போது குட்டி நாய் பொம்மையை நான் காட்ட “அய்...யி நாயி” என்று ஒரு குரல். ஆமாம் நாய் தான். நீ பார்த்து இருக்கிறாயா? எங்கே பார்த்து இருக்க என்று கேட்டு முடிப்பதற்குள்! எங்க வீட்டில் இருக்கு “பெரிசா” இது “சின்னது” என்று மழலை மொழியில் பதில் வரும். அப்படியா உங்க வீட்டில் இருக்கா என்று கேட்டு மேலும் பேச வைத்தது, அவர்களுடன் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தியது.

அப்படியே அவன் பெயரைக் கேட்டுக் கைதட்டி, சாக்லேட் கொடுத்து, கொஞ்சுவதைப் பார்த்து ஒவ்வொரு பிள்ளையாக வந்து அருகில் அமர்வார்கள். இப்படி விளையாட்டின் மூலம் அவர்களுடன் நெருக்கமாகி பின் பாடத்தைப் போதிப்பதை ஒரு வழக்கமாக்கிக் கொண்டேன்.

> "
> **முதல் நாளிலிருந்து நான் அவர்களுடன் இணக்கமாக இருக்கவே விரும்புவேன். பள்ளிக்கு வர ஆர்வமும், பெயரைக் கேட்டு அறிமுகம் ஆகவும் மேலும் பேச வைக்கவும், என்னை அவர்கள் பக்கத்தில் அனுமதிக்கவும் இந்நாள் வரை விளையாட்டு எனக்குச் சிறந்த வழியாக இருந்து வருகிறது..**

அந்த விளையாட்டில் என் நினைவில் பதிந்த சில மட்டும்.

சீப்பு: “பச்சை கலர் சீப்பு, இதுல தான் பொம்மைக்குத் தல சீவுவேன்.”

பூனை பொம்மை: “பூன பொம்ம. இது வந்து சோறு சாப்பிடும்.”

விசில்: “பஸ்சுல ஊதுவாங்க. அத்தை வீட்டுக்குப் போவேன்.”

பந்து: “அய்...யி பந்து (ball) எனக்கு தாங்க மட்டையால (Bat) அடிச்சி விளையாடலாம்.”

ஆப்பிள்: “இது சாப்பிட்டா சத்து.” – இது போல் நிறைய. இதன் மூலம் பிள்ளைகளுக்குத்




தெரிந்தவைகளை நான் தெரிந்து, புரிந்து கொண்டு, பழக உதவியாக இருந்தது.

இங்கு ஆரம்பிக்கும் எங்களின் அறிமுகம் பின் மிக நெருக்கமாகும் போதுதான் அவர்களுக்கு நான் ஆசிரியராக (Miss) ஆக, அம்மாவாக, விளையாட்டுத் தோழியாக, அக்காவாக, அத்தையாக, சித்தியாக பார்க்கிறார்கள் என்று அவர்கள் கூப்பிடும் போதுதான் தெரிந்து கொள்வேன்…


இந்த விளையாட்டு எழுத்துக்களை அறிமுகம் செய்யவும் பாடப்பொருளை (Themes) எடுக்கும் பொழுதும் மிகவும் உதவியது. அவர்களுக்குத் தெரிந்ததில் இருந்து தெரியாததைச் சொல்லிக் கொடுக்கும்போது பிள்ளைகளின் புரிதல் நன்றாக இருந்தது, குழந்தைகள் சொல்லும் செய்திகளை வைத்தே நான் சொல்ல நினைத்த கருத்தைக் சொல்லி முடித்து விடுவேன்.

விளையாட்டின் மூலம் தொடங்கும் அறிமுகம் நெருக்கமாகவும் பாடமாகவும் மாறிய இந்த ஓராண்டு பயணம் ஒரு நல்ல அனுபவத்தையும் கற்றலையும் உருவாக்கியது. விளையாட்டின் மூலம் பிள்ளைகளுடன் எளிதில் நெருங்கலாம் என்ற புரிதலையும் எனக்குக் கொடுத்தது.



**மகேஷ்வரி. மா**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, மணவெளி (அ)

# குழந்தைகள் மனதில் உருவான காய்கறிகள்



எனது பள்ளியில் மொத்தம் 120 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பள்ளிக்கு மிக அருகாமையில் உள்ள தெருக்களில் வசித்து வருகிறார்கள். இவர்களில் மிகவும் கஷ்டப்படும் ஏழை தொழிலாளர்களின் குழந்தைகள் தான் அதிகம். பெரும்பாலான குழந்தைகள் பெற்றோரிடம் இல்லாமல் உறவினர்களோடு இருந்து படித்து வருகின்றனர். இக்குழந்தைகளின் வீட்டுச்சூழல் என்பது ஒரே ஒரு அறை மட்டும் தான். அதோடு, பல வீட்டில் கழிப்பிட வசதி கூட கிடையாது. இப்படி ஒவ்வொரு சூழ்நிலையும் இக்குழந்தைகளின் மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய மனச்சூழலில் இருக்கும் குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்க நான் அந்தப் பள்ளிக்குச் செல்கிறேன். இதனால் தான் இவர்களின் உடல்நலத்தில் அக்கறை கொண்டு இவர்களின் அன்றாட தேவைகளான காய்கறிகளைப் பற்றி அவர்களுக்குத் தெளிவாக விளக்கி பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு இந்தக் காய்கறிகள் தலைப்பை நான் எடுத்துக்கொண்டேன்.


## காய்கறிகள் - திட்டமிடல்

காய்கறிகளைப் பற்றிக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்று நினைக்கும் போதே பலவித யோசனைகள் எனக்குத் தோன்றியது. என்னுடைய முதல் நோக்கம் காய்கறிகளின் முழுப்பயனையும் குழந்தைகள் அறிய வேண்டும். காய்கறிகளை வெறுத்து ஒதுக்கும் குழந்தைகள் ஆர்வமாகக் காய்கறிகளை உண்ண வேண்டும்.

## செயல்பாடுகளின் மூலம் காய்கறிகள்:

முதல்நாள் வகுப்பறையில் யார் யாருக்கெல்லாம் என்னென்ன உணவுகள் உண்ணப் பிடிக்கும் என்ற கேள்வியைக் கேட்டேன், மாணவர்கள் மீன்குழம்பு, முட்டை பிரியாணி என்று பலவிதமான உணவுகளைக் கூறினர். அப்புறம் என்று கேட்கும் போது சாம்பார், காரக்குழம்பு என்றனர். பின்பு காய்கறிகளில் என்ன பிடிக்கும் என்ற கேட்டபோது குழந்தைகள் உருளைக்கிழங்கு, கேரட், வெண்டைக்காய் போன்ற சில காய்களை மட்டும் கூறினர். சிலர் காய்கறிகளே பிடிக்காது

என்றும் கூறினர். இந்தச்சூழலில் அவர்களின் முன் அனைத்துக் காய்கறிகளையும் மேசை மீது அடுக்கி வைத்தேன். அதைப்பார்த்ததும் அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. மிஸ் இது என்ன? அது என்ன? என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களைச் சொல்லச் சொன்ன போது இது வெங்காயம், தக்காளி, கேரட், உருளைக்கிழங்கு, கத்திரிக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், பீட்ரூட், பீன்ஸ், பச்சைமிளகாய்,



மாங்காய், பாகற்காய், முட்டைகோஸ், காலிபிளவர், என அனைத்துப் பெயர்களையும் கூறிவிட்டனர். ஆனால் பூசணிக்காய், சுரைக்காய், சுண்டக்காய், போன்றவற்றில் சிறிது தயக்கம் ஏற்பட்டது.

அடுத்ததாக ஒவ்வொருவருக்கும் காய்களின் படங்களை அவரவர் சட்டையில் ஒட்டி அந்தக் காய்கறிகளின் பெயர்களை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தேன். கேரட் என்று கூப்பிட்டதும் கேரட் படம் உள்ளவர்கள் தாமாக எழுந்து வந்து நின்றுவிட்டார்கள். அதோடு நான் அவர்களிடம் உன் பெயர் என்ன ? நீ என்ன கலர் ? நீ எதற்கு நல்லது? போன்ற கேள்விகளைக் கேட்டு அதன் மூலம் அவர்களுக்கு அந்தக் காய்கறிகளைப் பற்றி நன்கு புரிதலை ஏற்படுத்தினேன். அதனோடு சேர்த்து ஆங்கில வாக்கிய முறையையும் சொல்லிக்கொடுத்தேன்.

இதே போல் பீட்ரூட் என்றதும் பீட்ரூட் படம் யாரிடம் இருக்கிறதோ அவர்களே தாமாக முன்வந்து, நான் தான் பீட்ரூட், நான் சிவப்பு கலராக இருக்கிறேன். என்னைச் சாப்பிட்டால் வாய் எல்லாம் சிவப்பா இருக்கும் என்று மாணவன் கூறியதற்கு, மகிழ்ந்த நான் , ஆமாம் பீட்ரூட் சாப்பிட்டால் இரத்தம் ஊரும் (beetroot enhances the blood) என்ற வாக்கியத்தை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்தேன். இதே போல் முருங்கைக்காய், வெங்காயம், தக்காளி, வெண்டைக்காய் போன்ற காய்கறிகளையும் மனதில் பதிய வைத்தேன்.

நான் அவர்களை அந்தப் படங்களைக் கிழிக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு கூறினேன். அதோடு அவர்களைக் கிழிக்காமல் பார்த்துக்கொள்ள ஊக்கப்படுத்தினேன். ஆனால் அந்தக் காய்கறிகளின் பயனை மனதில் பதிய வைக்கும் நோக்கத்துடன் 'காய்கறிகள் ராஜா' என்ற கதையை மறுநாள் சொன்னேன்.

அதே நேரத்தின் மறுநாள் வீட்டிலிருந்து வரும்போது அவரவர் சட்டையில் என்ன காய் ஒட்டியிருந்ததோ அதே காய்கறிகளை வீட்டிலிருந்து எடுத்து வரச்சொன்னேன். நானும் இன்னும் சில காய்கறிகளைக் கொண்டு வந்து காய்கறிக் கடை வைத்தோம். அதில் கடைக்காரராக ஒரு மாணவன் தலையில் தலைப்பாகைக்கட்டி அமர்ந்து கொள்ள, கையில் துணிப்பையுடன் புடவை கட்டிக்கொண்டு ஒரு மாணவி கடைக்குச் செல்கிறாள். அங்கே அந்த மாணவி ஒரு கேரட் வேண்டும் என்று கேட்க, நான் ஒரு கிலோ, அரை கிலோ என்று தான் கேட்க வேண்டும் என்று அவளைத் திருத்தினேன். இதன் மூலம் அவர்கள் எடையைக் கற்றுக்கொண்டார்கள்.

அடுத்ததாகப் பாடப்புத்தகத்தில் இருக்கும் காய்கறிகள் பற்றிய பாடலை ஆடல் பாடலுடன் சொல்லிக்கொடுத்தேன். அது குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது.

குண்டு குண்டு கத்தரிக்காய் ......
உருண்டையான சுண்டைக்காய்.....

அடுத்ததாகப் பயன்படுத்தக் கற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் தினமும் snacks-க்குப் பதிலாகப் பச்சைக் காய்கறிகளைக் கொண்டு வரச்சொன்னேன். அப்போது அவர்கள் Miss பச்சைக்காய்கறிகள் என்றால் என்ன? என்று கேட்க, அவர்களிடம் கேரட், வெண்டைக்காய், மாங்காய், இவற்றையெல்லாம் வெட்டி ஒவ்வொரு

துண்டாகச் சாப்பிடக் கொடுத்தேன். இதுதான் சமைக்காமல் சாப்பிடக்கூடிய உணவுகள் பச்சைக்காய்கறிகள் இவற்றைச் சாப்பிட்டால் நிறையச் சத்துக்கள் கிடைக்கும் என்றும் கூறினேன். இதன் மூலம் இவர்களுக்குச் சுவைகளைக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு பாகற்காய் கசக்கும், மிளகாய் உரைக்கும் என்ற பாடலைப் பாடிவிட்டு அனைத்துச் சுவைகளையும் கொடுத்துச் சுவைக்கச் சொன்னேன். இது குழந்தைகளுக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. இதன் மூலம் மாணவர்கள் காய்கறிகளை வீணாக்குவதைத் தவிர்த்தனர்.

ஒரு நாள் ஒரு மாணவன் கேரட் கொண்டு வரும் வழியில் ஒருவர் அவனைப் பார்த்து கேரட் சாப்பிட்டு உடம்பை தேத்து என்று சொல்ல அதற்கு அவன் கேரட் சாப்பிட்டு என் கண்ணைத் தேத்த போறேன் என்று சொல்ல அவன் அம்மாவும் மகிழ்ச்சியாக வந்து என்னிடம் சொன்னார்கள். காய்கறிகளைக் கொண்டு சிறியது, நீளம், குட்டை, உயரம், மெல்லிய, பருத்த போன்ற வார்த்தைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் கற்றுக்கொடுத்தேன். இதில் snacks - க்கு கேரட் கொண்டு வந்து சாப்பிட்ட ஒரு குழந்தைக்குக் கண்ணில் நீர்வடியும் பிரச்சனை நீங்கிவிட்டது.

அடுத்தது குழந்தைகளுக்குக் காய்கறிகளின் படங்களைக் கொடுத்து வண்ணம் தீட்டச்செய்தேன். இதன்மூலம் குழந்தைகள் வண்ணங்களை நன்கு தெரிந்து கொண்டனர்.

அடுத்ததாகக் காய்கறி விளையும் தோட்டம் பற்றியும் தோட்டத்தில் விளையும் காய்கறிகளைப் பற்றியும் எடுத்துச்சொல்லி, வீட்டில் செடி வளரத் தேவையானவை எவை என்று கேட்க, குழந்தைகள் தண்ணீர் என்றார்கள். பிறகு செடி வளர விதை, தண்ணீர், சூரிய ஒளி, வளமான மண் முதலியவை தேவை எனக்கூறி தினந்தோறும் செடிக்குத் தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டும். செடிகளைப் பிய்த்துப் போடக்கூடாது என்று சொல்லிக்கொடுத்தேன்.

இதனோடு செடியில் வளரும் காய்கள், கொடியில் காய்க்கும் காய்கள், மரத்தில் இருக்கும் காய்கள் என்னென்ன என்று சொல்லிக்கொடுத்தேன் .

செடி வளர்ப்பிற்காக ஒரு பாடலையும் சொல்லிக்கொடுத்தேன்,

‘ஒரு குடம் தண்ணீர் ஊத்தி ஒரே பூ பூத்துச்சாம்
இரண்டு குடம் தண்ணி ஊத்தி ரெண்டே பூ பூத்துச்சாம்…’

என்ற பாடலையும்

‘திமுக்குத் தக்கா திமுக்குத் தக்கா திமுக்குத் தக்காளி…
சக்கைப் பிழிந்து போட்ட இடத்தில் செடி முளைச்சாச்சு…’

என்ற பாடலைப் பாடவைத்து அதில் விதை போட்டால் செடி முளைக்கும் என்பதை எடுத்துக்கூறி செடி வளர்ப்பின் அவசியத்தையும் சொல்லிக் கொடுத்தேன்.

கடைசியாகக் குழந்தைகளிடம் வெள்ளைத்தாளில் பல வண்ணங்களில் காய்கறிகளின் உருவத்தைப் பதிய வைத்தேன் கையைப் பயன்படுத்தி கேரட்க்கு மேல் உள்ள பச்சை இலை போல பதிவை ஏற்படுத்தினேன். அடுத்ததாகக் காய்கறிகளின் படங்களைக் கொடுத்து வண்ணம் தீட்டச்செய்தது அடுத்தது காய்கறிகளைத் தானே வரைந்து வண்ணம் தீட்டச் செய்தது போன்ற பல வழிகளில் காய்கறிகள் குழந்தைகள் மனதில் பதியவும் அவர்கள் பயன்படுத்தியும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தோடு – எங்கள் பள்ளியில் நுழைவாயில் அருகில் உள்ள சுவரில் vegetables என்ற தலைப்பில் காய்கறிகளை வரைந்து அவற்றுக்கான வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன. குழந்தைகள் ஆர்வத்தோடும் மன மகிழ்ச்சியோடும் கற்றுக்கொண்டனர். இது பள்ளியில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் காய்கறிகளைப் பற்றி மகிழ்ச்சியான முறையில் அறிய உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.



**கஸ்தூரி. லோ**
முன்மழலையர் ஆசிரியர்
மகாத்மா காந்தி அரசு
நடுநிலைப்பள்ளி.
நெல்லித்தோப்பு

# ஒரு குடம் தண்ணீர் ஊற்றினால் ஒரு பூதான் பூக்குமா?

## மழலையர் வகுப்புச் சார்ந்த அனுபவங்கள்:

முன் மழலையர் வகுப்பு என்பது ஒரு தோட்டம். அத்தோட்டத்தை நந்தவனமாக்குவது முன்மழலைப்பள்ளி ஆசிரியரின் கடமையாகும். அது ஒரு வரம். காலையில் பள்ளிக்கு வரும் நேரத்திலிருந்து, அவர்களை அரவணைப்பது, பால் குடிக்க அனுப்புவது, வகுப்பறையில் இறைவணக்கம் செய்ய வைப்பது என ஆசிரியர் பணி ஆரம்பிக்கிறது.

குழந்தைகளுடன் அளவளாவிப் பேசி, ஆடிப்பாடித்தான் வகுப்பறை சூழலுக்கும் கற்றலுக்கும் அவர்களை ஈடுபடுத்த முடியும்.

ஒரு குழந்தையின் தாய்க்கு இணையாக அக்குழந்தையுடன் பயணித்து அதன் உடல் மற்றும் அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு வித்திடுவது முன்மழலையர் ஆசிரியரின் கடமை.

மழலையர்களுக்கு ஒரு தாயாக, குழந்தைகளுடன் குழந்தையாக, சிற்சில நேரங்களில் ஆசிரியராகப் பன்முகத்துடன் அவர்களின் அனைத்து விதமான வளர்ச்சிகளையும் தூண்டச்செய்வதே சென்ற வருடம் எனது பெரும் முயற்சியாக இருந்தது.

## ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததன் காரணம்:

என் குழந்தைகளின் வளர்ச்சிக்காகக் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தவும். என் அனுபவங்களையும், கருத்துக்களையும் ஆசிரியர் வட்டத்தில் பகிர்ந்து கொள்ளவும் பிற ஆசிரிய சகோதர, சகோதரிகளின் கருத்துக்கள், பணிசார்ந்த செயல்பாடுகளையும் அறிந்து என் வகுப்பறையைச் செம்மைப்படுத்தும் நோக்கிலேயே ஆசிரியர் வட்டத்தில் இணைந்தேன்.

## வகுப்பறைச் சவால்கள்:

எல்லா குழந்தைகளையும் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்துவது ஒரு சவாலான காரியமாகும்.

எல்லா வயதுக் குழந்தைகளும் நான் கூறுவதை உரிய விதத்தில் புரிந்து கொள்கின்றனரா? அவர்களுக்குத் தேவையான வளர்ச்சிகளை உரிய விதத்தில் பெறுகின்றனரா என்பது என் மற்றொரு சவால்.

## நோக்கத்தை அடையத் திட்டமிட்ட விதம்:

1. அளவீடுகள் பற்றி அறியச்செய்தல், அதற்கான செயல்முறைக் கற்றலைத் திட்டமிடல்

2. குழந்தைகளுக்கு விளையாட்டின் மூலமும் பாடல்கள் மூலமும் கணித அறிவை பெறச்செய்வது

## கற்றல், கற்பித்தல் செயல் திட்டம் மற்றும் துணைக்கருவிகள்:

சிறிய பிளாஸ்டிக் குடங்கள், கரும்பலகையில் வரைந்தும் பெயர்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி கூறச்செய்தல்.


'ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூ பூத்தது என்ற பாடல் மூலம் விளையாடச் செய்தல்.

எழுத்துப்பயிற்சி அளிக்க மணலில் எழுதச் செய்தல், கற்களைக்கொண்டு எழுத்துக்களை உருவாக்குதல். தானியங்களைக் கொண்டு எழுத்துக்கள் மீது ஒட்டுதல். பொட்டுகள் ஒட்டுவது. எழுத்துக்கள் மீது வண்ணம் தீட்டுதல் பின் கரும்பலகையில் எழுதவைத்தல்.

எழுத்துக்களைப் பெரியதாக எழுதி அதன்மேல் நிற்றல் என்ற விளையாட்டின் மூலம் கற்பித்தல்.

## கற்பித்தல் செயல் திட்டம்: 1

அளவீடு பற்றிய அறிதலுக்கு இரு பிளாஸ்டிக் குடங்களை எடுத்துக்கொண்டேன். ஒன்றில் நிறைய




(3/4) அளவு தண்ணீரும் மற்றொரு குடத்தில் கால் (1/4) பங்கு தண்ணீரும் ஊற்றிக் காண்பித்து குறைவு மிகுதி ஆகிய இரு அளவுகளைக் கற்றுக்கொடுத்தேன். ஆங்கிலத்தில் 'more, less' என்றும் கூறினேன்.

கரும்பலகையில் குடங்களை வரைந்து காண்பித்து அவற்றின் கீழ் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதிப் படிக்கச்செய்தேன். பட அட்டைகளிலும் எழுதிப் படிக்கச்செய்தேன்.

மேலும், அவர்களுடைய தண்ணீர் பாட்டில்களைக் காண்பித்தும், மதிய உணவுப்பாத்திரங்களில் உள்ள தண்ணீரைக் காண்பித்தும் 'more, less' சொற்களைப் பழக்கப்படுத்தினேன்.

குழந்தைகள் பால் குடிக்கும் போதும், தண்ணீர் குடிக்கும் போதும் தமிழிலும், ஆங்கிலத்திலும் தண்ணீர் மற்றும் பாலின் அளவு குறித்து அவர்களுக்குள் 'less பால், more பால், more தண்ணி, less தண்ணி' என்று கூறிக்கொண்டது மிகவும் நகைச்சுவையாகவே இருந்தது.

## கற்றல் செயல்முறை திட்டம்: 2

விளையாட்டு முறையில் எண்கள் (கணிதம்) பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டே விளையாடச்செய்தேன்.

இரு குழந்தைகள் மட்டும் எதிரெதிரே நின்று இருவர் கைகளையும் கோபுரம் போன்று உயர்த்திப் பிடித்து நின்றனர்' 'ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூப் பூத்தது இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி இரண்டு பூப் பூத்தது இவ்வாறு பத்துவரை கூறியபடி ஒருவர் பின் ஒருவர் நின்று சட்டையைப் பிடித்துக் கொண்டும், குழந்தைகள் வரிசையாக அந்த இருவர் நடுவில் புகுந்து புகுந்து பாடிக்கொண்டே



ஓடினர். இவ்வாறு ஒன்றிலிருந்து பத்துவரை பாடிக்கொண்டே இருபுறமும் வளைந்து வளைந்து ஓடி விளையாடினர்.

ஒரு குழந்தை மட்டும் என்னிடம் வந்து, மிஸ் மிகுதின்னா 'More water தானே' குடத்தைக் காண்பித்துக் கூறினீர்கள். இப்ப என்னவென்றால் ஒரு குடம் தண்ணீர் (more water) ஊத்துனா ஒரு பூ தான் பூத்தது என்று சொல்லித்தறீங்க? என்று கேட்டான். ஒரு குடம் தண்ணீர் ஊற்றினா



ஒரு பூ தான் பூக்குமா? நிறைய பூக்கள் பூக்காதா? என்று கேட்டான். என்னால் சட்டென்று பதில் கூற முடியவில்லை.

குழந்தைகளிடம் உங்களுக்கு யாருக்காவது தெரியுமா? எனக்கேட்டேன். ஒரு குழந்தை வந்து, டேய் மிஸ் சொன்னது சொப்பு சாமான் குடம்டா இது கூட தெரியலையா? என்று கேட்டாள்.


நானும் இது பாட்டுக்கான இராகத்திற்காகப் பாடப்பட்டது என்றேன், அவர்களுக்குப் புரியவில்லை. 'அணிலும் ஆடும் அ, ஆ வாம்"என்ற பாட்டை உதாரணமாகக் கூறினேன். அ, ஆ என்று தொடங்கும் சொற்கள் அ, ஆ என்று முடிவது போல ஒரு குடம் ... ஒரு பூ என்று முடிகிறது என்று கூறினேன்.

குழந்தைகள் புரிந்தது போலத் தலையாட்டிவிட்டு திரும்பவும் விளையாடச் சென்றனர்.

இக்கற்றல் விளையாட்டு மூலம் குழந்தைகள் சிறியது பெரியது என்ற அளவீடு பற்றியும், ஒரு கற்றல் செயலை மற்றொரு கற்றலிலோ அல்லது விளையாட்டிலோ பொருத்திப் பார்க்க முயல்வது, அதில் சந்தேகம் கேட்பது (ஏன்? எப்படி?) போன்றவற்றை ஆரோக்கியமான கற்றலாகவே நான் நினைக்கிறேன்.

## கற்றல் செயல்பாடு திட்டம்: 3

நாம் எவ்வளவு தான் மழலையர் வகுப்புகளுக்கு எழுத்துப்பயிற்சி கூடாது எனக் கூறினாலும் அவர்கள் முதல் வகுப்பு செல்லும் போது தமிழ் எழுத்துக்கள், ஆங்கில எழுத்துகள்



cursive letters முதலியவற்றை எழுதத் தெரிய வேண்டும். ஏன் எழுதவில்லை என மழலையர் ஆசிரியரைக் கேட்பதை மறுக்க முடியாது.

ஆகவே, நான் குழந்தைகளுக்கு விளையாட்டு முறையில் எழுத்துப்பயிற்சி அளிக்க முற்பட்டேன். அதற்கான முன்பயிற்சியாக. மணலில் விரலால் துழாவச் செய்தேன். சிறு மணிகளைக் கோர்த்தல், சிறு கற்களை எழுத்தின் மேல் அடுக்குதல் போன்றவற்றைச் செய்தேன்.

தானியங்களை எழுத்துக்கள் மேல் பசை தடவி இரண்டு விரல்களால் தூவச் செய்தேன், எழுத்துகளின் மேல் வண்ணம் தீட்டவும், பொட்டுகள் ஒட்டவும் ஊக்கப்படுத்தினேன்.

சாக்பீஸால் பெரியதாக எழுதி அதன்மேல் குழந்தைகளை விசில் ஊதியவுடன் ஓடிச் சென்று நின்று விளையாடினர் இரண்டு முதல் நான்கு எழுத்துகளை எழுதி அவ்வெழுத்தைக் கூறியவுடன் அவ்வெழுத்தில் ஓடிச் சென்று நின்றனர்.

இவ்வாறு பயிற்சிகள் அளித்து, பின்னரே கரும்பலகையில் எழுதப் பயிற்சி அளித்தேன். பின்னர் cursive book-ல் எழுத வைத்தேன்.

முன் மழலையர் குழந்தைகளின் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்களிப்பு எவ்வளவு இன்றியமையாததோ ஆசிரியரின் வளர்ச்சியில் குழுந்தைகளின் பங்களிப்பும் மிக அவசியமாகும். அவர்கள் கேட்கும் கேள்விகளால் (ஏன், எப்படி, எதற்கு) என்னை அதிக அளவில் கற்றலுக்கு அதிக அளவில் தயார்படுத்தவும், கேள்விகளுக்குப் பதிலைத் தேடுதற்கும் வித்தாக அமைந்தது.



**வீ. பொற்கலை,**
பால சேவிகா
அ.தொ.ப முத்தியால்பேட்டை

# விளையாட்டுகளின் மூலம் எண்கள்



**பொட்டு வைத்து எண்கள் கற்பிக்கும்பொழுது குழந்தைகளுக்குள்ளே சிறுசிறு உரையாடல்கள் நடந்தன, அவைகளைக் கவனிக்கும்பொழுது அவர்கள் தங்களைச் சுற்றி உள்ளவைகளுடன் தொடர்புப்படுத்திக் கற்பதை உணர முடிந்தது.**

எனது பள்ளியில் 100 மாணவர்கள் படித்து வருகிறார்கள். எங்கள் பள்ளியில் அழகிய வண்ணச் செடிகள், பூக்கள் பூத்துக்குலுங்கும் தோட்டம் உள்ளன. பள்ளிக்கூடம் பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சி அளிக்கும்.

பள்ளிக்கு வரும் பெரும்பாலான குழந்தைகளின் பெற்றோர் வீட்டுவேலை, கூலி வேலை அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களாகத்தான் இருப்பார்கள். இதனால் பெரும்பாலான மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் தான் பள்ளிக்கு வருவார்கள். பள்ளியில் கிடைக்கும் பால் மற்றும் மதிய உணவு தான் அவர்களது பசியைப் போக்கும்.

குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது வீடுகளில் அவர்கள் காலையில் அல்லது அதற்கு முதல்நாள் சந்தித்த நிகழ்வுகளையும் சுமந்தவாறே வருவார்கள். அவைகள் சந்தோசமான நிகழ்வாக இருந்தால் கற்றலில் மகிழ்ச்சியோடு ஈடுபடுவார்கள் இல்லையென்றால் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து உட்காராமல் தனித்து அமர்வர். எந்தவொரு கற்றல் செயலிலும் ஈடுபடமாட்டார்கள். இவ்வாறு வரும் குழந்தைகளுக்கு ஆசிரியராக நான் தனி முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். அவ்வாறு வரும் மாணவர்களுடன் சிறிதுநேரம் செலவழித்து, பின்னர் வகுப்பறை பாடத்தினுள் செல்வேன்.

## எனது நோக்கம்:

பள்ளி ஆசிரியராக, எனது முதல் நோக்கம் எல்லாம் பள்ளிக்கு வரும் அனைத்துக் குழந்தைகளும் நன்றாகப் படித்து நல்லதொரு நிலைக்கு வரவேண்டும் என்பதே.

நான் கற்பிக்கும் வகுப்பு LKG மற்றும் UKG. இந்த மழலைச் செல்வங்களுக்குப் பாடம் கற்பிப்பதே எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. பள்ளிக்கு வரும் மழலைச் செல்வங்கள் அம்மாவிடம் இருந்து நேராக ஆசிரியர்களிடம் வருகிறார்கள். பள்ளிக்கு வரும் முதல் நாளில் ஆசிரியர்களைப் பார்த்துப் பயப்படுவார்கள். சில குழந்தைகள் அழுது கொண்டே பள்ளிக்கு வருவார்கள். அந்த மாணவர்களை அருகில் கூப்பிட்டு அமரவைத்து அன்பாகப் பேசி அம்மா

மாதிரி தான் ஆசிரியர் என அவர்களுக்குப் புரிய வைப்பதே எனக்குச் சவாலாக இருந்தது.

## எண்களை அறிமுகப்படுத்த நான் பயன்படுத்திய வழிமுறைகள்:

நான் எண்களை அறிமுகப்படுத்துவதற்கு முன், குழந்தைகளைப் பள்ளி சூழலுக்குப் பழக்குவதற்கு எனக்கு இருபது நாள் தேவைப்பட்டது. இவ்வாறாக, ஆரம்ப நாட்களில் பாடல்கள், கதைகள், விளையாட்டுகள் மூலம் கற்றல் கற்பித்தல் ஆரம்பமாகும். அதன் பிறகு அவர்களுக்கு ஏற்றவாறு செயல்பாடுகள் அமைக்கத் திட்டமிட்டேன். அதற்கு நான் கொடுத்த செயல்பாடுகளில் அவர்களுக்கு மிக பரீட்சயமான பொருட்களைத் தான் எடுத்துக் கொண்டேன்.

## பொட்டுகள், மணிகள் மூலம் எண்கள்:

மழலைச் செல்வங்களிடம் எண்களைப் பற்றிக் விளக்கிக் கூறுவதற்கு (One - 1, Two - 2, Three - 3, Four - 4, Five - 5, Six - 6, Seven -7, Eight - 8, Nine - 9, Ten - 10) பெரிய பொட்டு பாக்கெட் வாங்கி chart மூலம் ஒவ்வொன்றாக ஒட்டி வரச்செய்து அதன் மூலம் திரும்பப் திரும்ப சொல்ல வைத்தது அவர்களுக்கு மகிழ்ச்சியான கற்றலுக்கு வழி வகுத்தேன் . இதன் வாயிலாக எளிதில் எண்களை அறிந்து கொண்டனர்.

பொட்டு வைத்து எண்கள் கற்பிக்கும்பொழுது குழந்தைகளுக்குள்ளே சிறுசிறு உரையாடல்கள் நடந்தன, அவைகளைக் கவனிக்கும்பொழுது அவர்கள் தங்களைச் சுற்றி உள்ளவைகளுடன் தொடர்புப்படுத்திக் கற்பதை உணர முடிந்தது.

(எ.க )

குழந்தை 1: என் பாட்டி நெற்றியில் பெரிய பொட்டு வைப்பார்கள்.

குழந்தை 2: என் அம்மா சிறிய பொட்டு வைப்பார்கள்.

குழந்தை 3: எனக்குப் பச்சை நிற பொட்டு தான் பிடிக்கும்.

மாணவன்4: மிஸ், நாங்க பாய்ஸ் பொட்டு வைக்கிறது இல்ல, எங்களுக்கும் பொட்டுக்கும் என்ன தொடர்பு?

இதில் எண்கள் மட்டும் அல்ல அளவு, வண்ணம் ஆகியவற்றையும் கற்றுக்கொண்டனர்.

மாணவர்களை Oval Shape'ல் அமரவைத்து மணிகளைத் தரையில் கொட்டி ஒன்று இரண்டு என நூலில் கோர்க்கச் செய்து இதன் வாயிலாக எண்கள் சொல்லிக் கொடுத்தேன். இதை அனைத்து மாணவர்களும் மிகவும் உற்சாகத்துடன் செய்தனர்.

## குழந்தைகளுக்குள் நடந்தேறிய சிறுசிறு உரையாடல்கள்:

குழந்தை 1: "மிஸ், என் அக்கா மாலை மாதிரி இதை அணிந்திருப்பாள்."

குழந்தை 2: "எங்க அம்மா, பவுன் நகைக்குப் பதிலாக இந்த மாலை நகை
தான் வாங்கித் தருவார்கள்."

இதனால் மகிழ்ச்சி நிறைந்த வகுப்பறையாக எனது வகுப்பறை மாறியது. கிராமத்தில் கிடைக்கக்கூடிய புளியங்கொட்டை, கூழாங்கற்கள் வாயிலாக எண்களை அதற்கு உட்பட்ட கட்டத்திற்குள் போட வைத்து எண்களை எளிதில் புரிய வைத்தேன்.

என் குழந்தைகளுக்கு எண்களைச் செயற்பாட்டின் மூலம் கற்பித்ததால் மாணவர்கள் மகிழ்ச்சியோடு கற்றனர். இம்முறையின் மூலம் என் வகுப்பில் ஆர்வமற்ற குழந்தைகளும் ஆர்வமோடு எண்களைக் கற்றுக்கொண்டனர்.



**சு. தமிழ்மலர்**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, குண்டுப்பாளையம்



# முன்மழலையர் வகுப்பில் எண்கள் மற்றும் எண்ணிக்கை

"குழந்தைகள், குழந்தைகள் மட்டும் தான் அவர்களில், புத்திசாலிகளோ ..... முட்டாள்களோ ..... யாரும் இல்லை .... !!!"

எவ்வளவு நீண்டதூரப் பயணம் ஆனாலும், அதுமுதலில் ஒரு ஒற்றை அடியை எடுத்து வைப்பதன் மூலம்தான் தொடங்கும். ஆனால், அந்த முதல் முயற்சிக்குத்தான் அதிக உழைப்பும் கவனமும் தேவைப்படுகிறது. அதுபோல, மழலையர்க்கான பாடங்கள் தொடக்கநிலைப் பாடங்கள் தான் எனினும் அவற்றைப் போதிப்பதில் பல சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மழலையர்கள் அனைத்துத்திறன்களிலும் அடிப்படை ஞானம் பெற்றுத்தான் மழலையர் வகுப்பிற்கு வருகிறார்கள். ஆசிரியர்கள்தான் அந்த அடிப்படை ஞானத்தை நெறிப்படுத்திச் செம்மைப்படுத்த வேண்டும்.

## என் வகுப்பறை

சமூக நிலையில், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய, படிப்பறியாத பெற்றோர்கள், ஆரோக்கியமற்ற குடும்பச் சூழல் மற்றும் சுகாதாரச்சூழல் கொண்ட பின்னணியில் இருந்துவரும் பலதரப்பட்ட மாணவர்களைக் கொண்டது என் வகுப்பறை. அவர்களில் 7 பேர் சிறந்த கற்றல் திறனுடையவர்கள், 15 பேர் சராசரி மாணவர்கள் மற்றும் ஒரு மாணவன் ஆட்டிஸம் பாதிப்பு உடையவன். என் வகுப்பறையில் முப்பரிமாணக் கற்பித்தல் முறை, கதைகள் கூறுதல், நாடகங்கள் நடித்துக் காட்டுதல். பாடல்கள் மற்றும் விளையாட்டுக்களைப் பயன்படுத்தி கற்பிப்பேன்.

## எண்களை அறிமுகம் செய்தல்

எண்களைப் பயிற்றுவிக்க எண்ணுருக் களைப் புத்தகங்களில் சுட்டிக்காட்டியும், கரும்பலகையில் எழுதியும், கையேடுகளில் எழுதவைத்தும் கற்பிக்க முயன்றோமேயானால் அச்செயல் குழந்தைகளுக்குப் புரிதலின்மையைத் தோற்றுவித்து. பயில்வதிலிருந்து அவர்களைத் தூர நிறுத்தி வைத்துவிடும். விளையாட்டு வழியிலான எளிய பயிற்சிகள் மூலம் எண்ணிக்கையைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தி, அந்த எண்ணிக்கையுடன் எண்ணுருக்களை இணைத்துப் பார்க்கக் பழக்கும் போது கணிதம் குழந்தைகளுக்கு எளிதாகச் சென்றடைகின்றது.



## கற்பித்தல் உத்திகள்

மணலில் எண்ணுருக்களை எழுதவைத்தல், உரிய எண்ணிக்கைக்கு ஏற்ப மணிகளைக்கோர்த்தல், கற்களை அடுக்குதல் மற்றும் பெரிதாக எழுதப்பட்ட எண்களின் மேல் நடக்க வைத்தல் போன்ற எளிய பயிற்சிகளில் ஈடுபடும் போது பெரும்பாலான மாணவர்கள் எண் மற்றும் எண்ணிக்கையை எளிதாக உள்வாங்கிக்கொள்கிறார்கள்.

ஒரு சில குழந்தைகள் கற்பதில் சிரமப்பட்டுத் தடுமாறும் போது அவர்களுக்குப் புரியவைக்க மேலும், சில உத்திகள் தேவைப்படுகின்றன. பாடல்கள், கதைகள் வழியாக எண் சார்ந்த கருத்துக்களைப் புகுத்த முயன்ற போது சிறிதளவு வெற்றி பெற முடிந்தது.

அவைமட்டுமின்றி, 4 என்ற எழுத்தை எழுதிவிட்டு மாணவர்களை ஒவ்வொருவராக எழுந்து வரச்செய்து ஏதேனும் ஒரு செயலை (குறித்தல், சுற்றுதல்) நான்குமுறை செய்வித்தல்.

அதுபோல், 9 மற்றும் 6 என்ற எண்களின் இடையேயுள்ள வித்தியாசத்தை உணரவைத்தல், பொருத்தட்டைகளைப் பொருத்தச்செய்தல், கண்ணைக்கட்டி அடுக்குதல், எழுத்தட்டைகள் கையாளுதல் அளவு நிறம், வடிவம், உள்ளிட்ட கோட்பாடுகளை உணரவைக்கும் புதிர் விளையாட்டுகள் என்று பல வழிமுறைகளில் எதிர்பார்த்த அளவிற்கும் மேலான நல்ல பயன்கள் கிடைத்தன.

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளைப் போலவே எண்ணிக்கை அடிப்படையிலான கதைகளும், பாடல்களும் குழந்தைகளிடம் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தின.

## எதிர்கொண்ட சவால்

மிகப்பெரிய சவாலாக நின்ற குழந்தை, பெற்றோரால் கைவிடப்பட்டு தனது பாட்டியின் பராமரிப்பில் வளர்பவன். விளையாட்டு, குறும்பு என்று பலவற்றில் சுட்டியாக இருந்தாலும் படிப்பு என்று வந்துவிட்டால் எட்டிப்போய் சுருண்டு விடுவான். சொல்லி கொடுப்பதைப் புரிந்து கொண்டானோ இல்லையோ என்று நம்மால் எந்த வகையாலும் கண்டறிய முடியாது. நாம் எந்தக்கேள்வியைக் கேட்டாலும் ,“அப்படின்னா என்ன மிஸ்”, “தெரியலையே”, “நீங்களே சொல்லுங்க” போன்ற எதிர்மறைகள் தான் அவனிடமிருந்து பதில்களாகக் கிடைக்கும். அதனால் அவனுக்குப் பிடித்த விளையாட்டு என்ற விஷயத்தையே, அவனேயறியாமல் அவனுக்குச் சவாலாக்கினேன். “வியாழன் விளையாட்டு” (Thursday Task) என்ற பெயரில்.


## வியாழன் விளையாட்டு (TT)

பொதுவாகவே வியாழன், வாரத்தின் நான்காவது நாளாக இருப்பதால் முதல் மூன்று நாட்களில் இருந்த சுறுசுறுப்பு மங்கி மந்தமாகத்தான் நகரும், இதனை மாற்றி என்னையும் மாணவர்களையும்

புத்துணர்வுபடுத்திக் கொள்ள' வியாழன் விளையாட்டு' அருமருந்தாய் இருக்கிறது.

## விளையாடும் விதம் :

இந்த விளையாட்டிற்கு இரண்டு குழுக்கள் தேவை. மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து நிற்பர். இரண்டு குழுக்களுக்கும் தலா ஒரு இடம் ஒதுக்கப்படும். அந்த இடத்தில் 1 லிருந்து 5 வரை எண்கள் எழுதப்பட்டிருக்கும். போட்டி தொடங்கும்



முன் ஆசிரியர் வகுப்பறைச்சூழலில் உள்ள ஒரு 5 பொருட்களின் பெயரை நிறுத்தி நிதானமாக இரண்டு முறை கூறுவார். அவற்றை வரிசைப்படியாக மாணவர்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு, போட்டித் தொடங்கியதும், வரிசைக்கிரமமாகக். கூறப்பட்ட பொருட்களைச் சேகரித்து, அவற்றை அந்தந்த எண்களுக்கு நேராகக் கொண்டுவந்து அடுக்கி வைக்கவேண்டும். அப்பொருளைத் தனித்தனிப்பொருளாகவோ (அ) உரிய எண்களின் எண்ணிக்கை அடிப்படையிலோ இருக்கலாம். முதலில் செய்து முடிக்கும் குழுவினர் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டு, கைத்தட்டலைப் பரிசாகப் பெறுவர். மற்றவர்க்கு 'monkey clap' எனப்படும் விரல்களை மடக்கி ஓசையின்றி எழுப்பப்படும் கைத்தட்டல் தான் கிடைக்கும். எனக்குச் சவாலாய் இருந்த மாணவனை மாணவர் குழுவிற்குத் தலைவனாக்கினேன்.

## சான்று

ஒரு வெள்ளை நிறப்பூ, இரண்டு தண்ணீர் பாட்டில்கள், மூன்று பென்சில்கள், நான்கு கையேடுகள், ஐந்து சுண்ணக்கட்டிகள். தொடக்கத்தில் ஐந்தாக உள்ள எண்ணிக்கையை மெல்ல மெல்ல பத்துவரை கூட்டலாம்.

## நான் கற்ற (பெற்ற) அனுபவம்

ஒரு பார்வையாளராய் ஒதுங்கி நின்று கவனித்த போதுதான் நான் உணர்ந்தேன். அவனுக்குப் புரிகிறதா? என்றறிய அவனிடம் கேட்ட கேள்விகளில் தப்பில்லை... நான் சோதித்து அறிய முயன்ற விதம் தான் தவறானது என்று.

ஏனென்றால் அந்த விளையாட்டின் போது அவனது பங்களிப்பை அக்குழுவின் தலைவனாக நின்று செயல்பட்டு, அக்குழுவை வழிநடத்துவதில் வெளிப்படுத்தினான். கணிதம் அவனுக்கு எந்த அளவிற்குப் புரிந்திருக்கிறது என்பதை அவனது கட்டளைகளிலிருந்து நான் கண்டுணர்ந்தேன்.

## விளையும்பயன்கள்

இவ்விளையாட்டின் மூலம் நிறம், எண்ணிக்கை, தரவரிசை, போட்டியுணர்வு, சுறுசுறுப்பு, தன்னாலும் சாதிக்க முடியும் என்ற பெருமையுணர்வு ஆகியவை மாணவர்களிடம் பெருகும்.

"குழந்தைகள் குழந்தைகள் மட்டும் தான் அவர்களில், புத்திசாலிகளோ ..... முட்டாள்களோ ..... யாரும் இல்லை .... !!!"

இவ்வுலகில் கற்காத குழந்தைகள் இல்லை.. கற்றுக்கொண்டதை வெளியில் சொல்லத்தெரியாத குழந்தைகள் சிலர் உண்டு. எனக்குச் சவாலாக இருந்த இந்தக் குழந்தையைப்போல !

---



**ஆ. உமாதேவி**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, மீனாட்சிப்பேட்டை

# தமிழ் எழுத்துக்கள் கற்பிக்கக் கையாண்ட புதிய முயற்சி



## மாணவர்களின் சமூகச் சூழ்நிலை

திலாசுப்பேட்டை அரசு ஆண்கள் நடுநிலைப்பள்ளியில் முன்மழலையர் பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றுகிறேன். இங்குப் படிக்கின்ற மாணவர்களில் பெரும்பான்மையானோர் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் பெற்றோர் இல்லாத, தந்தை அல்லது, தாய் மட்டும் உள்ள குழந்தைகள் ஆவர்.

## என் குறிக்கோள்

தினமும் கற்பவரே சிறந்த ஆசிரியர் என்பார்கள். கற்றல் என்பது புத்தகங்களில் படித்து அறிவது மட்டும் அல்ல. நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற எல்லாப் பொருள்களிலும் நமது வாழ்க்கைக்கான பாடங்கள் உள்ளன. நம்மைச் சுற்றியுள்ளவற்றிலிருந்து வாழ்க்கைக்கான பாடங்களைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதே என் முக்கியக் குறிக்கோள்.

## நான் வளர்த்த மாணவர்கள்

எடுத்துக்காட்டாக எம் மாணவர்களுக்கு எறும்புகளைக் காண்பித்து அவைகள், சாரை சாரையாகச் செல்வது, உணவு சேமித்தல் மற்றும் ஒற்றுமையாக இருத்தல் பற்றி எடுத்துக்கூறி அதுபோல் நாமும் எங்குச் சென்றாலும் வரிசையாகச்செல்ல வேண்டும் என்று கூறி அவர்களை வரிசையில் செல்ல பழக்கப்படுத்தினேன். ஒற்றுமையாக இருப்பதன் நன்மைகள், சேமித்து வைப்பதன் பயன்கள் பற்றிக் கூறி அவைகள் வாழ்க்கையில் மிக முக்கியம் என்றும் அவர்களுக்குப் புரியும்படி அடிக்கடிக் கூறுவதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற கருத்தைக் காக்கைகள் மூலமாகக் குழந்தைகளுக்கு எடுத்துக்கூறினேன். இவ்வாறாக நம்மைச் சுற்றியுள்ளவற்றைக் கொண்டு நற்பண்புகளைக் குழந்தைகள் கற்க நாம் முயற்சி செய்ய வேண்டும். இதையே 'கற்கக் கற்றுக்கொள்"என்பர்.

கற்றல் என்பது எழுத்துக்களைப் படிக்க எழுதக்கற்றல் மட்டுமல்ல. எந்தச்சூழலிலும் செம்மையான வாழ்வை வாழக்கற்றலே சிறந்த கற்றல். வாசிக்கவும் எழுதவும் கற்க வேண்டியதும் முக்கியமே..


## தமிழ் எழுத்துகளின் எளிமை

இங்கு நான் எளிய முறையில் தமிழ் எழுத்துக்களை எவ்வாறு கற்பித்தேன் என்று பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குழந்தைகளுக்கு முதலில் உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்களைப் படத்துடன் சேர்த்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும். படத்துடன் படிக்கும் பொழுது எழுத்துக்கள் எளிமையாக மனதில் பதிந்துவிடும். உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்கள் 'நன்கு" அறிந்த பிறகே உயிர்மெய் எழுத்துக்களைக் கற்பிக்க வேண்டும்.

'க்' என்ற எழுத்தை எழுதி இது என்ன எழுத்து? என்று கேட்டால் 'க்' என்று சொல்வார்கள்.

பிறகு அவ்வெழுத்தில் உள்ள புள்ளியை மறைத்துக்கொண்டு இது 'க' என்று சொல்ல வேண்டும். அதாவது, உயிர் எழுத்தையும் மெய் எழுத்தையும் சேர்த்தால் 'க' என்ற உயிர்மெய் எழுத்து வரும் என்று திரும்பத் திரும்பக் கூற வேண்டும்.




க்+அ = க   ங்+அ = ங   ச்+அ= ச   ஞ் + ச= ஞ


மெய் எழுத்துக்களில் உள்ள புள்ளியை எடுத்துவிட்டால் அதற்கு 'அ' உச்சரிப்பு வரும் என்று சொல்ல வேண்டும். பிறகு அதனுடன் துணைக்கால் சேர்த்தால் அது 'ஆ' வரிசை என்றும்,

க் +ஆ = கா, ங் +ஆ = ஙா என்று கூறி கா என்று சொல்லும் பொழுது 'ஆ' என்ற ஒலியுடன் முடியும் என்று கூற வேண்டும்.

ஒலிகளைப் பற்றிய புரிதல் குழந்தைகள், எழுத்துகள் கற்பதை மிகவும் எளிதாக்கியது.


கரும்பலகையில் இவ்வாறு எழுதி புள்ளியை எடுத்துவிட்டால் அது 'அ" வரிசை, 'ா' துணைக்கால் சேர்த்தால் 'கா' வரிசை. 'ஆ' வரிசை, ி கொக்கி போட்டால் 'கி' வரிசை.ீ சுழி சேர்த்தால் 'கீ' வரிசை. ெ ஒற்றைக்கொம்பு போட்டால் கெ வரிசை என்று எல்லா எழுத்துக்களின் குறியீடுகளைக் கூற வேண்டும்.

இவ்வாறு படம் வரைந்து அ-க, க் ஆ-கா. க்இ-கி என்று படிக்க வைக்க வேண்டும் - பிறகு (எ.கா)



(க்ஒ) கொக்கு (க்உ) என்ற சொல் எழுதிப் படிக்கக் கூறும்பொழுது குழந்தைகள் நன்றாக வாசிக்கின்றனர். வாசிப்பதுடன் சேர்த்துப் படிக்கும் பொழுது மிக விரைவில் கற்கின்றனர். (க்ஓ) கோலம், (ச்சி) சிங்கம்.

நான்பயன்படுத்தும் இம்முறை குழந்தைகள் எளிதில் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கிறது. எந்த சொல் எழுதினாலும் அதன் மேல் கலர் சுண்ணக்கட்டியால் அதன் விரிவான




எழுத்துகள் எழுதுவது மாணவர்களுக்கு நல்ல புரிதலை ஏற்படுத்தியது (எ.கா)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க்அ=க | கா | கி | கீ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |

## என்னை வளர்த்த மாணவர்கள்

இதன் மூலம் குழந்தைகளுள் ஒருவர் தவறாகப் படிக்கும் போது அடுத்தவர் சரிசெய்து எனது பணியைச் சுலபமாக்கினர். ஒரு குழந்தை கிளி என்ற வார்த்தையில் கி எழுத்தை க என்று படிக்கும் போது மற்றொரு குழந்தை கொக்கி உள்ளது எனவே அது கி என்று கூறியபோது நானே ஆச்சரியப்படும் விதத்தில் மாணவர்கள் புரிந்து கொண்டது மகிழ்ச்சியாக இருந்தது. என்றோ ஒரு நாள் ஒற்றைக் கொம்பை விளக்கக் கொக்கி என்று கூறி ஆள்காட்டி விரலை வளைத்துக் கொக்கி காண்பித்ததைக் குழந்தைகள் நினைவில் வைத்திருந்தது நான் மிகவும் நெகிழ்ந்த தருணம்.



**விஜயலக்ஷ்மி. இல**
முன்மழலையர் ஆசிரியர்
அரசு ஆண்கள்
நடுநிலைப்பள்ளி,
திலாசுப்பேட்டை

# கதை கூறுதல் - ஒரு பகிர்வு

எங்கள் வகுப்பறையில் கதை கூறுதல் என்னும் நிகழ்வு மிகவும் இயல்பானதாகும். . கற்றல், கற்பித்தல், போட்டி, பரிசு போன்ற அனைத்திற்கும் மேலாகக் கதைகள் நல்ல மனிதரை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது. கதை கூறுவோம்… கதைகளைக் கேட்போம்… நல்லதொரு சமூகத்தை உருவாக்குவோம்.

## எங்கள் வகுப்பறைப் பற்றி

முன்மழலை வகுப்பிற்கு வரும் மழலைகளோடு இருப்பது என்பதே மிகவும் அற்புதமான உணர்வு ஆகும். அப்பழுக்கற்ற மனங்களோடு பயணிப்பது முன்மழலை ஆசிரியருக்குக் கூடுதலான வரப்பிரசாதம். பெற்றோர்களைப் பிரிந்து வரும் குழந்தைகளுக்கு அவர்களிடம் நெருங்குவதற்கான ஒரு சிறந்த கருவி கதைகளே என்று எனக்குத் தோன்றியது. இச்சமூகத்தில் நல்லதொரு மாணவர்களைக் கதைகளினால் உருவாக்க முடியும் என்று நம்பினேன்.

## கதைகளின் வழியே ஒரு பயணம்

குழந்தைகளுக்கு முதலில் தமிழில் நிறைய கதைகளைக் கூறவேண்டும். பின்பு குழந்தைகளை நாம் கூறிய கதைகளையே திரும்பக் கூறச் சொல்லலாம். குழந்தைகள் நிறைய கற்பனைகளுடன், நிறைய கதாபாத்திரங்களையும் இணைத்துக் கதையைக் கூறுவார்கள், நாம் அதை திருத்தக் கூடாது. அவர்களின் இயல்பிலேயே கதைகள் பயணிக்க வேண்டும்.



நிறைய விலங்குகள் நிறைந்த கதையைக் குழந்தைகளுக்கு நாம் கூறவேண்டும். ஏனென்றால் இவ்வயது குழந்தைகள் அதைத்தான் விரும்புவார்கள். கதைக்கேற்ப விலங்குகளின் ஓசையை எழுப்புதல் நன்றாக இருக்கும். அழுகை, சிரிப்பு, சோகம், போன்ற முகபாவனைகளைக் கதைக்கேற்ப நாம் செய்ய வேண்டும்.

## கதைகளின் மூலங்கள்

இதேபோல் குழந்தைகளை அவர்கள் வீட்டில் உள்ள பெரியோர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும், கதையைக் கேட்டு வரச் செய்து, பள்ளி வகுப்பறையில் கூறச் சொல்லாம். இவை அவர்களின் ஞாபகச்சக்தியையும், கற்பனைத் திறனையும், பேச்சாற்றலையும் மேம்படுத்தும்.

நிறைய கதை அல்லது பட அட்டைகளை குழந்தைகளிடத்தில் காட்டி இந்தப் படத்தைப் பார்த்து உனக்கு தோன்றும் கதையைக் கூறு என்று சொல்லலாம். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதமாகக் கதை கூறுவார்கள். ஏனென்றால் அவர்கள் வளர்ந்த விதம். அவர்களின் சூழ்நிலைகளுக்கேற்ப அவர்களின் கற்பனைத்திறன் வேறுபடும். தமிழோ, ஆங்கிலமோ எந்தக் கதையாக இருந்தாலும் அதற்கு நாம் Charts, Masks, Puppets, Flashcards, போன்றவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

## ஆங்கிலக் கதைகள்

அடுத்ததாக நாம் குழந்தைகளின் ஆங்கிலத் திறனை மேம்படுத்த விரும்பினால் அவர்களுக்கு நிறைய கதையைக் ஆங்கிலத்தில் கூற வேண்டும். கதைகளினூடே மாணவர்களின் கற்றல் திறன்கள் பலமடங்கு விரைவாக உயரும்.

ஒரே கதையை இரண்டு நாட்கள் பின்வருமாறு கூறினால் சிறப்பாக அமையும்.

• முதல் நாள் நாம் கதைகூறும் போது முதலில்

தமிழில் கூற வேண்டும். நிறைய கேள்விகளைக் குழந்தைகளைக் கேட்கச் செய்ய வேண்டும். இது அவர்களின் கேள்வித்திறனை மேம்படுத்தும்.

- கதைகூறிய பின்பு கலந்துரையாடல் என்பது மிகவும் இன்றியமையாதது.
- இரண்டாவது நாள் ஆங்கிலக் கதையாக இருப்பின் ஆங்கிலத்தில் கதை கூறும் போது முதலில் தமிழும், ஆங்கிலமும் கலந்து கூறவேண்டும். சில சமயங்களில் இரண்டு அல்லது மூன்று ஆங்கில வாக்கியங்களை அவர்கள் திரும்பக் கூறுவதற்கு வாய்ப்புகள் உண்டு.



இவ்வாறாகக் குழந்தைகளின் ஆங்கிலத் திறனைக் கதைகளின் மூலம் மேம்படுத்தலாம். அடுத்தடுத்த வகுப்புகளுக்கு அவர்கள் செல்லும் பொழுது ஆங்கில மொழி என்பது கடினமாக இருக்காது. ஆங்கில மொழியில் கலந்துரையாடுவதற்கானத் திறனும் மேம்படுகிறது.

## படங்களின் வழியே கதை

நிறைய படங்களை வரையக் குழந்தைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். உ.ம். பானை, காகம், கல். குழந்தைகள் அழகாக வரைய வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நாம் கற்றுக் கொடுத்ததில் பாதியாவது குழந்தைகள் வரைவார்கள். அவன் வரைவது தான் பானை, காகம். அதை நாம் ஏற்றுக்கொண்டு, நன்றாக இருக்கிறது என்று அவனிடத்தில் கூற வேண்டும்.

நாம் படம் வரைந்து கதை கூறினால், அவர்களாகவே ஏதாவது படம் வரைந்து கற்பனைக் கதை கூறுவார்கள். அதை நாம் பாராட்ட வேண்டும். இது தப்பு, இந்த மாதிரி கதையே இல்லை என்று கூறக் கூடாது. ஆசிரியராக நாம் மாணவர்களின் கற்பனைத்திறனை தூண்ட வேண்டும்.

## நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் முயற்சியில்

எங்கள் வகுப்பறையில் கதை கூறுதல் என்னும் நிகழ்வு மிகவும் இயல்பானதாகும். கதைகள் எங்களுக்கு முதலாகவும், அதன் பயன்பாட்டு மொழி இரண்டாவதாகவும் இருக்கும். நாங்கள் கூறிய கதைகளின் வெளிப்பாடாகக் குமரன் என்னும் மாணவன் 2018- 2019 கல்வியாண்டிற்கான மண்டல அளவிலான கதை கூறுதல் போட்டியில் இரண்டாமிடமும் புதுவை மாநில அளவில் முதலிடமும் பெற்றதைப் பகிர்வதில் மகிழ்ச்சி. கற்றல், கற்பித்தல், போட்டி, பரிசு போன்ற அனைத்திற்கும் மேலாகக் கதைகள் நல்ல மனிதரை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது. கதை கூறுவோம்... கதைகளைக் கேட்போம்... நல்லதொரு சமூகத்தை உருவாக்குவோம்.



**அ. இராஜேஷ்வரி,**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, இராமநாதபுரம்

# மழலையர் பருவத்தில் அன்பும் அரவணைப்பும்

## மாணவர்களின் நிலை

எங்கள் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவர்கள்.

## பணி சார்ந்த ஆர்வங்கள்

குழந்தைகளிடம் எப்போதும் அன்பாக இருக்க வேண்டும் என்று நினைப்பது

எளிய கற்றல் கருவிகள் பயன்படுத்துவது

கதை கூறல் மூலம் குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பது

## ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்ததன் நோக்கம்

குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் முறையைப் பல ஆசிரியர்களிடம் கற்பதற்கும், நம்முடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஆசிரியர் வட்டத்தில் சேர்ந்தேன்.

## வகுப்பறைச் சவால்கள்

நான் கையாளும் குழந்தைகள் மிகவும் சிறியவர்கள். அவர்களை லு மணி நேரம் என்னை கவனிக்க வைப்பதற்கு மிகவும் கடினமாக இருக்கும். காரணம் மிஸ், அவன் என்னை அடித்துவிட்டான், என்னை கிள்ளிவிட்டான் என்பது போன்ற பிரச்சனை மேலோங்கி இருந்தது. இப்பிரச்சனைகள் ஆசிரியர் வகுப்பறையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொடரும். இப்பிரச்சனையைத் தீர்க்க நான் எடுத்த தலைப்பு ‘அன்பும் அரவணைப்பும்’.

## நோக்கம்

இக்குழந்தைப் பருவத்திலேயே அன்பு செய்யும் மனப்பான்மையை வண்ணப்படங்கள் மூலம் மனதில் பதிய வைத்தல்.

## நோக்கம் அடைய திட்டமிட்ட விதம்

வண்ணப்படங்களை வரைந்து சுவரில் ஒட்டி குழந்தைகளைக் கவனத்தோடு உற்று நோக்கச் செய்தேன். பல்வேறு இடங்களில் இருந்து வரும் குழந்தைகள், தம்முடன் பயிலும் குழந்தைகளுடனும் சுற்றியுள்ள அனைவரிடமும் அன்பாகப் பழக வேண்டும். யாரும் யாரையும் அடிக்கவோ, கிள்ளவோ கூடாது என்பதற்காக, நான் வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் போன்ற படங்களின் மூலம் அன்பையும் அரவணைப்பையும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தேன். வீட்டு விலங்குகள் நாய், பூனை, ஆடு, மாடு, கோழி, முயல் போன்ற படங்களுடன் அதனுடைய குட்டிகள் உள்ள படத்தையும் வரைந்து சுவற்றில் ஒட்டிவைத்தேன். ஆடு தன் குட்டிகளுடன் இருக்கும் படத்தைக் குழந்தைகள் பார்க்கும்போது, அவர்கள் கண்களில் தெரியும் மகிழ்ச்சியையும் நான் கவனித்தேன்.



வகுப்பறையில் நான் படங்களை ஒட்டும் பொழுது, அவை என்ன? என்ற பிரமிப்போடுப் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள், தங்களுக்குள்ளேயே பேசிக்கொண்ட உரையாடல்.

‘டேய் ! பூனை டா ....‘
‘ஆமாண்டா பெரிய பூனையும் குட்டிப்பூனையும் .....‘
டேய் இங்கப்பாருடா .... குரங்கு ... !
‘அச்சச்சோ ... அது இன்னொரு குரங்கை அழுத்தி பிடிச்சிருக்குடா.... பாவம் டா அது !‘
‘ஏய் .... இல்லடா .. அது அதோட குட்டி !‘
‘ஆமாண்டா நான் கூட ’டீ.வி’ ல பார்த்தோன் டா ....‘
குரங்குலாம் இப்படித்தான் குட்டியைப் பிடிச்சிருக்கும் ...‘

இதுபோன்ற உரையாடல்களைக் கண்டும் காணாதது போல் நான் படங்களை ஒட்டி முடித்தேன். பின்னர் மெதுவாக அவர்களிடம் ‘இதெல்லாம் என்ன படங்கள்? ‘என்றேன். விலங்குகள், (Animals) காட்டு விலங்குகள். டேய் ஆடுலாம் இருக்கு வீட்டு விலங்குடா. பெரிய விலங்கும் குட்டிவிலங்கும் என்று பல பதில்கள் வந்தன. படங்களைப்பற்றியக் கலந்துரையாடல்களின் முடிவில் பிற பாடங்களில் கவனத்தைக் கொணர்ந்தேன். இவ்வாறு மூன்று நாட்கள் சென்றன.

இவ்வாறாகவே காட்டு விலங்குகளான யானை, புலி, சிங்கம் போன்றவற்றின் படங்களோடு அவற்றினுடைய குட்டியையும் வரைந்து ஒட்டிவிட்டேன். வீட்டில், காட்டில் வளரும் மிருகங்கள் யாவை என்பதையும் குழந்தைகள் அறிந்தார்கள். காட்டில் இருக்கும் மிருகங்கள் கூட தன் குட்டியோடு அன்பாகப் பழகுவார்கள் என்பதை குழந்தைகள் உணர்ந்தனர்.

## விளைவு 1

மாணவர்கள் ஓய்வு நேரங்களில் அப்படங்களின் அருகில் சென்று கூர்ந்து பார்த்தனர்.

தங்களுக்குள் நிறைய செய்திகளைப் பேசிக் கொண்டனர். பெரிய விலங்குகள் எல்லாம் குட்டி விலங்குகளைப் பாசத்துடன் பார்த்துக் கொள்கின்றன என்ற கருத்துதான் அவர்களின் பேச்சுக்களில் பிரதான இடம் பெற்றிருந்தது. அவர்கள் தானாகவே அன்பாயிருத்தல், பாசம் காட்டுதல் மற்றும் அக்கறையாய் இருத்தல் பற்றி மழலை மொழியில் பேசிக் கொள்வதைக்கேட்டேன். தேவைப்படும் இடங்களில் நானும் உரிய கருத்தை எடுத்துச் சொன்னேன். சிறுத்தையொன்று தனது குட்டியை வாயால் கவ்விச் செல்வது போன்ற ஒரு படத்தைப் பார்த்து ஒரு மாணவன் தன் நண்பனிடம் இவ்வாறு கூறினான்.

‘டேய் எல்லா Animals-ம் பாசமா குட்டியைப் பார்த்துக் கொள்ளுதுங்க. இந்தச் சிறுத்தை மட்டும் தாண்டா குட்டியைக் கடிக்குது. ‘அது கெட்ட சிறுத்தை .... அதான் கடிக்குது... ! ‘ என்று கூறினான்.

இப்போது நான் குறுக்கிட்டு சிறுத்தை, புலி, சிங்கம் இவையெல்லாம் தன் குட்டிகளை வாயால் கவ்வித்தான் தூக்க முயற்சிக்கும். ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குக் குட்டிகளை அழைத்து செல்ல அவை இதுபோலத்தான் செய்கின்றன. ஆனால் அதனால் அந்த



> **இக்குழந்தைப் பருவத்திலேயே அன்பு செய்யும் மனப்பான்மையை உருவாக்கினால் மாணவர் நலன் வருங்காலத்தில் செம்மையாக இருக்கும் என்பது என் எண்ணம்.**

குட்டிகளுக்கு வலியோ, காயமோ ஏற்படாது. இதுவும் ஒருவகையானப் பாசச் செயல்பாடுதான். அவற்றிற்கு கையில்லை அதனால் வாயால் கவ்வுகின்றன‘ என்று கூறினேன்.

மேலும் மறுநாள் புலி, சிங்கம், சிறுத்தை உள்ளிட்ட விலங்குகள் தங்கள் குட்டிகளை எவ்வாறு கவ்விக்கொண்டு செல்லும் என்பதைக் கைப்பேசியில் காணொளியாகக் காண்பித்தேன். அது அவர்களுக்கு அதிகமானப் புரிதலையும் உற்சாகத்தையும் அளித்ததை உணர்ந்தேன்.

## விளைவு 2:

அன்பு, பாசம், அக்கறை முதலான வார்த்தைகளின் பேருண்மையை அந்தப்படங்கள் மௌனமாக உணர்த்திக் கொண்டிருந்ததன் விளைவாக, அவர்களும் தங்களுக்குள் பாசத்துடன் பழக ஆரம்பித்தனர்.

அடித்தல், கடித்தல், தள்ளுதல், கிள்ளுதல் முதலான குறும்புகள் குறைந்து அக்கறை மற்றும் பாசச் செயல்கள் மிகுந்ததைக் கண்கூடாகக் காணமுடிந்தது.

## விளைவு: 3

அவர்கள் அப்படங்களைத் தினமும் பார்த்து தங்களுக்குள் பேசிக்கொண்ட உரையாடல்கள் மூலம், சரியான பாதையில் ‘அன்பு மற்றும் அரவணைப்பு’ என்ற கருத்தை உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்ற உண்மையை நான் உணர்ந்தேன். பள்ளியில் மட்டுமல்லாது தங்களது குடும்பத்திலும் எதிரொலித்ததை நான் பெற்றோர் மூலம் அறிந்துக்கொண்டேன்.

பெற்றோர்களும், ‘அப்படி எந்தப் படம் தான் வகுப்பறையில் ஒட்டி வைச்சிருக்கீங்க டீச்சர்? வீட்டுக்கு வந்தால் அதைப்பத்திதான் ஒரே பேச்சு‘ என்றும், பெரியவங்க அம்மா இவங்கலாம் சின்னவங்க மேல பாசமா இருப்பாங்க... நாங்க எங்க வகுப்பறையில படத்துல பார்த்தோம்..‘ என்றும் குழந்தைகளின் வீட்டுச் செயல்பாடுகளை மகிழ்ச்சியுடன் என்னிடம் பகிர்ந்து கொண்டனர்.

இக்குழந்தைப் பருவத்திலேயே அன்பு செய்யும் மனப்பான்மையை உருவாக்கினால் மாணவர் நலன் வருங்காலத்தில் செம்மையாக இருக்கும் என்பது என் எண்ணம்.

‘ஆயிரம் சொற்களைக் காட்டிலும் ஒரு சித்திரம் அதிகம் பேசும்‘

வார்த்தைகளைப் பயன்படுத்தி புரிய வைப்பதை விட இப்படங்களின் மூலம் உணர வைத்ததை வெற்றியாக நினைக்கிறேன்.

---



**சிவகாமசுந்தரி. ம**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, இந்திராநகர்



# எழுத்துகள் படுத்தும் பாடு

நான் அ.தொ.ப. கிருமாம்பாக்கத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியையாகப் பணி புரிகிறேன். எம் பள்ளியில் மொத்தம் இருநூற்று நாற்பது மாணவர்கள் பயில்கின்றனர். ஆசிரியர்கள் மொத்தம் பன்னிரெண்டு பேர்.

மிகவும் அழகான குழந்தைகளை , கவனமாகவும் பொறுமையாகவும் பாதுகாக்க வேண்டிய முக்கியப் பொறுப்பு தொடக்கப்பள்ளி ஆசிரியருக்கு உண்டு. .நான் பொக்கிஷமாகக் கருதிய மிக உயர்ந்த பதவி.

குழந்தைகளை ரசிக்கத் தெரிந்தால், மட்டும் தான் அவர்களைப் புரிந்து கொள்ள முடியும். நாம் கதைகள் கூறும்போதும், பாடல்கள் பாடி ஆடிடும் போதும் அவர்கள் நம்மிடம் நெருக்கமாகிறார்கள். முதல் மூன்று மாதங்கள் நான் அவர்களிடம் நெருங்க என்னால் முடிந்தவற்றைச் செய்தேன். அவர்களுடன் பாடினேன், ஆடினேன், விளையாடினேன். மெதுவாகக் குழந்தைகள் என்னை நேசிக்கத் தொடங்கினர்.

## வகுப்பறையில் குறும்புத்தனம் :

என் குழந்தைகள் மிகவும் இனிமையானவர்கள். ஆயிரம் கேள்விகள் கேட்டு என்னை திணற வைக்கும் சுட்டிகள். அக்கேள்விகளுக்கான விடை தேடலில் அவர்களுடன் நானும் வளர்ந்துக்கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு விடையளித்ததன் மூலம் அவர்களுக்கு மிகவும் நெருக்கமானேன். நான் பாடத்தை அவர்களுக்குப் பிடித்தபடி நடத்துவேன். நான் செயற்பாடுகள் மூலமும், விளையாட்டின் மூலமும் எழுத்து வடிவங்கள், ஒலிகள் முதலியவற்றைக் கொண்டு சேர்க்க முடிவு செய்து அவர்களுக்குப் பல செயற்பாடுகள் கொடுத்தேன்.

## என் வகுப்பறையில் எழுத்துகள் படுத்திய பாடு

ஆங்கிலம் எம் பிள்ளைகளுக்கு அந்நியம். இந்நிலையில் அப்பிள்ளைகளிடம் ஆங்கில எழுத்துகளைத் திணித்த அனுபவத்தைப் பகிர்கிறேன்.

முதலில் அவர்களுக்கு straight lines- ல் வரும் எழுத்துகளான L,H,I,E,F,T மற்றும் slanting lines-ல் வரும் எழுத்துகளான X,Y,Z,A,M, curve lines-ல் வரும் எழுத்துக்களான சி,நி போன்ற எழுத்துகளையும் சொல்லிக்கொடுத்தேன். அவர்களை எழுத்துகளை ice cream sticks மூலம் அடுக்கச் செய்தேன். அவர்களும் மிகுந்த ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் செய்தார்கள். குழந்தைகளால் எழுத்துகளை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது, அதோடு அவர்கள் விருப்பத்தோடு செய்தது மகிழ்ச்சியாக இருந்தது.







**READING FESTIVAL:**

எங்கள் பள்ளியில் வாசித்தல் திருவிழா என்ற ஒன்று நடந்து பெரிய மாற்றத்தை எங்களிடம் தந்தது.

அதன் குறிக்கோள், LKG முதல் 5 ஆம் வகுப்பு மாணவர் வரை அனைவரும் எதைக் கொடுத்தாலும் படிக்க வேண்டும் என்பது தான். இதற்கு LKG & UKG மாணவர்கள் என்ன படிப்பார்கள் என்னவெல்லாம் படிக்க முடியும், என்பதை கண்டுபிடிப்பதே எங்களுக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது. வெறும் எழுத்துக்கள் alphabets மட்டும் தான் படிக்க தெரியும், அவர்களை வைத்து என்ன புது விஷயங்கள் செய்வது என்று நான் யோசித்தேன். அப்போது ABCD……..Z என்று படித்தவர்களை ZYXW……A என்று படிக்கப் பழக்கினேன். இதன் மூலம் எந்த ஒரு தடுமாற்றமும் இன்றி எவ்வாறு, எங்கு நடுவில் கேட்டாலும் அந்த எழுத்துகளை அடையாளப்படுத்தும் அளவுக்குப் பயிற்சி பெற்றனர் .இது மட்டுமல்லாமல் ALPHABETS BUILDING BLOCKS என்பதை அறிமுகப்படுத்தி PYRAMID மாதிரி செய்தோம். இவ்வாறு கையில் விளையாட்டு பொருட்கள் போல் எழுத்துகள் கிடைத்ததும் நிறைய மாணவர்கள் எழுத்துகள் மீது ஆர்வம் வந்து அடுக்கத் தொடங்கினர்.

இதுவும் போதாதென்று THE TAILOR AND THE ELEPHANT கதையை அவர்களுக்குச் சொல்லி அதைப் படிக்கவும் பழக்கினேன். இதில் அவர்களுக்கு முதலில் கதையைத் தமிழில் சொல்லிக்கொடுத்தேன். பின்னர் ஒவ்வொரு வரியையும் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுத்தேன். கதையின் படங்களையும் நிரப்பி அவர்களைக் கதை சொல்ல ஊக்கப்படுத்தினேன்.. அதனால் அவர்களுக்குக் கதை நன்கு மனதில் பதிந்ததுவிட்டது. நான் அவர்களை two letter words, rhyming words படிக்கப் பயிற்சி அளித்தேன். அவர்களுக்குப் படத்தைக் காண்பித்து வார்த்தைகளை அடையாளப்படுத்தச் செய்தேன். படங்களைத் தொடர்புப்படுத்தியதால் எம் மாணவர்கள் உற்சாகத்துடன் படித்தனர்.

இவை அனைத்தையும் 2 மாதத்தில் என் குழந்தைகள் கற்றுக் கொண்டனர்.

இதற்கிடையில் அவர்களை உற்சாகப் படுத்த FLOWER PRINTING, SHAPES PASTING , COLOURING, SAND PRINTING, COLLAGE WORK போன்றவற்றைச் செய்தேன். இது தான் அவர்களுக்கு மன அமைதியைக் கொடுத்தது. இதுவும் இல்லாவிட்டால் எம் மாணவர்கள் எழுத்து படுத்தியபாட்டால் மிகவும் மன அழுத்தத்திற்குத் தள்ளப்பட்டிருப்பார்கள் .

reading என்றதனால் அனைவருக்கும் writing மறந்துபோய்விட்டது. அடுத்த ஆண்டில் இதனை சரி செய்ய வேண்டும். அல்லது reading writing இரண்டையும் ஒருசேர கற்பிக்க முயற்சி செய்யவேண்டும் . செயற்பாட்டு மூலம் கல்வி என்ற ஒன்று குழந்தைகளுக்கு மட்டும் அல்ல ஆசிரியரான எனக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தந்தது.



**சுகன்யா. இ**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, கிருமாம்பாக்கம்

# உடல் பாகங்களின் மூலம் வடிவங்கள்

வீட்டுச் சூழலில் இருந்த குழந்தைகளை முன் மழலையர் வகுப்பறைச் சூழலுக்கு ஏற்ப மாற்ற ஒரு சில மாதங்கள் ஆகிவிடுகின்றன. பின்பு குழந்தைகளிடம் அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்தே பாடங்களாக தொடர்ந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அதனால், 'எனது உடல்' என்ற தலைப்பில் மாணவர்களிடம் பேச முயற்சித்தேன்.

## உடல் பாகங்கள் பற்றிய அறிமுகம்

மாணவர்கள் ஒவ்வொருவரின் பெயராக அழைத்து அவர்களின் உடல் பாகங்களைக் குறிப்பிட்டு அதன் பெயர் என்ன என்று கேட்க ஆரம்பித்தேன். பெரும்பாலான மாணவர்கள் கை, கால்கள் மற்றும் வாய், கண்களை சரியாகக் கூறினர். காது, மூக்கு, தலை இவற்றில் தான் சரியான புரிதல் இல்லை. அன்றைய வகுப்பு முழுவதும் உடல்பாகங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினேன். உடல்பாகங்கள் பற்றிய பாடலையும் பாடினேன்.

## உடல்பாகங்களின் பயன்பாடுகள்

அடுத்த வகுப்பில் மாணவர்கள் ஒவ்வொருவரின் பெயராக அழைத்து எழுந்து நடக்கச் செய்தேன். பின்பு எப்படி நம்மால் நடக்க முடிகின்றது? என்று கேட்டதற்கு 'கால்களால் தான் மிஸ் நடக்க முடியுது', என்றனர். நான் பேசுவது கேட்கின்றதா என்றேன். 'கேட்குது மிஸ்' என்றனர். எப்படி கேட்குது என்றதற்கு மிஸ் சத்தம் கேட்குது மிஸ், வாய் வழியா பேசுறீங்க மிஸ் என்றனர். காது என்று அவர்களால் சொல்ல முடியவில்லை. பின்பு அவர்களின் காதுகளைக் கையால் மூடச் சொல்லி மிகவும் குறைந்த சப்தத்தில் பேசினேன். இப்பொழுது கேட்கிறதா? என்றதற்கு ஒரு சிலர் கேட்கிறது என்றும் ஒரு சிலர் கேட்கவில்லை என்றும் கூறினர். ஏன் கேட்கவில்லை, காதை மூடிக்கிட்டோம்ல அதனால தான் மிஸ் என்றனர். இப்போது கேட்கிறதா? கேட்குது மிஸ், அப்போ நாம சப்தங்களைக் கேட்பதற்கு உதவி செய்வது எது என்றதற்கு காது என்று கூறினர்.

**பயன்களின் மூலம் உடல் உறுப்புகளை அறிமுகம் செய்வதால் மாணவர்களின் புரிதல் விரைவாகவும் ஆழமாகவும் இருக்கும். உடல் உறுப்புகளைக் கொண்டு வடிவங்களை அறிமுகம் செய்யும் செயல்பாட்டின் வாயிலாகக் குழந்தைகள் கருத்துக்களை வாழ்வோடு தொடர்புபடுத்திக் கொள்வர்.**

நான் உடல் பாகங்களைப் பற்றி பேசிக்




கொண்டிருக்கும் பொழுதே மதிய உணவை வண்டியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். உடனே மாணவர்கள் மிஸ் சாப்பாடு வந்துவிட்டது என்றனர். எப்படி தெரியும் என்று கேட்டேன். ஒரு சில மாணவர்கள் 'வண்டி வந்திருக்கு' என்றனர். ஒரு சிலர் மிஸ் சாம்பார் வாசனை வருகின்றது என்றனர். ஆமாம் சாம்பார் வாசனை வருகிறது, மற்றவர்களிடமும் உங்களுக்கும் வாசனை வருகின்றதா என்று கேட்டேன். ஆமாம் வருகின்றது என்றனர். எப்படி வாசனையைக் கண்டுபிடித்தீர்கள் என்றதற்கு ஒரு சிலர் மூக்கு என்று சரியாகச் சொன்னார்கள். அப்போ மூக்கு இல்லையென்றால் வாசனை பிடிக்க முடியாதா? என்று கேட்டதற்கு முடியாது மிஸ் என்றனர். மூக்கு நமக்கு வாசனை பிடிக்க மட்டும் தான் பயன்படுகின்றதா என்று கேட்டு, சுவாசிப்பதற்கும் பயன்படுகின்றது என்றேன். இவ்வாறு மாணவர்களுக்குத் தெரிந்தவற்றின் மூலம் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் உடல் பாகங்களைப் பற்றியும் அவற்றின் பயன்கள் பற்றியும் பேசிக் கொண்டேயிருந்தேன்.

## வடிவங்கள் அறிமுகம்:

உடல் பாகங்கள் பற்றி பேசும் பொழுதே இடையில் வடிவங்கள் பற்றியும் பேச ஆரம்பித்தேன். மாணவர்கள் விளையாடும் விளையாட்டுப் பொருட்களின் வடிவங்களை அறிமுகப் படுத்த ஆரம்பித்தேன். வண்டியில் இருக்கும் சக்கரத்தைக் கேட்டு வட்ட வடிவத்தை அறிமுகப் படுத்தினேன். வண்டியின் அமைப்பை வைத்து கட்டம் என்ற வகையில் சதுரத்தையும் செவ்வகத்தையும் வேறு படுத்திக் காட்டி உணர வைத்தேன். மாணவர்கள் ஆரம்பத்தில் சதுரத்தையும் செவ்வகத்தையும் சின்ன கட்டம், பெரிய கட்டம் என்றே பேச ஆரம்பித்தனர். பின்பு கரும்பலகையில் வரைந்து மாணவர்களுக்குத் தெரிய வைத்தேன். பின்பு வகுப்பறையில் இருக்கும் கணிப்பொறி, கதவு, கரும்பலகை, காத்தாடி, மாணவர்களின் கைப்பலகை என ஒவ்வொன்றிலும் வடிவங்களை அறிமுகப் படுத்தினேன். மாணவர்கள் மிகுந்த ஆர்வமுடன் பார்க்கும் பொருட்களிலெல்லாம் மிஸ் இது சதுரம், செவ்வகம், சாப்பிடும் போது தட்டில் மிஸ் இது வட்டம் என்று மழலைப் பேச்சில் கேட்கும் போது மிகுந்த சந்தோசமாக இருந்தது.

## கதை - உடல் பாகங்களும் வடிவங்களும்:

மாணவர்களை வட்டமாக அமரச்செய்து கதை கேட்கலாமா? என்று ஆரம்பித்தேன். 'மைனா' -ன்னு நம்ம மாதிரி ஒரு குட்டி பாப்பா இருந்ததாம். அன்று சனிக்கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால் வீட்டில் தனியாக இருந்ததாம். அப்பா, அம்மா வேலைக்குப் போய்ட்டாங்களாம். நீங்கள் எல்லாரும் விடுமுறை நாளில் வீட்ல என்ன செய்வீங்க? நான் எங்க அக்கா கூட விளையாடுவேன், நான் TV பார்ப்பேன், நான் எங்க அம்மா கூட என்று பல்வேறு பதில் அளித்தனர். ஆனால், நம்ம மைனா கூட விளையாடுறதுக்கு யாருமே இல்லையாம். அதுக்கு பொம்மை என்றால் ரொம்ப ஆசையாம். அதனால், அதுக்கு ஒரு பொம்மை செய்யலாம்னு தோனுச்சாம். உடனே அவுங்க வீட்டுல இருந்த ஒரு வட்ட வடிவ மூடிய எடுத்துச்சாம். பக்கத்துலேயே சதுர வடிவிலிருக்கிற ஒரு அட்டையை எடுத்து இரண்டையும் ஒட்டியதாம். ஏற்கனவே வரைபடத்தாளில் செய்து, பையில் வத்திருந்த ஒட்டிய வட்ட, சதுர வடிவ உருவத்தை எடுத்துக் காண்பித்தேன்.



இதைப் பார்ப்பதற்கு எப்படி இருக்கிறது என்று கேட்டேன். பொம்மை மாதிரி இருக்கு என்றார்கள். எப்படி என்று திரும்பவும் கேட்டேன். வட்ட வடிவம் முகம் மாதிரி தெரிகின்றது, சதுர வடிவம் உடம்பு மாதிரி தெரிகிறது என்றனர். நம் முகத்தில் இருப்பது போன்று இதில் என்ன இல்லை என்று கேட்டதற்கு கண் வேண்டும் என்றனர், ஒரு சிலர் வாய், காது, மூக்கு, வேண்டும் என்றனர். சரி ஒவ்வொன்றாக வரையலாமா என்று முக்கோண வடிவில் சிறிய கண் ஒன்றை வரைந்தேன். ஒரு கண் தான் இருக்குமா? 2 கண் இருக்கும், சரி இப்போ இன்னொரு கண் வரையலாம். இன்னும் வேற என்ன வேண்டும் என்று கேட்டதற்கு ஒரு சிலர் வாய் என்றனர், ஒரு சிலர் மூக்கு என்றனர். கண்ணுக்குக் கீழே என்ன இருக்கும்? மூக்கு தான் இருக்கும். சரி மூக்கு வரையலாம். இப்படியே வாய், காது என ஒவ்வொரு உறுப்புகளையும் சதுரம், செவ்வகம், முக்கோணம் என்று வரைந்து முழு முகமாக மாற்றினோம். உடம்புல என்ன வேண்டும் என்றதற்கு ஒரு சிலர் கால் என்றனர், ஒரு சிலர் கை என்றனர். சரி இப்போ கை வரையலாமா என்று சொல்லிவிட்டு, உடம்புக்கு பின்னால் செவ்வக வடிவில் ஒட்டி வைத்திருந்த கைகளில் ஒன்றை வெளியே எடுத்தேன், ஒரு கைதான் இருக்குமா என்று கேட்டுவிட்டு ஒன்றன் பின் ஒன்றாக கையை அடுத்து கால்களையும் அதே போன்று ஒட்டியிருந்ததை எடுத்து விட்டேன். இப்பொழுது முழு பொம்மையாக வந்து விட்டதா? ஆம், வந்து விட்டது என்றனர். ஒரு சிலர் வயிறு இல்லை என்றனர். வயிறு எங்கே இருக்கும் உடம்புக்குள்ளே, நாம இப்போ பார்த்த கை, கால், கண்ணெல்லாம் எங்கே இருக்கு? வெளியே இருக்கு. சரி இப்போ மைனாவுக்கு ஒரு புது பொம்மை கிடைச்சிருச்சா? ஆமாம், அதை வைத்து அவள் மிகவும் சந்தோசமாக விளையாடலாம் என்றனர்.

## மாணவர்களின் படைப்பாற்றல் திறனுக்கு வழிவகுத்தல்:

அதே மாதிரி நீங்களும் பொம்மை செய்றீங்களா? வீட்டுக்குப் போய் மண்ணுலயோ அல்லது இது மாதிரி வரைபடத் தாளிலோ வரைந்து கொண்டுவாங்க என்றேன். பொம்மை எப்படி செய்யனும் என்று கேட்டு நான் என் பொம்மைக்கு கண் வரைவேன், நீங்களும் வரைவீங்களா? வரைவோம் என்றனர். வேற என்னவெல்லாம் வரைவீர்கள் என்று கேட்டுவிட்டு கண், காது, வாய், மூக்கு, கை, கால் இதெல்லாம் இருக்கவேண்டும் என்பதை அவர்களிடம் உறுதி செய்து கொண்டேன். இப்படித் தான் எனது முன் மழலையர் வகுப்பு குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி கலந்த நாளாக அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவியாக அமையும்படி முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன்.

### சக ஆசிரியர்களின் உணர்வு

- குழந்தைகளுக்கு உடலுறுப்புகளுடன் சேர்த்து வடிவங்களையும் அறிமுகப்படுத்துவது புதுமையாக இருந்தது.
- மாணவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் வகுப்பறையில் வீட்டில் பார்க்கும் பொருட்களைக் கொண்டு உடல் உறுப்புகளையும், வடிவங்களையும் கற்றுத்தருவது மகிழ்ச்சியாக இருந்தது.
- மாணவர்களின் உடல் உறுப்புகளின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தோப்புக்கரணம் போடுதல், சுவைகளை அறிய வைத்தல் போன்றவை மிகவும் உதவியாக இருந்தன.




**விஜயலட்சுமி. இல**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, திலாஸ்பேட்டை

# முன் மழலையர் வகுப்பிற்கான ஆயத்தம்

தற்பொழுது எனது வகுப்பில் 17 குழந்தைகள் உள்ளனர். முன் மழலையர் வகுப்பு 2 இல் உள்ள மாணவர்களைக் கையாளுவது எளிமையாகவே இருக்கும். ஏனெனில் அவர்கள் ஓராண்டு பள்ளிக்கு வந்து பழகியவர்கள். ஆனால் வீட்டுச் சூழலிருந்து புதிதாக வரும் முன் மழலையர் வகுப்பு 1 மாணவர்களுக்கு இடம், சூழ்நிலை, மனிதர்கள் என அனைத்துமே வேற்று உலகம் போல் காணப்படுகின்றது. அதனால் என்னைப் போன்ற முன்மழலை ஆசிரியர்கள் அனைவருக்கும் புதிதாகப் பள்ளிக்கு வரும் குழந்தைகளைப் பள்ளிச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழக்கப்படுத்துவது சற்றே சவாலான ஒன்று தான்.

## வீட்டுச் சூழலை ஏற்படுத்துதல்:

வீட்டுச் சூழலில் இருந்து புதிதாகப் பள்ளிக்கு வரும் குழந்தைகள் பெரும்பாலும் பள்ளிச் சூழலை விரும்புவது இல்லை. அவர்களுக்கு இடம், மாணவர்கள், பொருட்கள் என அனைத்துமே வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. ஆகவே பள்ளி மற்றும் வகுப்பறை என்பதை அவர்களின் வீட்டுச் சூழலை நினைவு படுத்தும் பொருட்டு ஆசிரியர்கள் வகுப்பறைச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றது.

இதனால் நான் என்னுடைய வகுப்பறைக்கு வரும் மாணவர்களுக்கு முதலில் அவர்களுக்குரிய சுதந்திரத்தை ஏற்படுத்தித் கொடுத்தேன் . அவர்களுக்கு என்று தனியான இருக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்கள் விரும்பும் இடத்தில் அமர்வதற்கு அனுமதித்தேன்.. பின்பு





விளையாட்டுப் பொருட்களை அவர்களாகவே எடுத்துப் பயன்படுத்தும் வகையில் அவர்களின் பார்வையில் படும்படியான இடத்தில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தேன். மேலும் அவர்கள் விரும்பும் நேரத்தில் பொருட்களை எடுத்து விளையாடுவதற்கு அனுமதித்தேன் . அவர்களை வகுப்பில் உட்கார வைப்பதற்கு மணிகளைக் கோர்க்கச் செய்தல், காகிதத்தைக் கிழிக்கச் செய்தல், கற்களை அடுக்கச் செய்தல் போன்ற சிறு சிறு விளையாட்டுகளின் மூலம் பழக்கப்படுத்தினேன்.

## ஆரோக்கியமான வழிமுறைகள்:

முன் மழலையர் வகுப்பில் மாணவர்களுக்குப் பழக்கப்படுத்த வேண்டிய முக்கியமான ஒன்று கழிப்பறையைப் பயன்படுத்துதல். நமது அரசு பள்ளிக்கு மிகவும் பின் தங்கிய குடும்பத்திலிருந்து தான் பெரும்பாலான மாணவர்கள் வருகின்றனர். அவர்கள் வீட்டில் போதிய கழிப்பறை வசதிகள் இருக்குமா? என்பதே கேள்விக்குறிதான். அவர்களுக்கு சரியாக மற்றும் தனியாக கழிவறையைப் பயன்படுத்த தெரியாது. அதுமட்டுமில்லாமல் வீட்டுச் சூழலில் அவர்கள் நினைக்கின்ற நேரத்தில் சிறுநீர் கழிப்பார்கள். அது போல தான் வகுப்பிலும் காணப்படுவார்கள், பெரும்பாலும் வகுப்பறைக்குள்ளே நிறைய மாணவர்கள் சிறுநீர் கழிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே அதனை நாம் முறைப்படுத்த வேண்டும். 1 மணி நேரத்திற்கு ஒரு முறை குழந்தைகளைக் கழிப்பறைக்குச் செல்வதற்குப் பழக்கப்படுத்த வேண்டும். கழிப்பறைக்குப் போக வேண்டும் என்று தோன்றும் பொழுது மிஸ் கிட்ட சொல்லனும் என்ற பழக்கத்தையும் ஏற்படுத்தினேன்.

May I go to the rest room என்று கேட்க வேண்டும் என்றும் , மதிய உணவு உண்ணுவதற்கு முன்பும் பின்பும் கைகளைக் கழுவ வேண்டும் என்றும் ஊக்கப்படுத்தினேன். உணவு வாங்குவதற்கு வரிசையில் செல்வதற்குக் குழந்தைகளைத் தயார்படுத்துதல். உணவை அவர்களாகவே உண்ணுவதற்கு உதவி செய்தல் மற்றும் மதிய வேளையில் கழிப்பறைக்குச் சென்று வந்து விட்ட பின்பு தூங்குவதற்கு ஏற்பாடு செய்தல். 1 மணி நேர உறக்கத்திற்கு பின்பு மாணவர்களை விளையாடச் செய்தல் என பள்ளித் தொடக்கத்தில் அதாவது ஜீன் மாதத்தில் பள்ளியில் சேரும் குழந்தைகளைப் பள்ளிச் சூழலுக்கு ஏற்ப தயார்படுத்துவதற்குப் போதிய காலம் தேவைப்படுகின்றது. அதன் பின்னர் அவர்களாகவே அவரவர் வேலைகளைச் செய்வர். வரிசையில் செல்வது, வட்டமாக நிற்பது என அனைத்திற்கும் தயாராகிவிடுகின்றனர்.

## மாதிரி நிகழ்வுகள்

என்னுடைய வகுப்பில் கடந்த ஆண்டு LKG- வகுப்பு மாணவர் ஒருவர் மதிய வேளையில் தூங்கும் போது தினமும் படுக்கையிலேயே சிறுநீர் கழிப்பது வழக்கமாக இருந்தது. இதனை அவனுடைய அம்மாவிடம் தெரிவிக்கும் பொழுது அவர் எங்களுக்கு மிகுந்த ஒத்துழைப்புக் கொடுத்தார். தினமும் இரண்டு ஆடைகள் கொடுத்து விடுவது



மற்றும் நேரம் கிடைக்கும் பொழுது பள்ளிக்கே வந்து பாயை அலசிக் கொடுக்கவும் செய்தார். கடந்த ஓராண்டு முழுவதும் இது போலதான் நடந்தது.

இந்த ஆண்டு அதாவது UKG வந்தும் இதே நிலையே தொடர்ந்தது. இப்படியே தொடர்ந்தால் சரிவராது என்று எனக்கு தோன்றியது. எனவே அவனை மதிய வேளையில் தூங்க வைக்காமல் எதாவது விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்து விளையாடச் செய்தேன். ஆனால் சிறிது நேரம் கழித்து உட்கார்ந்த படியே தூங்கிவிடுவான். அப்போதுதான் அவன் தூங்கவும் வேண்டும், சிறுநீரும் கழிக்கக் கூடாது, அதற்கு என்ன செய்யலாம் என்று சிறிய சிந்தனை தோன்றியது. அவன் தூங்கி 30 நிமிடத்திற்கு மேல் ஆன பின்பு அவனை எழுப்பி கழிப்பறைக்கு அனுப்பி வைக்கத் துவங்கினேன். இதற்கு நல்ல பலன் கிடைக்கின்றது. தற்போது அவன் என்றாவது ஒரு நாள் தான் படுக்கையிலே சிறுநீர் கழிக்கின்றான்.

மேலும் அவன் படுக்கையிலே சிறுநீர் கழித்து விடுவதை நினைத்து கூச்சப்படுவான். அதனாலேயே யாரிடமும் பேசமாட்டான். அவனுடைய பேர் சொல்லி கூப்பிட்டால் அமைதியாக நிற்பான். இப்பொழுது அவனுடைய செய்கையில் நிறைய மாற்றங்கள் தெரிகின்றது. கூச்சமின்றி சரளமாகப் பேசவும் ஆரம்பித்திருக்கின்றான்.

## சக ஆசிரியர்களின் உணர்வு

- தாங்கள் வகுப்பறையில் சந்திக்கும் சிரமங்களையும், தங்கள் மனதில் தோன்றியதையும் மற்ற ஆசிரியர்களின் முன்னிலையில் வெளிப்படையாகப் பேசியது மிகவும் சிறப்பு.
- மாணவர்களின் வீட்டுச் சூழலுக்கு ஏற்ப வகுப்பறை சூழ்நிலையை உருவாக்கி கொடுத்திருப்பது மிகவும் நன்றாக இருந்தது.
- படுக்கையிலே சிறுநீர் கழிக்கும் மாணவர்களைக் கையாண்ட விதம் மிகவும் நன்றாக இருந்தது.

## குழந்தைகளின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு:

3 அல்லது 4 வயது குழந்தைகள் வீட்டுச் சூழலில் இருந்து பள்ளி என்ற சூழலில் முன் மழலையர் வகுப்பில் வந்து அமர்ந்திருந்தாலும் குழந்தைகளாகத் தான் அமர்ந்திருக்கின்றனர். நமது குழந்தைகளின் பெற்றோர்கள் இருவரும் காலையில் எழுந்ததும் கூலி வேலைக்குச் செல்பவர்களாகத் தான் பெரும்பாலானோர் உள்ளனர். மேலும் கூட்டுக்குடும்பமும் இல்லாத சூழ்நிலை. இதனால் தான் முன் மழலையர் வகுப்பு ஆசிரியர்கள் அவர்களுக்கு ஆசிரியராக மட்டும் அல்லாமல் அம்மாவாகவும் இருந்து அவர்களின் எல்லா வகையான முழுமையான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் பெரும்பங்காற்றிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.



**கு. கன்னிகா**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, காமராஜ் நகர்

# மகிழ்வான வழியில் மொழிக்கற்பித்தல்



முன் மழலையர் வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கான கற்பித்தல் என்பதை விட அவர்களுக்கு அறிந்துகொள்ள உதவி செய்தல் என்பது மிகவும் பொருந்தும் என எண்ணுகின்றேன். தன்னைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் செயல்கள் பொருள்கள் போன்றவற்றின் தன்மை, நிறம், வடிவம், வேறுபாடுகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள நாம் குழந்தைகளுக்கு உதவுவதன் மூலம் அவர்களின் கற்றல்திறனை மேம்படுத்தலாம்.

## உயிர் எழுத்துக்களை – அறியச்செய்தல்

மாணவர்களிடம் உயிர் எழுத்துக்களைத் தனித்தனி எழுத்துக்களாக அறிமுகப்படுத்தி சொல்லிக் கொடுக்கும் பொழுது அது ஏதோ புதிதானது என்று எண்ணி ஒரு சிலர் நாட்டம் இல்லாமலும், ஒரு சிலருக்கு புரியாமலும், ஒரு சிலர் மறந்தும் விடுகின்றனர்.

- **உயிர் எழுத்துக்களைத் தனித்தனி எழுத்துக்களாக அறிமுகப்படுத்திச் சொல்லிக் கொடுக்கும் பொழுது, அது ஏதோ புதிதானது என்று எண்ணி ஒரு சிலர் நாட்டம் இல்லாமலும், ஒரு சிலருக்குப் புரியாமலும், ஒரு சிலர் மறந்தும் விடுகின்றனர்.**
- **அவர்கள் அன்றாடம் உபயோகிக்கும் வார்த்தைகள் மற்றும் அவர்களைச் சுற்றி இருக்கும் சூழ்நிலைகள் மூலமாக, அம்மா, அப்பா, ஆடு, இலை என்பது போன்றஅவர்களுக்கு மிகவும் பரிச்சயமான வார்த்தைகளிலிருந்து உயிர் எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்தால் மிகவும் எளிதாக இருக்கும்.**

அதனால் அவர்கள் அன்றாடம் உபயோகிக்கும் வார்த்தைகள் மற்றும் அவர்களைச் சுற்றி இருக்கும் சூழ்நிலைகள் மூலமாகவே சொல்லிக் கொடுக்க விரும்பினேன். அம்மா, அப்பா, ஆடு, இலை என்பது அவர்களுக்கு மிகவும் பரிச்சயமான வார்த்தைகள் அதிலிருந்து உயிர் எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்தால் மிகவும் எளிதாக இருக்கும் என்று எண்ணி முயற்சி செய்து பல பட அட்டைகளைத் தயார் செய்ய ஆரம்பித்தேன்.

## சுற்றுச் சூழலில் உள்ள பொருட்களின் பெயர்களைக் குழந்தைகளிடம் கேட்டல்

வாய்மொழியாக வரும் பதில்களில் உள்ள உயிரெழுத்துக்களைச் சுட்டிக்காட்டினேன்.

இலை – 'இ' என்ற எழுத்து உயிரெழுத்து எனில் தொடர்ந்து இலையின் நிறம், வடிவம், தன்மை, பயன்பாடுகள் முதலானவற்றைப் பற்றியும் பேசினோம்.

இம்முறையில் உயிரெழுத்துகளின் கற்றலும் ஊடாக பிற அறிவுச் செய்திகளும் குழந்தைகளுக்குச் சென்று சேரும். மேலும் உயிரெழுத்துகள் பற்றிய கருத்தைக் குழந்தைகள் மனதில் நன்றாகப் பதியச்செய்ய சில, பல செயல்பாடுகளையும் அவர்களைச் செய்யச் செய்தேன்.

## செயல்பாடுகள்

1. சிறு கற்கள், மணிகள் மற்றும் கொட்டைகள் போன்றவற்றைக் கொண்டு உயிரெழுத்துகளை உருவாக்கச் செய்தேன்.

2. எமது பள்ளியில் உள்ள பெரிய மைதானத்திற்கு குழந்தைகளை அழைத்து வந்து விரலால் வடிவங்கள் மற்றும் கோடுகளை வரையச்செய்தேன். பிறகு அவற்றிற்குரிய ஓசைகளைக் கற்றுக்கொடுத்தேன். மேலும் இதன் மூலம் அவர்களின் மென்தசை வளர்ச்சி தூண்டப்படுவதாக உணர்கிறேன்.

3. மேற்குறிப்பிடப் பெற்ற வடிவங்கள் அல்லது கோடுகளுக்கு உரிய பெயர் கொடுத்ததன் மூலம் அவற்றிடையே உள்ள வேறுபாட்டை உணரச் செய்தேன்.

- படுக்கைக் கோடு
- நிற்கும் கோடு
- மேட்டுக் கோடு
- வளைவுக் கோடு
- பூஜ்ஜியக் கோடு

இவ்வாறு ஒருங்கிணைந்த செயல்பாடுகளினால் குழந்தைகள் கற்றலை உற்சாகத்துடன் மேற்கொண்டனர். அதுமட்டுமின்றி செயல்பாடுகளில் ஈடுபடும்போது ஐந்து விதமான வளர்ச்சிகளையும் அதாவது Language (மொழி) Cognitive (அறிவு) Social (சமூகம்) Emotional (மனயெழுச்சி) Physical Motor (உடலியக்கம்) ஆகியவற்றைப் பெறுகின்றனர்.

இம்முயற்சிகளால் ஒரு மாதத்திற்குள் அனைத்து நிலையில் உள்ள குழந்தைகளும் (புரிதலில் முதன்மையானவர்கள் முதல் சற்றுப் பின்தங்கியவர் வரை) உயிரெழுத்துகளில் வடிவம் மற்றும் ஓசை ஆகியவற்றை திறம்படக் கற்றுக் கொண்டது கண்கூடாகத் தெரிந்தது. மேலும் LKG மாணவர்கள் இருபத்திரண்டு நாட்களிலும் UKG மாணவர்கள் ஏழு நாட்களிலும் உயிரெழுத்துகளைக் கற்றுக் கொண்டனர்.



கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கும் குறைவான கால அளவிலேயே உயிரெழுத்துகளை அவர்களுக்குப் போதிக்க முடிந்ததை எண்ணிப் பெருமிதம் கொள்கின்றேன்.

## இன்னும் பிற உத்திகள்

மாணவர்களின் பெருதசை வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரியும் பாடல்களைப் (Action Songs) பாடி ஆடக் கற்றுக் கொடுத்தேன்.

### பாடல்

பள்ளி கூடம் வந்தேன்!
பாடம் படித்து மகிழ்ந்தேன்!
எண்ணங்களில் தோன்றியதை
எழுதிப்பார்த்து வியந்தேன்!
எத்தனை எத்தனை கோடுகள்
எழுத்தில் - எத்தனை எத்தனைக் கோடுகள்!
அத்தனைக்கும் பெயருண்டு
அதைச் சொல்வேன் கேளுங்கள் இன்று!
படுக்கும் கோடு, நிற்கும் கோடு
வளைந்து நெளிந்து உருண்டும் வந்து
வரைவதில் மகிழ்ச்சி அளிக்கும் கோடு.

இப்பாடலை உரிய சந்த நயத்தோடு கைகால்களை அசைத்தபடி குழந்தைகள் பாடி ஆடுவது அவர்களின் பெருதசை வளர்ச்சிக்கு உதவியாக உள்ளது.

மேலும் அட்டைப்படத்தில் உள்ள 'அ' வைக் காண்பித்து சிலேட்டில் சுண்ணக்கட்டிகளால் எழுதவைத்தேன். மணலில் 'அ' எழுதிப்பழகிய குழந்தைகள் விரைவிலேயே சிலேட்டிலும் அற்புதமாக எழுதி அசத்தினார்கள்.

அதேபோல் உயிரெழுத்துகளின் எண்ணிக்கை பற்றிக் கூறும்போது 'பன்னிரெண்டு' வரை எண்களையும் அவர்கள் தமிழில் கூறக் கற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து உயிரெழுத்துகளுடன் சொற்களை இணைக்கும் முயற்சியாக அ–அணில், ஆ–ஆடு என்று பட அட்டைகளை எழுத்தோடு இணைக்கும் விளையாட்டு விளையாட வைத்து கற்றுக் கொடுத்தேன்.

இவ்வாறாக உயிரெழுத்து என்ற ஒரு கருப்பொருளைக் கொண்டே மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் அனைத்துச் செயல்பாடுகளையும் வகுப்பறையில் நிகழ்த்த முடியும் என்பதை உங்களுடன் மகிழ்வோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

---



**ஜெயசுதா. மு**
முன்மழலையர் ஆசிரியர்
தி.வ. அ. மே. நி ப.
கதிர்காமம்

# கற்றல் திறனை மேம்படுத்துதல்

## கற்றல் செயல்பாடு 1

## வீட்டு விலங்குகள் காட்டு விலங்குகள்

மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே பயிலும் எமது பள்ளியில் வீட்டுச் சூழல் காரணமாக தொடர் விடுமுறை எடுக்கும் மாணவர்கள் அதிகம். அவர்களை தொடர்ந்து பள்ளிக்கு வர ஆர்வத்தை தூண்டும் வகையில் நான் கையாண்ட சில செயல்பாடுகளை இங்கு பகிர்கிறேன்.

வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் பற்றி கற்றுக்கொடுக்கும் பொழுது படத்தினைக் காண்பித்தல், முகமூடிகளைப் பயன்படுத்தி கற்றுக்கொடுத்தல் என்பன போன்ற செயல்பாடுகளையே இதுவரை பயன்படுத்தி வந்தோம். இதனை மாற்றியமைத்து என்ன செயல்பாடு செய்யலாம்? என யோசிக்கும் பொழுது குழந்தைகளைத் தனித்தனியே பங்கேற்று செயல்பட வைத்தால் அவர்களின் கற்றல் திறன், நினைவாற்றலை மேம்படுத்த இயலும் என்று எண்ணினேன். அதற்கு கீழ்க்கண்ட செயல்பாடு மிகவும் உதவியது. மாணவர்களும் நிர்பந்தம் இல்லாமல் மகிழ்ச்சியுடன் கற்றனர்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே ஒவ்வொரு விலங்கின் (வீட்டு, காட்டு விலங்குகள்) கோட்டுப் படங்களை நகல் எடுத்து கொடுத்தேன். அவற்றை குழந்தைகளை வண்ணம் தீட்ட வைத்து அதன் பெயரினைக் குழந்தைகளுக்குச் சூட்டி படத்தினைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு பேச வைத்தேன். எடுத்துக்காட்டாக “நான் ஒரு வீட்டு விலங்கு; நான் உங்களுக்கு குடிக்கப் பால் தருவேன்; மிகவும் அழகானவள்; எனது பால் உடலுக்கு சக்தியை அளிக்கும்; பாலின் நிறம் வெண்மை. நான் யார்?” என்று கூறி சிறிது இடைவெளி விட்டு நான் தான் பசு (cow).

“ நான் ஒரு செல்ல பிராணி; வீட்டைக் காப்பேன்; நன்றியுடன் வாலை ஆட்டுவேன்; நான் யார்?” “நான் தான் நாய்” (Dog). இது போல் cat, lion, tiger, போன்ற விலங்குகளைப் பற்றி கூற வைத்து கற்றுக்கொடுத்தது மிகவும் நல்ல அனுபவமாக இருந்தது. மேலும் விலங்குகளைப் பற்றி குழந்தைகள் தங்கள் மழலை மொழியில் கூறும் போது மிகவும் அருமையாக இருந்தது.

இவ்வகை கற்றல் செயல்பாட்டின் மூலமாக குழந்தைகள் மிகவிரைவில் கற்றுக் கொண்டனர். வண்ணம் தீட்டும் செயல்பாடு அவர்களின் மென் தசைவளர்ச்சிக்கும், நிறங்களின் பெயர் அறியவும், விலங்குகளின் பெயர் மற்றும் அவற்றின் பயன்பாட்டுகள் பற்றி அறிந்து கொள்ளவும் பயன்பட்டது. இச்செயல்பாடுகளைப் போலவே பறவைகள், வாகனங்கள் போன்றவற்றிக்கும் செயல்பாடுகளை உருவாக்கலாம். இவ்வாறு கற்றுக்கொள்ளும்போது கற்றல் திறனும் மிக விரைவில் அதிகப்படுத்தப்பட்டது. ஆர்வமும், மகிழ்ச்சியும் குழந்தைகளிடையே அதிகமானது அவர்களே பெயர் கூறி கற்றவிதம் குழந்தைகளிடையே ஆர்வத்தினையும் நானே கூற வேண்டும் என்ற எதிர்பார்ப்பினையும் அதிகரித்தது.

- **மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு விலங்காக மாறி அதை பற்றி பேசி புரிந்து கொண்டது.**
- **மாணவர்களின் பெயரில் தொடங்கும் முதல் எழுத்தினை கொண்டு அவரவர்க்கு விலங்குகள், பழங்கள், பூக்கள் போன்றவற்றின் பெயரை சூட்டி அவர்களை ஊக்குவித்தது.**

## கற்றல் செயல்பாடு 2

## படம் பார்த்து படிக்க வைத்தல்

குழந்தைகளுக்குப் படம் பார்த்து படித்தலில் ஆர்வத்தினை அதிகப்படுத்தும் பொருட்டு அவரவர் பெயரில் இருக்கும் முதல் எழுத்தினைக் கொண்டு உருவாகும் பழங்கள், விலங்குகள், பூக்களின் பெயரினை வைத்து கற்றுக்கொடுக்கும் முயற்சி செய்து அதில் வெற்றியும் அடைந்தேன்.

குழந்தைகள் பெயர்கள் வரிசைபட்டியலில் a-apple முதல் z for -zebra வரையில் முதலில் அவர்களை வரிசைப்படுத்தினேன் .

எடுத்துகாட்டாக Apple, Anusri, Banana – Bharath, Cat – cadir, Doll – Delsia, to Mango – Mugundan, Rabbit – Ragavi, Sun – Sanjana etc,. இதன் அடிப்படையில் வகுப்பில் மாணவர்களின் பெயர்களைக் கூறி அழைக்கும்போது அதனுடன் பழங்கள், விலங்குகள், பூக்களின் பெயர்களை வைத்து அழைக்கும் போது மிக குறுகிய நாட்களுக்குள் அவர்களே அவர்கள் பெயரின் விளக்கத்தினைக் கூறும் பொழுது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எடுத்துக்காட்டாக நான் ஒரு பறவை, நான் மிகவும் அழகானவள் என அவரவர் விருப்பம் போல் கற்றனர்.

இதன் மூலமாக கற்கும் திறனும் ஆர்வமும் அதிகமானது. குறிப்பிட்ட பழங்கள், விலங்குகள், பூக்களின் பெயர் மட்டுமில்லாமல் அவற்றை பற்றிய வேறு சில விபரங்களும் அவர்களுக்கு தெளிவாயிற்று. அவர்களின் மொழித்திறனும் வளர்ந்தது. படத்தின் பெயரினையும், மறக்காமல் நினைவில் வைத்திருந்தனர். குழந்தைகளுக்கு அவரவர் விருப்பம்போல விளையாட்டு, பாடல் மூலமாக கற்றல் போல மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை. இச்செயல்பட்டின் மூலமாக ஒரே நேரத்தில் பறவைகள், விலங்குகள், பழங்கள், பூக்களின் பெயர்கள் அவர்களுக்கு நினைவில் நின்றது மிகவும் மகிழ்ச்சி அளித்தது.



**ஜி. மணிமேகலை**
முன்மழலையர் ஆசிரியர்
அ. ந. ப பிச்சைவீரன்பேட்

# பூக்கும் வகுப்பறை

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் குழந்தைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் வகையிலான செயல்பாடுகள், கதைகள், பாடல்களை வகுப்பறையில் செயல்படுத்த முயற்சி செய்வது முன் மழலையர் வகுப்பு ஆசிரியரின் முக்கியக் கடமையாகும். அதனால் தினந்தோறும் எனது வகுப்பறை நிகழ்வுகளைப் பயனுள்ளதாக்க முயற்சிக்கின்றேன். அந்த வகையில் எனது வகுப்பில், பூக்கள் பற்றிய தலைப்பில் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் செயல்பாடுகளாக அறிவாற்றல், மொழி, நுண் தசை, பெருந்தசை இயக்கம், சமூக உணர்வு மற்றும் படைப்பாற்றல் ஆகிய அனைத்து பரப்புகளிலும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த செயல்முறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

## பூக்கள் அறிமுகம்

இதற்கு முன்னரெல்லாம் பூக்கள் பற்றிய தலைப்பைக் கற்பிக்கும் பொழுது கரும்பலகையில் பூக்களின் படத்தை வரைந்து மாணவர்களுக்குச் சொல்லி கொடுப்பேன். ஒரு சிலர் புரிந்து கொள்வர், மற்றவர் புரிந்து கொள்ள முயற்சி செய்வர். ஆனால், இந்த வருடம் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே என்பதால் ஒரு சில பூக்களை வகுப்பிற்கு எடுத்து வந்து, மாணவர்களைத் தொட்டுப் பார்த்து, நறுமணங்களையும் நுகர்ந்து உணரச்செய்தேன். இவ்வாறு செய்வது அவர்களின் முழு உடல் வளர்ச்சிக்கும் கருத்துருவாக்கத்திற்கும் உதவுகின்றது. இருந்தாலும் மாணவர்களைச் செய்யவைக்கும் பொழுது மிகுந்த கவனத்துடன் தான் செய்ய வைக்கவேண்டும். பூக்களின் மணத்தை நுகரச் செய்யும் போது அவர்கள் எல்லா பூக்களையும் நுகர்ந்து பார்க்க வாய்ப்புள்ளது. இது ஒருசில மாணவர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது. என் வகுப்பில் 6 மாணவர்களே இருப்பதால் மிகுந்த சிரமம் இல்லை. ஆனால் 20 அல்லது 30 மாணவர்கள் இருக்கும் பொழுது இதை நாம் கவனத்தில் கொண்டால் நல்லது என்று தோன்றியது.

## இயற்கை நடைபயணம்

பள்ளிக்கூடப் படிப்பு என்பது பாடப்புத்தகத்தில் இருப்பதைப் படிப்பது தான் என்று மாணவர்களின் மனதில் படிந்துள்ளது. ஆனால், இயற்கையோடியைந்து அதனை உற்றுநோக்கி இயற்கையைச் சரியாகப் புரிந்து கொண்டு, இயற்கை தரும் பாடங்களைப் பின்பற்றி நடப்பது தான் கல்வி. நாம் நம்மைச் சுற்றி நடைபெறும் நிகழ்வுகளை தான் புத்தகத்தில் இருந்து அறிந்துகொள்ள முற்படுகின்றோம் என்பதை அறிய தவறி விடுகிறோம். மேலும், மாணவர்களை அவர்கள் வசிக்கும் சுற்றுப் புறத்திற்கே அழைத்துச் சென்று அவர்கள் அன்றாடம் பார்க்கும், பழகும் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தும் பொழுது அவர்களுடைய சிந்தனைத் திறன் அதிக்கரிக்கின்றது. இதனை முன் மழலையர் வகுப்பிலிருந்தே மாணவர்களின் மனதில் விதைக்க விரும்பினேன்.

- **இயற்கையோடியைந்து அதனை உற்றுநோக்கி இயற்கையைச் சரியாகப் புரிந்து கொண்டு, இயற்கை தரும் பாடங்களைப் பின்பற்றி நடப்பது தான் கல்வி.**
- **மாணவர்கள் பூக்களைத் தொட்டுப் பார்த்து, முகர்ந்து நறுமணங்களை உணரும் பொழுது, தங்கள் உடல் உறுப்புகள் மற்றும் புலன் உணர்வு உறுப்புகள் முழுவதையும் பயன்படுத்த வேண்டியுள்ளதால் அவர்களின் முழு உடல் வளர்ச்சிக்கும் முழுமையான கருத்தாக்கம் உருவாகவும் உதவுகின்றது.**
- **மாணவர்கள் வகுப்பறையை விட களப்பயணத்தில் தான் கற்றுக் கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.**

## இயற்கை நடைபயணம் முன் ஆயத்தம்

மறுநாள் மாணவர்களை வகுப்பறையிலிருந்து வெளியே அழைத்துச் செல்ல முடிவு செய்து அவர்களிடம் பேச ஆரம்பித்தேன். நம் பள்ளி வளாகத்தில் என்னென்ன பூச்செடிகளெல்லாம் இருக்கின்றன என்று கேட்டேன். மாணவர்களுக்கு பூக்களின் பெயர்கள் தெரியவில்லை என்பதால், மிஸ் வெள்ளை கலர்ல பூ இருக்கு, செம்பருத்தி பூ இருக்கு, புளூ கலர்ல இருக்கு என்று கூறினர். சரி நம்ம பள்ளிக்கு அருகில் ஏதேனும் பூச்செடிகள் பார்த்திருக்கின்றீர்களா? என்று கேட்டதற்கும் மேற்கூறியது போன்றே பூக்களின் கலரை மட்டுமே கூறினர். சரி வெளியே சென்று பார்ப்போமா? என்றதும் மிகுந்த உற்சாகமடைந்தனர். வெளியே அழைத்துச் செல்லும் முன் மாணவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டதற்கு, 'கத்தக் கூடாது, அமைதியாக இருக்கணும்' என்றனர். அங்கே இங்கே ஓடலாமா? என்றதற்கு, இல்லை ஓட மாட்டோம் என்றனர். நாம் இப்போது வெளியில் சென்று பூச்செடிகளைப் பார்க்கப் போகின்றோம், ஏதாவது பூக்களைப் பறிக்க வேண்டும் என்றால் என்னிடம் கேட்டுத் தான் பறிக்க வேண்டும் என்றேன்.

## மாணவர்களின் ஆர்வம்

பின்பு, வகுப்பறையிலிருந்து மாணவர்களை வெளியே அழைத்துச் சென்று பள்ளியைச் சுற்றியுள்ள செடிகளிலிருக்கும் பூக்களையும், இலைகளையும் பார்க்கச் செய்தேன். மாணவர்கள் ஆர்வ மிகுதியில் மிஸ் இங்க பாருங்க, மிஸ் இந்த பூவைப் பறிக்கவா, மிஸ் அந்த இலையை பறிக்கவா என்று ஆர்வமாய் இருந்தனர். அன்று பார்த்து மல்லிகைப் பூச்செடியில் பூ பூக்கவே இல்லை, இருந்தாலும் மாணவர்கள் விருப்பப்பட்டதால் இலையை பறிக்கச் செய்தேன். பள்ளிச் சுவருக்குப் பின்னால் இருந்த பூச்செடியை நோக்கி சந்துக்குள் ஓட ஆரம்பித்தனர். மாணவர்களைத் தடுத்து யாரேனும் ஒருவர் மட்டும் பாதுகாப்பாகச் செல்லுமாறு அறிவுறுத்தினேன். பின்பு அனைவரையும் வகுப்பிற்குள் வருமாறு அழைத்தேன்.

## பயணத்திற்குப் பிந்தைய வகுப்பறைச் செயல்பாடுகள்

மாணவர்கள் பறித்துவந்த பூக்கள் அனைத்தும் அவர்கள் தினந்தோறும் பார்க்கும் பூக்கள் தான். ஆனால் அவற்றின் பெயர்கள் அவர்களுக்குத் தெரியவில்லை. அந்தப் பூக்களின் பெயர்,



வண்ணம், வாசம் பற்றி கலந்து பேசினோம். பூக்களின் பெயர்களை அறிந்து கொண்டனர். (நந்தியா வட்டை, நித்திய கல்யாணி, செம்பருத்தி, அரளி பூ). பின்பு அவற்றின் வடிவமைப்பை வைத்து எது பெரியது, எது சிறியது என அறிந்து கொண்டனர். பூச்செடியின் இலைகளின் அமைப்பைத் தொட்டுப் பார்த்து உணர்ந்து கொண்டனர். பூச் செடிகள் வளர்கின்ற இடங்கள், பூச் செடிகளின் வகைகள் பற்றியும் கலந்து பேசினோம். மேலும், மாணவர்கள் பூக்களின் பாகங்களையும், செடிகளின் பாகங்களையும் அறிந்து கொண்டனர். இறுதியாக அவர்கள் பறித்துக் கொண்டு வந்திருந்த பூக்களைக் கொண்டு படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தும் வகையில் ஏதாவது செய்ய வைக்க முயற்சி செய்தேன். பூ எதற்கெல்லாம் பயன்படுத்தப் படுகின்றது என்ற வகையில் கேள்வியைக் கேட்டேன். அதற்கு தலையில் வைக்க, சாமிக்கு வைக்க, மாலை செய்ய போன்ற பல பதில்களில் இருந்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்துச் சொல்லவும் உதவும் என்ற பதிலையும் வரவைத்தேன். பின்பு மாணவர்களிடம் நாம் இப்போது அழகான பூங்கொத்து ஒன்றை செய்யலாமா? எப்படிச் செய்யலாம்? என்று கேட்டேன். அதற்கு மாணவர்கள் சிறியதாகச் செய்யலாம் என்று சொன்னதன் பேரில் அவர்களுக்குத் தாளில் கோளவடிவம் செய்து கொடுத்து பூக்களை அடுக்கச் சொன்னேன். மாணவர்கள் பூக்களோடு இலைகளையும் சேர்த்து மிகவும் அழகான பூங்கொத்து செய்தது எனக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது. பின்பு வகுப்பறையில் ஒருவருக்கொருவர் பூங்கொத்து கொடுத்து மகிழ்ந்தனர். இவவாறு முன் மழலையர் வகுப்பில் மாணவர்களை இயற்கை நடைபயணம் அழைத்துச் செல்வதன் மூலம் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டுவது மட்டுமில்லாமல் அவர்கள் சுற்றுப்புறத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த உதவுகின்றது. மேலும், மாணவர்கள் வரிசையாகச் செல்லுதல், ஒருவருடன் ஒருவர் கலந்து பேசுதல், விட்டுக்கொடுத்தல் போன்ற நற்குணங்களையும் வெளிக்கொணர முடிகிறது.

## கற்பித்தல் நோக்கத்தைப் பூக்களின் மூலம் நுகர்ந்ததில் மகிழ்ச்சி

### சக ஆசிரியர்களின் உணர்வு

- இயற்கை நடைபயணத்தின் மூலம் மாணவர்கள் தங்களின் சுற்றுப்புறத்தை அறிந்துகொள்ளவும், தாங்களாகவே முயன்று கற்றுக் கொள்ளவும் வாய்ப்பளித்த முயற்சி பாராட்டுக்குரியது.
- மாணவர்கள் வகுப்பறையை விட களப்பயணத்தில் தான் கற்றுக் கொள்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டோம்.
- களப்பயணத்தின் போது அவர்கள் பறித்து வந்திருந்த பூக்களைக் கொண்டு பூங்கொத்து செய்ய வைத்தது மிகவும் பிடித்திருந்தது.

இது மட்டுமின்றி பூக்கள் பற்றிய பாடல்கள், கதைகள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தேன். இதனால் முன் மழலையர் வகுப்பில், கற்றல் கற்பித்தலின் நோக்கத்தை நிறைவு செய்த மன நிறைவு கிடைத்தது. மாணவர்களிடம் பூக்களைப் பற்றி கலந்துரையாடியது, பூக்களை வைத்து வண்ணம் தீட்டியது, இயற்கை நடைபயணம், பூங்கொத்து செய்தது, டிங்டி, டிங்க பாடல் பாடியது மற்றும் இதழ்களை வண்ணத்துப் பூச்சி ஓவியத்தில் ஒட்டியது ஆகிய அனைத்து செயல்பாடுகளும் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் செயல்பாடுகளாக அமைந்தன. அறிவாற்றல், மொழி, நுண்தசை, பெருந்தசை இயக்கம், சமூக உணர்வு மற்றும் படைப்பாற்றல் ஆகிய அறிவுப் பரப்புக்களில் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கியதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இனி வரும் வகுப்புகளும் இது போலவே மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவிட வேண்டுமென்று விரும்புகின்றேன்.



**ருக்மணி. பா**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, சஞ்சீவிராயன்பேட்

# பூக்கள் வகுப்பறையும் கொண்டாட்டமும்

## எனது பள்ளி

எனது பள்ளியில் 102 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் உள்ளனர். எனது வகுப்பறையில் 15 மாணவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருந்தாலும், பொருளாதாரத்தில் மேம்பட கல்வியின் எதிர்பார்ப்பு இருக்கும் பெற்றோரை உடையவர்கள். இந்த நிலையில் குழந்தைகளின் மனதில் அச்சாணியாய் பதியும் வகையிலும் வழிகாட்டுதலுடனும் நடத்தப்பட்ட ஒரு பாடம்.

## பாடத்தலைப்பு நோக்கம்:

பூக்கள் தலைப்பைக் கொண்டு மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய கருத்துக்கள்:

பூக்களின் தன்மை ( மென்மையானது)

பூக்களின் வண்ணங்கள் ( நிறங்கள்)

செடிகளின் தன்மை ( செடி, கொடி, தண்ணீர்)

செடி வளர்க்கும் விதம் ( சூரிய ஒளி தண்ணீர்)

மரம் வளர்ப்பதன் அவசியம் (மழை பெறுதல்)

இவ்வாறு பல்வேறு நோக்கங்களுடன் குழந்தைகளிடம் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன? என்று கேட்கும் போது பொம்மை, மிட்டாய், காய், ஐஸ்கீரிம் , ஆப்பிள், வாழைப்பழம் என்று பலவற்றைக் கூறினார்கள் வாசனையுள்ளது என்ன பிடிக்கும்? என்ற போது, பூக்கள் என்ற வார்த்தை அவர்களிடம் இருந்து வந்தது.

பல்வேறு வகையான பூக்களைப் பல வண்ணங்களில் குழந்தைகளிடம் காட்டும் போது அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. வண்ண வண்ண மலர்கள் கண்ணைப் பறிக்கும் போது, அவர்களிடம் பேச்சு இல்லை. கண்களில் மகிழ்ச்சி மட்டுமே இருந்தது.

பூக்களை அவர்களிடம் கொடுத்து தொட்டுப்பார்க்கச் சொல்லும் போது, பூக்கள் மென்மையாக இருக்கும் என்று அறிந்தனர் சில பூக்களின் வண்ணங்களையும் சரியாகக் கூறினார்கள் பூக்களைக் கையாளும் விதமும் அவர்களுக்குக் கூறப்பட்டது இதிலிருந்து

- **பூக்கள் பற்றிய அடிப்படை மற்றும் ஆழ்ந்த, நிலையானப் புரிதலை குழந்தைகளிடம் கொண்டு செல்லுதல்.**
- **குழந்தையின் வளர்ச்சி புலன்களை அடிப்படையாகக் கொண்ட வெவ்வேறு வகையான திட்டமிடப்பட்ட வகுப்பறை செயல்பாடுகள் மூலம் கற்றலை இனிமையாக்குதல்.**
- **கற்றலில் குழந்தைகளை மையப்படுத்திய வகுப்பறை மற்றும் பள்ளிஅளவிலான நிகழ்ச்சிகளின் முக்கியத்துவமும் அவற்றின் நேர்மறை தாக்கங்களும்.**

நிறங்களை எளிதில் அறிந்துகொண்டனர். மேலும் பூக்களின் பயன்பாடுகள் பற்றி வினா எழுப்பும் போது பூக்கள் தலையில் சூடவும், சாமிக்கு வைக்கவும், மாலை செய்யவும், கல்யாணத்திற்கும் உதவும் என்று கூறினார்கள்.

## செயல்பாடுகள் :

பூக்களை வரையச் செய்தல்

பூக்களைக் கொண்டே வண்ணம் தீட்டுதல்

பூக்களின் கோட்டு படத்தின் மேல் - வகைவகையான பூக்களின் இதழ்கள் கொண்டு வண்ணம் தீட்டினர். குழந்தைகள் இந்த செயல்பாட்டில் மிகவும் ஈடுபாட்டுடன் செய்தனர்.

## பாடல் - ஆடலுடன்

டிங்கடி டிங்க என்று ஆரம்பமாகும் தமிழ் பாடலையும் 'Flower Flower everywhere' என்று ஆரம்பமாகும் ஆங்கில பாடலையும் பாடி மகிழ்ந்தனர்.

டிங்கடி டிங்க டிங்கடி டிங்க

எங்கே போறீங்க எங்கே போறீங்க

மல்லிகை பூ பூத்திருக்கு பார்க்க போறேங்க







மல்லிகைப் பூ வே மல்லிகைப் பூவே
எங்க போறீங்க? எங்க போறீங்க?
மஞ்சள் சாமந்தி பூத்துச்சாண்ணு
பார்க்க போறேங்க?
சாமந்தி பூவே சாமந்தி பூவே
எங்க போறீங்க? எங்க போறீங்க?
சிவப்பு ரோஜா பூத்திருக்கானு
பார்க்க போறேங்க?
ரோஷா பூவே ரோஜா பூவே
எங்க போறீங்க? எங்க போறீங்க?
வெள்ளை தாமரை பூத்துச்சாண்ணு
பார்க்க போறேங்க
தாமரை பூவே தாமரை பூவே
எங்க போறீங்க? எங்க போறீங்க?
பூத்த பூவை பார்த்து நானும்
ரசிக்க போறேங்க.

Flower Flower Everywhere
In the Garden in my hair
on the vase at the Stare
on the table on the Door
what a lovely time of the year
Flower Bloooming bringing Cheer

இந்தப் பாடல்களைக் குழந்தைகள் இடைவெளி நேரங்களிலும் பாடி நடனம் ஆடுகின்றனர்.

## பூக்களை வரைந்து அதில் இலைகளை ஒட்டுதல்:

பூக்களின் கோட்டு படத்தினுள் இலைகள் மற்றும் இதழ்களைக் கொண்டு விதவிதமாக ஒட்டினர்.

## காகித பூ செய்தல்:

குழந்தைகளுக்கு, எளிதான முறைகளில் காகித பூ செய்ய கற்றுக்கொடுத்தேன். வண்ணம்



தீட்டுதல், காகித பூ செய்தல், வரைதல் மூலம் குழந்தைகளின் fine muscles coordination - மேம்படுத்த முடிந்தது.

## செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி பாதுகாத்தல்:

கதை கூறுதல்:

வண்ணத்துப் பூச்சியும் வண்ண வண்ண மலர்களும் கதை கூறி அதன் மூலம் பகிர்ந்து கொடுத்தல் உணர்வை மாணவர்களிடம் மேம்படச் செய்தேன்.

## திறன்கள் மேம்படுதல் :

பூக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன.? என்ற கேள்விக்கு மாணவர்களிடம் இருந்து செடியில், கொடியில், மரத்தில் என்று பல்வேறு பதில்கள் வந்தன. யார் யார் வீட்டில் செடி இருக்கிறது?, . என்ன செடி இருக்கிறது? எப்படி செடி வளர்ப்பது? என்றெல்லாம் கேள்வி கேட்டு செடி வளர்க்க சூரிய ஒளி, நீர், மண் வளம், இனங்கள் தேவை என விளக்கி கூறினேன்.

அடுத்தாக செடி வளர்ந்து மரம் ஆவதையும், மரங்கள் தான் மழைக்கு ஆதாரம் எனவும் தற்போதைய சூழ்நிலையில் மரம் வளர்ப்பதன் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறினேன்.

பூக்களின் தன்மையைக் கொண்டே பூக்கள் போல நீங்களும் மிக மென்மையானவர்கள். உங்களுக்குள் அடித்தல். கிள்ளுதல் போன்ற செயல்களைத் தவிர்க்க வேண்டும் எனவும், உதிரி பூக்கள் ஒன்றாக சேர்ந்து மாலையாகக் காட்சி அளிப்பது போன்று நீங்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையும் கூறினேன்.

பூக்கள் பற்றிய வகுப்பு செயல்பாடுகள் நிறைவுற்ற பிறகு, குழந்தைகளுக்குப் பூக்கள் பற்றி ஏற்பட்டிருக்கும் புரிதலை அறிந்து கொள்ளவும், அவர்களின் மனதில் பூக்கள் பற்றிய புரிதல்கள் எப்பொழுதும் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவும் பூக்கள் தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று எண்ணினேன். பூக்கள் தினத்தைக் கொண்டடுவதற்காகத் திட்டமிட்டு பள்ளி தலைமை ஆசிரியரிடம் அனுமதி கேட்டதற்கு அவர் உடனே ஒப்புதல் அளித்து ஊக்குவித்தார். மேலும் குழந்தைகள் வண்ண உடையில் வருவதற்கும் அனுமதியளித்தார். வண்ண உடையில் வரும்படி எழுதி அனுப்பிய குறிப்பைப் பெற்றோர்கள் பார்க்கவில்லை. ஆனால் பூக்கள் தினத்தன்று காலையில் குழந்தைகள் தங்கள் பெற்றோரிடம் நான் சொன்னதைச் சொல்லி அன்று தயாராக வந்திருந்தனர்.

மறுநாள் காலை எங்களது வகுப்பறை பூக்களாலும் பூக்கள் போன்று வண்ண வண்ண உடைகளில் வந்திருந்த மாணவர்களாலும் நிறைந்திருந்தது.

காலையில் முன் மழலையர் குழந்தைகள் வண்ண துணி அணிந்து வருவதைக் கண்ட மற்ற ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து வகுப்பின் கரும்பலகையில் பூக்கள் தினத்தைக் குறித்து வரைந்து அழகு செய்தனர். அன்றைய தினம் எங்கள் பள்ளியின் 1 - 8 ம் வகுப்பு வரை உள்ள ஆசிரியர் அனைவரும் இந்த பூக்கள்

தினத்தில் கலந்து கொண்டு குழந்தைகளை மகிழ்வித்த தருணம் எங்கள் பள்ளி ஓர் அழகிய சோலையாகக் காட்சியளித்தது. மேலும் இவ்வகையான நிகழ்வுகளைப் பள்ளியளவில் கொண்டாடவும் ஆலோசித்தனர். ஒவ்வொரு குழந்தையும் அவர்களுடைய வீட்டுக்கு அருகில் இருந்த பூக்களைப் பறித்து வந்திருந்தனர். குழந்தைகளின் பெற்றோர்கள் பூங்கொத்து செய்து கொடுத்து அனுப்பினார்கள்.

நானும் பள்ளிக்கூடம் வரும் வழியில் இருந்த செடிகளில் இருந்த பூக்களையெல்லாம் பறித்து வந்திருந்தேன். ஒரு சில பூக்களை மட்டும் மார்க்கெட்டில் இருந்து வாங்கி வந்திருந்தேன்.

அன்றைய நாளில் இளஞ்சிவப்பு நிறத்திலுள்ள தாமரைப் பூவைக் கொண்டு சென்றிருந்தேன். குழந்தைகளுக்கு அதைக்கண்டதும் பூக்கள் பற்றிய பாடல் பாடியது ஞாபகம் வந்துவிட்டது. உடனே அவர்கள் தாமரைப் பூ வெள்ளை நிறத்தில் இருக்குமென்று தானே பாடினோம். ஆனால் இது பிங்க் நிறத்தில் இருக்கின்றதே? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு நான் தாமரைப் பூ பிங்க் மற்றும் வெள்ளை என இரண்டு நிறத்திலுமே இருக்கும், இன்று எனக்கு பிங்க் நிறத்தில் தான் கிடைத்தது. உங்களுக்காக இன்னொரு நாள் வெள்ளைத் தாமரை கொண்டு வருகிறேன் என்று கூறினேன். வண்ண உடையில் வந்ததால் குழந்தைகளும் அந்த நாள் முழுவதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

இதுபோன்று குழந்தைகள் பங்கேற்கும் நிகழ்வுகளைப் பெற்றோர்கள் பெரிதும் வரவேற்றனர். பெற்றோர், குழந்தைகளைத் தயார்செய்து அனுப்புவதிலும் மிகவும் ஆர்வம் கொள்கின்றனர். அம்மாவுடன் தான் வகுப்பில் உட்காருவேன், இல்லையென்றால் ஆசிரியர் எப்பொழுதும் தன்னுடன் தான் இருக்க வேண்டும் என நினைக்கும் குழந்தைகள் அவ்வாறு நிகழாத பொழுது பள்ளிக்கு வராமல் நின்றுவிடுகின்றனர்.

## சக ஆசிரியர்களின் உணர்வு

- செடிக்கு உயிர் உள்ளது என்று குழந்தைகளுக்கு புரியவைத்தது நன்றாக இருந்தது
- பருவநிலை குறித்த பாடல் நன்றாக இருந்தது
- பூக்கள் தலைப்பில் பலவித செயல்பாடுகள் செய்து, மாணவர்களுக்குச் சிந்திக்கும் திறனை வளர்த்த விதம் நன்றாக இருந்தது.
- பூக்களின் வடிவம், நிறம் அவைகளின் பயன்கள், விதங்கள் மற்றும் அவைகளின் மிருது தன்மை குறித்து குழந்தைகளுக்கு கற்பித்த விதம் நன்றாக இருந்தது.
- வகுப்பறையில் பூக்கள் தினம் கொண்டாட்டங்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களின் பங்கேற்றமும் நன்றாக இருந்தது.
- ஆசிரியருடைய முயற்சிகளும் பேச்சும் மிகவும் உத்வேகம் தருவதாக உள்ளது. அவருடைய அனைத்து செயல்பாடுகளும் குழந்தைகளை மையப்படுத்தியதாக இருந்தது.

இதற்கு குழந்தைகளின் குடும்பச் சூழலும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று சிறப்பு விருந்தினர் சித்ரா அவர்கள் கூறினார். சக ஆசிரியர் சிவகாமி அவர்கள் ஆரம்பத்தில் அவர்களிடம் சற்று அதிகமாக நேரம் செல்விடுவதாக கூறினார்.



**கஸ்தூரி. லோ**
முன்மழலையர் ஆசிரியர்
அ.ந.ப. நெல்லித்தோப்பு

# வண்ணங்கள் தருவாயா? இப்படிக்கு வண்ணத்துப் பூச்சி

3 வயது முதல் 4 வயதிலான குழந்தைகளுக்குப் 'பூக்கள்' பற்றிய அறிதலை ஏற்படுத்த இரு செயல்பாடுகளின் வழியே முயற்சித்தேன். அதன்படி துவக்கத்தில் மாணவர்களிடம்,'நீங்க என்னென்ன பூக்களெல்லாம் பார்த்திருக்கீங்க' என்று கேட்டு, யார் வீட்டிலாவது பூச்செடி இருக்கா?, என்ன பூச்செடி? எப்படி இருக்கும்? என்று கலந்து பேசி பூக்கள் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்தினேன். பின்பு கீழ்க்காணும் இரு செயல்பாடுகளின் மூலம் மாணவர்களுக்கு, மேலும் பூக்கள் பற்றிய புரிதலை ஏற்படுத்த விரும்பினேன்.

பூக்களின் இதழ்களைக் கொண்டு ஒட்டுதல், வண்ணம் தீட்டுதல்.

வண்ணங்கள் தருவாயா? இப்படிக்கு வண்ணத்துப் பூச்சி - என்ற நாடகத்தை நடித்துக் காட்டுதல்.

செயல்பாடு: 1. பூக்களின் இதழ்களைக் கொண்டு படத்தின் மேல் ஒட்டுதல்.

ரோஜாப் பூவின் இதழ்களைக் கொண்டு வண்ணத்துப் பூச்சி படத்தின் மேல் ஒட்டுதல்.

குழந்தைகளை 5 பேர் கொண்ட குழுக்களாக அமர வைத்து வண்ணத்துப் பூச்சியின் படத்தினைக் கொடுத்தேன். ரோஜாப் பூவின் இதழில் பசை தடவி ஒரு படத்தில் ஒட்டி,

- **குழு செயல்பாடுகள் சமூக உணர்வு திறனை வளர்க்கவும் ஒப்பார் குழு கற்றலை (Peer Learning) ஏற்படுத்தவும் உதவியாக இருந்தன.**
- **முன்மழலையர் வகுப்பில் கதைகள், மழலைகளின் முழுமையான வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன.**

செய்முறை விளக்கங்களைச் செய்துகாட்டி, பின்பு மாணவர்களைச் செய்ய சொன்னேன்.

மாணவர்களும் என்னைப் போன்றே ரோஜா இதழ்களைத் தனித்தனியே எடுத்து நான் கொடுத்திருந்த குச்சியால் பசையைத் தடவ ஆரம்பித்தனர். ஒருவர் பூவின் இதழ்களைப் பிரித்துக் கொடுக்க, இருவர் பசை தடவ மற்ற இருவர் பசை தடவிய இதழ்களை ஆளுக்கொரு பக்கம் வண்ணத்துப் பூச்சியில் ஒட்ட ஆரம்பித்தனர்.



**மேலே பூக்களின் இதழ்களால் வண்ணம் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட மாணவர்களுக்கு இன்னும் பூக்களின் பெயர் மற்றும் நிறங்களை மனதில் பதியச் செய்வதற்காக கீழ்க்கண்ட கதையைப் பூக்கள் மற்றும் வண்ணத்துப் பூச்சியின் படத்தினைக் காட்டி உணர்ச்சி பூர்வமாகச் சொல்ல ஆரம்பித்தேன்.**

சில குழந்தைகள் ரோஸ் நிற ரோஜாவை மட்டும் ஒட்டினர். சிலர் ஒரு பகுதி ரோஸ் நிறம், மற்றொரு பகுதி சிவப்பு நிறம் என ஒட்டினர். 3 முதல் 4 வயது மாணவர்கள் என்பதால் பசை தடவுவதையும், இதழ்களைக் கையாள்வதிலும் மிகவும் சிரமப்பட்டனர். இதழ் கிழிந்தது, பசை அதிகமாகத் தடவினர், படத்தின் கோட்டைத் தாண்டியும் இதழ்களை ஒட்டினர். ஒரு சிலர் பேப்பரில் பசையைக் கொட்டி அல்லது பேப்பரைக் கசக்கி வீணாக்கினர்; ஒரு சிலர் புரிந்து கொண்டு செய்தனர். எனினும், அனைத்து மாணவர்களும் மிகுந்த சந்தோசத்துடன் செய்தனர்.

## பூக்களின் இதழைத் தேய்த்து வண்ணம் தீட்டுதல்:

குழந்தைகளிடம் பூக்களின் வெளிப்புறத் தோற்றமுடைய படங்களையும், மஞ்சள் நிறச் சாமந்தி பூவையும் கொடுத்தேன். மஞ்சள் நிறச் சாமந்திப் பூவை எடுத்து படத்தில் வண்ணம் தீட்டும் முறையைச் செய்து காட்டினேன். மாணவர்களும் சாமந்தி பூவின் இதழ்களால் வண்ணம் தீட்ட ஆரம்பித்தனர். ஒரு சிலர் படத்திற்குள்ளேயே அங்கும் இங்கும் இழுத்துத் தேய்த்தனர். ஒரு சிலரின் தாள் கிழிந்தது. ஒரு சிலர் செய்தது மஞ்சள் மெழுகு கொண்டு வண்ணம் தீட்டியது போல் இருந்தது. அந்தப் படத்தைப் பார்த்த எங்கள் பள்ளியின் தலைமையாசிரியர் இது பூவின் இதழால் தீட்டப்பட்ட வண்ணம் என்பதை நம்பவில்லை. பின்பு அவரின் முன்பு அதே மாணவர் செய்து காட்டிய பின்னர் மிகவும் ஆச்சரியப்பட்டார். நன்றாக வண்ணம் தீட்டினர்.



இந்த இரு செயல்பாடுகளின் மூலம் பூக்களின் மென்மை, நறுமணம், வண்ணங்கள் முதலியவற்றை மாணவர்கள் நன்கு அறிந்து கொண்டனர். இதழ்களை வைத்து வண்ணம் தீட்டியது, பசை தடவி ஒட்டியது அவர்களின் நுன்தசை இயக்கத்திற்கு மிகவும் உதவியாக இருந்தது. குழு செயல்பாடுகளின் போது பூக்களை மற்றவரிடமிருந்து கேட்டு வாங்கியது, கொடுத்தது, மற்றவர்க்குப் பசை தடவ, ஒட்ட உதவியது அவர்களிடம் சமூக உணர்வு திறனை வளர்க்க உதவியாக இருந்தது.

## வண்ணங்கள் தருவாயா? - கதை

மேலே பூக்களின் இதழ்களால் வண்ணம் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட மாணவர்களுக்கு இன்னும் பூக்களின் பெயர் மற்றும் நிறங்களை மனதில் பதியச் செய்வதற்காக கீழ்க்கண்ட கதையைப் பூக்கள் மற்றும் வண்ணத்துப் பூச்சியின் படத்தினைக் காட்டி உணர்ச்சி பூர்வமாகச் சொல்ல ஆரம்பித்தேன்.

ஒரு தோட்டத்துல ஒரு குட்டி வண்ணத்துப் பூச்சி இருந்ததாம். அது வண்ணமாக வேண்டுமென்று ஆசை பட்டதாம். தோட்டத்தில் இருந்த ஒரு ரோஜாப் பூவிடம் போய் வண்ணம் கேட்டதாம். உடனே அந்த ரோஜாப் பூ இந்தா என்னோட வண்ணத்தை எடுத்துக்கோனு சொல்லி ரோஸ் வண்ணம் கொடுத்ததாம். தோட்டத்திலிருந்த செம்பருத்திப் பூவிடம் போய் வண்ணம் கேட்டதாம். செம்பருத்திப் பூவும், இந்தானு சொல்லி சிவப்பு வண்ணத்தைக் கொடுத்ததாம். தோட்டதிலிருந்த சூரிய காந்திப் பூவிடம் போய் வண்ணம் கேட்டதாம் . சூரிய காந்திப் பூவும்,

இந்தானு சொல்லி மஞ்சள் வண்ணத்தைக் கொடுத்ததாம் தோட்டத்திலிருந்த சங்குப் பூவிடம் போய் வண்ணம் கேட்டதாம். சங்குப் பூவும், நீல வண்ணத்தைக் கொடுத்ததாம் வண்ணத்துப் பூச்சி வண்ணங்களோடு சந்தோசமாகப் பறந்துச்சாம்.

கதை முடிந்ததும் வண்ணத்துப் பூச்சி எந்தப் பூவிடமிருந்து மஞ்சள் வண்ணத்தை வாங்கியது? என்பது போன்று ஒவ்வொரு பூவிடமிருந்தும் வாங்கிய வண்ணத்தைச் சொல்லும் வரை கேள்விகள் கேட்டேன். அதிக மாணவர்கள் சரியாகச் சொன்னார்கள். மீண்டும் மீண்டும் கதையைச் சொன்னேன். ஒரு சில மாணவிகள் கதையைத் தாங்களாகவே சொல்லவும் பழகி கொண்டனர்.

கதையை மாணவர்கள் நன்கு புரிந்து கொண்டதால் அதை ஒரு நாடக வடிவமாக்க விரும்பினேன். நான்கு குழந்தைகளை வரவழைத்து ரோஜா, செம்பருத்தி, சாமந்தி, சங்குப்பூ என ஒவ்வொருவருக்கும் பெயரிட்டேன். மற்றொரு குழந்தையை வரவழைத்து பட்டாம் பூச்சி எனப் பெயரிட்டேன். நான்கு பூக்களையும் நான்கு புறமாக நிற்கவைத்தேன். நான்கு பேரிடமும் அவரவர்க்குரிய பூப் படத்தையும் கையில் கொடுத்து பிடித்துக் கொள்ளச் செய்தேன். மேலும், அவர்களின் அருகே ஒரு வண்ணம் தீட்டப் பட்ட வண்ணத்துப் பூச்சியை வைத்தேன். வண்ணத்துப் பூச்சியை நடுவில் நிற்க வைத்து, நான்கு பகுதியுடைய, வண்ணமில்லாத வண்ணத்துப்பூச்சி பட அட்டையைக் கொடுத்தேன். கதையில் வரும் வசனங்களை மனதில் கொண்டு ஒவ்வொரு பூவிடமும் சென்று வண்ணம் பெற்று வர வேண்டும் என்றேன்.

அவ்வாறு வண்ணத்துப் பூச்சி வந்து வண்ணம் கேட்கும் பொழுது தங்கள் அருகில் இருக்கும் அட்டையை எடுத்து வண்ணத்துப் பூச்சியிடம் கொடுத்து, தான் வண்ணம் கொடுத்ததாகத் தெரிவிக்க வேண்டும் என்று செய்து காட்டினேன். ஆரம்பத்தில் தடுமாறிய குழந்தைகள் பின்பு புரிந்து கொண்டனர். வசனம் பேசுவதில் சப்தம் அதிகம் இல்லாமல் இருந்தது, அதையும் அதிகரிக்கச் செய்தேன். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மற்ற மாணவர்களும் நாடகத்தில் பங்கேற்க வேண்டும் என்று விரும்பியதால் அவர்களுக்கும் வாய்ப்பு வழங்கி அவர்களின் மொழித்திறனை மேம்படுத்த உதவினேன்.

### சக ஆசிரியர்களின் உணர்வு


- .குழந்தைகளின் படைப்பாற்றல் திறனை வெளிக்கொண்டுவரும் வகையில் எப்பொழுதும் திறந்த மனதுடன் இருப்பது நல்லது.
- வண்ணங்களை அறிமுகப்படுத்திய விதமும், மாணவர்களின் கற்பனைத்திறனை வளர்க்கும் விதமும் மிகவும் பிடித்திருந்தது.
- குழந்தைகள் மகிழ்ச்சியான வழியில் கற்றுக்கொள்வதற்கு இது போன்ற கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் மிகவும் உதவுகின்றன

மேற்கூறிய செயல்பாடுகளின் மூலம் இன்னும் மாணவர்களுக்கு நிறைய நுண்தசை இயக்கத்திற்கான செயல்பாடுகள் அதிகம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது. பசை தடவ முடியாமல் கொட்டுதல், பூவின் இதழைக் கையாள முடியாமல் கிழித்தல், தாள்களை மென்மையாக கையாளும் முறையை அறிந்து கொள்ளுதல் என்று மாணவர்கள் பழக வேண்டியவை நிறைய உள்ளன என்று தோன்றியது. L.K.G. & U.K.G மாணவர்களைக் கலந்து உட்கார வைத்து செயல்பாடுகளில் பங்கேற்க வைப்பதன் மூலம் ஒப்பார்குழு கற்றல் (peer learning) நிகழ்வதைப் பார்க்க முடிந்தது.



**பொற்கலை. வீ**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, முத்தியால்பேட்டை

# உற்சாகமான வகுப்பறை; மகிழ்ச்சியான மாணவர்கள்




காமராஜ் நகர் அரசு தொடக்கப்பள்ளியில் இந்த கல்வியாண்டில் முன் மழலையர் நிலை 1-ல் 8 குழந்தைகளும் முன் மழலையர் நிலை 2-ல் 9 குழந்தைகளும் உள்ளனர். எல்லோரும் ஓர் அறையில் அமருவர். குழந்தைகளின் அறிவு நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு கற்பித்தல் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

ஜீலை மாத கருப்பொருள் திட்டமாக நான் எடுத்துக் கொண்ட தலைப்பு உடல் உறுப்புகள்.

## உடல் உறுப்புகள் அறிமுகம்:

உடல் உறுப்புகள் பற்றி அவர்கள் ஏற்கனவே ஓரளவுக்குத் தெரிந்து வைத்திருந்தனர் எனவே நான் அவர்களுக்கு புரியும்படி உடல் உறுப்புகளைப் பற்றி குழந்தைகளிடம் கூறவேண்டும். எனவே என் அருகில் உட்கார்ந்திருந்த மாணவியின் கண்ணில் கையை வைத்து இது என்ன என்று கேட்டேன், கண் என்று அனைவரும் சொல்ல ஆரம்பித்தனர். கேட்பவர்கள் மட்டும் சொல்லுங்கள் என்று கேட்ட பின்னரும் அடுத்தடுத்து காது, வாய், மூக்கைக் காட்டி கேட்கும் பொழுதும் மற்ற மாணவர்களும் சொன்னார்கள்.

பின்னர் மாணவர்கள் அனைவரையும் எழுந்திருக்கச் செய்து கீழ்க்கண்ட பாடலைப் பாடிப் பழகினோம்.

மெல்லோடி, மெல்லோடி, மேக்க மெல்லோடி,

ஹேன்ட்ஸ் அப், ஹேன்ட்ஸ் டவுன்.

இந்த பாடலின் ரிதம் மற்றும் செயல்பாடுகள் மாணவர்களுக்கு மிகவும் பிடித்திருந்ததால் மீண்டும் மீண்டும் விரும்பி பாடினர்.

- **விளையாட்டின் மூலம் மாணவர்கள் உடலுறுப்புக்களைக் கற்றுக் கொண்டார்கள்; அதன் பயன்பாடுகளைத் தெரிந்து கொண்டனர்.**
- **மாணவர்களின் பெருந்தசை வளர்ச்சிக்கும் உதவுவதாக அமைந்தது. வட்டத்திற்கு நடுவே நின்று மாணவர்கள் பேசுவதால் கூச்ச சுபாவமும் குறைந்துவிடுகின்றது.**

## உடல் உறுப்புக்களின் பயன்பாடுகள் -கலந்துரையாடல்:

எல்லோரும் ஸ்நாக்ஸ் சாப்பிட்டுடீங்களா, சாப்பிட்டுட்டோம் மிஸ், மிஸ் நான் மிக்ஸர் சாப்பிட்டேன், நான் பிஸ்கட் சாப்பிட்டேன் என்று ஒவ்வொருவரும் சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஏன் யாருமே சாக்லெட், குர் குரே, லேஸ் எல்லாம் இப்போ கொண்டு வருவதில்லை? நீங்க தான

மிஸ் சொன்னீங்க? ஏன் சாக்லெட் சாப்பிடக் கூடாது? ஏன் குர் குரே, லேஸ் ஏன் சாப்பிடக் கூடாது? மிஸ் பூச்சி பல் வந்துடும் , வயிறு புண் ஆகிடும், வயிறு வலிக்கும், வாய் புண் வந்திரும் என்று சொன்னார்கள். சாக்லேட் சாப்பிட்டால் எப்படி பூச்சி பல்லு வரும் என்றதற்கு பல்லுல தான மிஸ் கடிச்சு சாப்பிடுறோம், அதுனால தான் மிஸ் என்றார்கள். உணவுப் பொருட்களைக் கடித்து சாப்பிடுவதற்காக தான் பற்கள் நமக்கு உதவுகின்றன என்று கூறினேன். இதே போன்று வேறு என்னென்ன உறுப்புகளெல்லாம் நமக்கு பயனுள்ளதாக இருக்கின்றன என்றேன். சிறிது நேரம் சப்தம் வரவில்லை, பின்பு நானே கண் எதற்கு பயன்படுகின்றது, பார்க்குறதுக்கு, காது? கேட்பதற்கு, மூக்கு? ஒரு சில மாணவர்கள் மட்டுமே சுவாசிக்க என்று பதில் சொன்னார்கள். ஒரு சிலர் மூச்சு விட என்றனர். வாய் எதற்காக பயன்படுகின்றது என்றவுடன் ஒரு சிலர் சாப்பிடுவதற்கும், மற்றவர்கள் பேசுவதற்கும் பயன்படுகின்றது என்றனர். கை – புத்தகம் பிடித்து படிப்பதற்கும், எழுதுவதற்கும், பொருட்களைத் தூக்குவதற்கும், வேலை செய்வதற்கும் பயன்படுகின்றது என்றனர். கால் பற்றி கேட்டதும் நடக்க, ஓட பயன்படுகின்றது என்றனர்.

## குழு விளையாட்டு:

மாணவர்களை வட்டமாக அமரச்செய்து கையில் ஒரு பந்தை எடுத்துக்கொண்டு நடுவே உடல் பாகங்களின் பட அட்டைகளை வைத்துவிட்டு நாம் ஒரு விளையாட்டு விளையாடலாமா? என்று கேட்டேன். மாணவர்கள் அனைவரும் பந்தையும், பட அட்டைகளையும் பார்த்த மகிழ்ச்சியில் மிகவும் சத்தமாக விளையாடலாம் மிஸ் என்றனர். நாம இப்போ நமக்கு அருகில் உட்கார்ந்திருக்கும் நபருக்கு அடுத்து உள்ளவர்களிடம் பந்தை தூக்கி போடவேண்டும். யார் பந்தைப் பிடிக்காமல் கீழே விடுகின்றனரோ அவர்கள் வட்டத்திற்கு நடுவே இருக்கும் ஏதாவது ஒரு பட அட்டையை எடுத்து அதன் பெயர் என்ன அதன் பயன்பாடுகள் என்னவென்று சொல்ல வேண்டுமென்று சொன்னேன். விளையாட்டு ஆரம்பித்தது. 3 மற்றும் 4 வயது மாணவர்கள் என அனைவரையும் ஒன்றாக கலந்து உட்கார வைத்திருந்தேன். 3 வயது மாணவர்கள் பெரும்பாலானோர் பந்தைப் பிடிக்க சிரமப்பட்டனர். இருந்தாலும் இந்த விளையாட்டே பெருந்தசை வளர்ச்சிக்கான விளையாட்டு தான் என்பதால் மாணவர்களை ஊக்கப்படுத்தினேன்.

குழந்தைகள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் இச்செயல்பாட்டில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் பந்தை தவறவிடும் மாணவர்கள் வட்டதிலுள்ள பட அட்டையை எடுத்து என்ன சொல்வதென்று தெரியாமல் அப்படியே நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்காக நான் அருகில் சென்று ஒன்று, இரண்டு முறை செய்து காட்டினேன். 4 வயது மாணவர்கள் என்னை விடவும் மிகவும் சிறப்பாக செய்தனர். பந்தை தவற விடும் குழந்தைகள் பட அட்டையை எடுத்து, நான் யாரு தெரியுமா? நான்தான் காது என்னால் தான் எல்லாரும் பேசுவது உங்களுக்கு கேட்குது. எனக்குதான் கம்மல் போட்டு அழகு பார்ப்பாங்க என்றனர். அதற்கு பின்னர் வந்த மாணவர்களில் ஒரு சிலர் நான் தான் மூக்கு என்னாலதான் நீங்க எல்லாரும் மூச்சு விட முடியாது.

நான் இல்லைன்னா நீங்க யாரும் மூச்சு விடவே முடியாது என்றனர். இந்த விளையாட்டின் மூலம் மாணவர்கள் உடலுறுப்புக்களைக் கற்றுக் கொண்டார்கள். மேலும் அதன் பயன்பாடுகளையும் தெரிந்து கொண்டார்கள். மாணவர்களின் பெருந்தசை வளர்ச்சிக்கும் உதவுவதாக அமைந்தது. வட்டத்திற்கு நடுவே நின்று மாணவர்கள் பேசுவதால் கூச்ச சுபாவமும் குறைந்துவிடுகின்றது.



**கு. கன்னிகா**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, காமராஜ் நகர்.

# விளையாட்டுக்களின் மூலம் மொழி கற்பித்தல்

## பள்ளி குறித்த கண்ணோட்டம்:

எங்கள் கிருமாம்பாக்கம் அரசு தொடக்கப்பள்ளியில் வடமாநிலத்திலிருந்து வேலைக்கு வந்திருப்பவர்களின் குழந்தைகள் தான் அதிகம் படிக்கின்றனர். அவர்களின் தாய்மொழி ஹிந்தி. இந்தக் கல்வியாண்டில் முன்மழலையர் வகுப்பில் அதிக வடமாநில மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இது ஒரு வகையில் சந்தோசமாக இருந்தாலும் மற்றொரு வகையில் அவர்களுக்கு எப்படி தமிழ் கற்பிப்பது என்று பயமாகவும் இருந்தது.

## விளையாட்டுக்களின் மூலம் மொழி கற்பித்தல்

## விளையாட்டு -1

மாணவர்களிடம் தமிழ் உயிர் எழுத்துக்களை விளையாட்டுக்கள் மூலம் அறிமுகப்படுத்த விரும்பினேன். உயிரெழுத்துக்கள் அனைத்தையும் படமெடுத்து அட்டையில் ஒட்டி வைத்திருந்தேன். மாணவர்களை வட்டமாக அமரச்செய்து அட்டைகளை நடுவில் வைத்தேன். பின்பு ஒவ்வொரு மாணவராக அழைத்து நான் சொல்லும் உயிரெழுத்துக்களின் அட்டையை எடுத்துக் காண்பிக்கச் சொன்னேன். மாணவர்கள் பெரும்பாலானோர் சரியாகவே எடுத்தனர்.




## விளையாட்டு - 2

அடுத்த விளையாட்டாக வட்ட வடிவில் சிறு சிறு வட்டமாக 12 வட்டங்கள் வரைந்து சிறிய வட்டத்தினுள் உயிரெழுத்துக்கள் அனைத்தையும் வரிசையை மாற்றி எழுதியிருந்தேன். அதை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப

**விளையாட்டுக்கள் மூலம் தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி, மொழியைக் கற்பிக்கும் போது வேற்று மொழிக்குழந்தைகளும் தமிழ் மொழியை மிகவும் எளிதாகக் கற்றுக்கொள்கின்றனர்.**

நகலெடுத்து அனைவரிடமும் கொடுத்தேன். பின்பு வட்டத்தினுள் கலைந்து கிடக்கும் உயிரெழுத்துக்களை இணைக்க செய்தேன். மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் செய்தனர்.


மேலும், உயிரெழுத்துகளைப் புரிந்துகொள்ளும் விதமாக நிறைய பயிற்சித்தாள்களைக் கொடுத்துப் பயிற்சி செய்ய வைத்தேன்.

## முழுமையான வளர்ச்சிக்கு உதவுதல்

இந்த விளையாட்டுகள் மற்றும் பயிற்சிகள் மாணவர்களின் மொழிவளர்ச்சியை மேம்படுத்துவது மட்டுமில்லாமல், நுண்தசை வளர்ச்சிக்கும், கண் மற்றும் கைகளின் ஒருங்கிணைப்பை வளர்க்கும் விதமாகவும் அமைகின்றது. மேலும், மாணவர்களின் படைப்பாற்றல் திறன் மற்றும் அறிவு வளர்ச்சிக்கும் உதவுவதாக அமைகின்றது என்று கருதினேன்.

## இரண்டாம் பருவம்:

இரண்டாம் பருவத்தில் விலங்குகள் மற்றும்



பழங்கள் பற்றிய பரப்புகளை மாணவர்களிடம் அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். விலங்குகள் தலைப்பில் ஏதாவது விலங்கை எடுத்துக்கொண்டு அதன் நிறம், உணவுமுறை, சப்தம் மற்றும் வசிக்கும் இடங்களைப் பற்றி மாணவர்களைப் பேசவைக்க விரும்புகின்றேன். அதன் மூலம் மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கு உதவிட விரும்புகின்றேன். மாணவர்களின் அறிவு சார்ந்த வளர்ச்சிக்கும், நினைவாற்றலை வளர்க்கவும் முற்படுகின்றேன்.

ஆங்கில அறிவை அதிகப்படுத்துதல்.

Dog is a pet animal,

I like dog very much,

It barks loll, loll

இது போன்ற சிறிய வாக்கியங்களை மாணவர்களிடம் அறிமுகப்படுத்தி மற்ற விலங்குகளுக்கும் அவர்களாகவே இது போன்று வாக்கியங்கள் அமைத்து ஆங்கிலத்தில் பேசவைக்க முயற்சி செய்யலாம் என்று விரும்புகின்றேன். இதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல் திறனையும் வளர்க்க முயற்சி செய்யவுள்ளேன்.

## சக ஆசிரியர்களின் உணர்வு

- விளையாட்டுகள் மூலம் தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி ஹிந்தி குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் முறையை நம் குழந்தைகளுக்கும் பயன்படுத்தினால் மிகவும் எளிதாகக் கற்றுக்கொள்வார்கள் என்று தோன்றுகின்றது.



**சுகன்யா. இ**

முன்மழலையர் ஆசிரியர்

அ.தொ.ப, கிருமாம்பாக்கம்

# பூக்களோடு பூத்த எனது எண்ணங்கள்

அரசு பள்ளிக்குப் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்துக் குழந்தைகள் தான் அதிகம் வருகின்றனர். ஆசிரியர்களாகிய நாம், அவர்களை அன்போடு அரவணைத்து மகிழ்ச்சியுடன் பயமின்றி கற்றலில் ஈடுபடுத்தும் பொழுது அவர்களின் அறிவும், திறனும் உற்சாகத்துடன் வெளிப்பட வாய்ப்புள்ளது. அதனால் காலையில் பள்ளி வழிபாட்டுக்கூட்டம் முடிந்து வகுப்பறைக்குள் வந்ததும் இறைவணக்கப் பாடலைப் பாடச்செய்து அமர வைப்பேன். .

## மாணவர்களின் ஆரோக்கியம்:

மாணவர்கள் அனைவரையும் வட்டமாக அமரச்செய்து மாணவர்களிடம் அனைவரும் சாப்பிட்டு வந்திருக்கின்றார்களா? என்று கேட்பேன். யாரேனும் சாப்பிடாமல் வந்திருந்தால் அவர்களுக்குப் பள்ளியில் வழங்கப்படும் பாலுடன் எனது கைப்பையில் எப்பொழுதும் வைத்திருக்கும் பிஸ்க்கட்டைக் கொடுத்துச் சாப்பிடச் செய்வேன். பிஸ்கட் பிடிக்கவில்லை என்றால் அவர்கள் சிற்றுண்டி ஏதேனும் கொண்டு வந்திருந்தால் அதை எடுத்துச் சாப்பிடச் செய்வேன். பின்பு அனைவரும் குளித்தார்களா? பல் துலக்கினார்களா எனக் கேட்டு அவர்களின் தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுக்க முயல்வேன். பின்பு கைத்தட்டுதல், எழுந்து உட்காரச்செய்தல் அல்லது மாணவர்களுக்குச் சுறுசுறுப்பை வரவழைக்கும் செயல்பாடுகள் ஏதேனும் செய்ய வைத்து எனது அன்றைய வகுப்பை ஆரம்பிப்பேன்.

வாரத்திற்கு அல்லது இரு வாரத்திற்கு ஒரு பரப்பு (Theme) எனப்புத்தகத்தில் இருக்கும் விசயங்களை மாணவர்களுக்குச் செயல்பாடுகளின் மூலமாகவும், பயிற்சித்தாள்கள் கொண்டும் செய்ய வைப்பேன். இதில் பூக்கள் பற்றிய பரப்பில் செய்த ஒரு சில செயல்பாடுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இந்தப் பாடலைப் பாடுவதற்காக மாணவர்களை வட்டமாக எழுந்து நிற்கச் செய்து, ஒவ்வொரு

**Flower Theme Song:**

டிங்கிடி டிங்கா டிங்கிடி டிங்கா எங்கே போறீங்க?

பூக்கள் எல்லாம் பூத்திருக்குப் பார்க்கப் போறோங்க!

டிங்கிடி டிங்கா டிங்கிடி டிங்கா எங்கே போறீங்க?

மல்லிகைப்பூ பூத்திருக்குப் பார்ககப் போறோங்க!

மல்லிகைப்பூவே மல்லிகைப்பூவே எங்கே போறீங்க?

மஞ்சள் சாமந்தி பூத்திருக்குப் பாக்கப் போறோங்க!

சாமந்திப்பூவே சாமந்திப்பூவே எங்கே போறீங்க?

வெள்ளைத்தாமரை பூத்திருக்குப் பாக்கப் போறோங்க.

தாமரைப்பூவே, தாமரைப்பூவே எங்கே போறீங்க?

சிவப்பு ரோஜா பூத்திருக்குப் பார்க்கப் போறோங்க!

ரோஜாப்பூவே ரோஜாப்பூவே எங்கே போறீங்க?

பூத்தப்பூவை பார்த்து நாங்க ரசிக்கப் போறோங்க!



- **ஓர் இடத்தில் அமர்ந்த நிலையில் இருப்பதை விட செயல்பாடுகளில் கலந்து கொண்டு கற்பதையே குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்**
- **மாணவர்கள் தங்கு தடையின்றிப் பேசவும் ஆசிரியர் மாணவர்களிடையே பய உணவைப் போக்கவும், கதைசொல்லுதல் வாயிலாக மாணவர்களின் மொழித் திறனனை மேம்படுத்தவும் முடிந்தது.**

வரியையும் உடல் அசைவுகளுடன் பாடச் செய்தேன். இந்தப் பாடல் வரிகள் மாணவர்களுக்கு மிகவும் பிடித்து விட்டதால் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டே இருந்தனர். இதில் இதுவரை வகுப்பிலும் வீட்டிலும் அதிகம் பேசாத ஒரு மாணவன் எப்பொழுதும் இந்தப்பாடலைப் பாடிக்கொண்டே சந்தோசமாக இருந்தது அவனின் பெற்றோருக்கும் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. இந்தப் பாடலின் மூலம் மாணவர்கள் பூக்களின் பெயர் மற்றும் நிறங்களை அறிந்து கொண்டனர். மேலும், மாணவர்களை உடல் அசைவுகளுடன் பாடி ஆடச் செய்ததால் அவர்களின் பெருந்தசை வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமைந்தது.

## பட்டாம்பூச்சிக் கதை:

மாணவர்களை வட்டமாக நிற்க வைத்து வண்ணமில்லா பட்டாம்பூச்சி மற்றும் பூக்களின் படத்தையும் காண்பித்து, கதையைக்கூற ஆரம்பித்தேன். விருப்பமுள்ள நான்கு குழந்தைகளை வரவழைத்து ரோஜா, செம்பருத்தி, சாமந்தி, சங்குப்பூ என ஒவ்வொருவருக்கும் பெயரிட்டு அவர்களிடம் அந்தப்பூவை பிடித்துக்கொண்டு நிற்கச் செய்தேன். மற்றொரு குழந்தையை வரவழைத்துப் பட்டாம்பூச்சி எனப்பெயரிட்டு நான்கு பூக்களிடமும் சென்று நிறம் பெற்று வருமாறு கூறி நடிக்கச் செய்தேன். இதனால் மாணவர்கள் கதையை நன்கு புரிந்து கொண்டனர். ஒவ்வொரு மாணவராய் எழுப்பிப் படங்களைப் பார்த்துத் தெரிந்த அளவில் கதையைக் கூறச்செய்தேன். ஆரம்பத்தில் தடுமாறினாலும் பின்பு கதையைச் சரியாகச் சொல்ல ஆரம்பித்தனர். மாணவர்களுக்கு இந்தக்கதை மிகவும் எளிதாகவும், பிடித்ததாகவும் இருந்தது. அதுமட்டுமில்லாமல் மாணவர்களின் படைப்பாற்றல், மொழி வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தது.

## பள்ளித்தோட்டப் பயணம்:

எங்கள் பள்ளியில் மிகவும் அழகான தோட்டம் உள்ளது அங்கு மாணவர்களை அழைத்துச் சென்று செம்பருத்திப்பூ ரோஜாப்பூ, சங்குப்பூ, சாமந்திப்பூ அனைத்தையும் நேரடியாகப் பார்க்கச்செய்தேன். மாணவர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் பூக்களையும், பூச்செடியையும் தொட்டுப்பார்த்தனர். பூக்களைப் பறிக்கலாமா மிஸ் என்று கேட்டார்கள், நமது தலைமையாசிரியரிடம் அனுமதி கேட்க வேண்டும் என்றதும் ஒரு சிலர் மட்டும் பூக்களைப் பறித்து விட்டனர். இங்குப் பறிக்க வேண்டாம், நாளை வரும் பொழுது பெற்றோரிடம் சொல்லி வாங்கி வருமாறு கூறினேன். வகுப்பிற்கு வந்தவுடன் பள்ளித்தோட்டத்தில் பார்த்த பூக்களைப் பற்றியும், செடியின் அமைப்புகள் பற்றியும் மாணவர்களிடம் கலந்து பேசினேன்.

## மகிழ்ச்சியான கற்றல் செயல்பாடுகள்:

மறுநாள் மாணவர்கள் அனைவரும் தங்களால் முடிந்த அளவு பூக்களைக் கொண்டு வந்திருந்தனர். அதனை வைத்து பட்டாம்பூச்சி மற்றும் பூக்களின் வெளிப்புறத் தோற்றத்தின் படத்தைக் கொடுத்து பூக்களின் இதழ்களை வைத்து ஒட்டச்செய்தேன். மாணவர்கள் மிகுந்த ஆர்வமுடன் இந்தச் செயல்பாட்டினைச் செய்தனர். இதன் வாயிலாக மாணவர்கள் பூக்களைப் பற்றி தெரிந்துகொள்ள முடிந்தது. மாணவர்கள் தங்குதடையின்றி பேசவும் ஆசிரியர் மாணவர்களிடையே பய உணர்ச்சி போக்கவும், கதைசொல்லுதல் வாயிலாக மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்தவும் முடிந்தது. இவை அனைத்தையும் விட நான் வடிவமைக்கும் செயல்பாடுகள் விளையாட்டுகள், பயிற்சிகள், போன்றவற்றில் மழலைச்செல்வங்கள்



அனைவரும் மகிழ்ச்சியுடன் பங்கேற்று, கற்றலில் ஈடுபட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது என்பதோடு இக்கட்டுரையை நான் நிறைவு செய்கிறேன்.



**தமிழ் மலர். சு**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, குண்டுபாளையம்

# NOURISHING THE ROOTS IN PRE-PRIMARY: FEW ACTIVITY IDEAS

- **Interested games and TLMs engaged students to participate in classroom activities.**
- **Learning at the end of the activities were richer as students enjoyed them**

This academic year, I was given the responsibility of teaching the kindergarten students enrolled at my school, GPS Chinnakalapet. To this end, I decided to nourish the roots of their learning and build a solid knowledge foundation. Generally, more care is provided to students at the primary level. However, the required amount of attention is not offered to those studying at the pre-primary level. At times, we forget that if the basics are strengthened, students' learning can progress faster at the later stages.

Till last year, I only had the experience of teaching students from the first standard through to the fifth grade. Thus, teaching LKG students was a new experience for me. Pre-primary students join school when they are just 3+ years of age. Moreover, at this point, they have very less exposure to the world outside of their homes. Initially, I was very confident about handling my LKG class, but as the time to start teaching this class drew near, I felt hesitant about how to take my students forward in terms of their learning skills. Hence, I decided to first make them feel safe in their school environment.

On their first day of school, my students were crying since they had been placed in a new setting. Seeing them cry, I gathered them around me and lifted each child in my arms, one by one, to make them feel at ease. Further, I told them funny stories and gave them toys, to help them cope with the new environment. To my surprise, the students started to come to school happily within three days and even stopped crying during classes. Their parents also observed this change and felt happy. However, to sustain this spirit among my students, I created certain new games/activities and TLMs.

First, I made a few animal masks, for me and my students. Subsequently, they made animal sounds as per the call of the animal whose mask they were wearing. Engaging the students in this activity created a very lively atmosphere in the classroom. I then decided to develop some games for the students to learn alphabets and numbers, which have been detailed below.

**1. Crying Mother, Caring Baby**

This game is based on the concept that requires students to teach the teacher. For playing this game, I hid alphabets (plastic set) here and there inside the classroom. Afterwards, I pretended to be a crying mother who has lost her children, i.e., the alphabets. I saw that my students laughed a lot and helped me find the alphabets. They formed teams and searched all corners of the classroom. On finding the alphabets, they brought those to me. During this game, I reinforced the game's objective by saying. For instance, 'I lost my baby E. I love my E. I want to see my E', and so on. By doing so, the game not only revised the students' familiarity with alphabets but also allowed them to enjoy the lesson.


**2. Touch and Know**

This game was designed to teach pre-numeracy concepts. First, I made cut-outs of numbers, from one to nine, using coloured papers and stuck them on cardboard

pieces. Subsequently, I instructed my students to touch these numbers and write on them or keep flowers on them according to their values. Through this activity, the students became familiarized with numbers from one to nine and learnt to count.

### 3. Stick & Detach

For this game, I made small flower cut-outs using cardboard from saree boxes and stuck calendar sheet numbers on them (from 0–10). I then took ice-cream sticks and stuck bindis on them. From 0 bindis on the first stick, the value of the subsequent ones (in terms of the number of bindis on them) increased by one (for instance, 1, 2, … until 10). Afterwards, I stuck Velcro on the tip of the ice-cream sticks and on the back of the flowers. The students were expected to stick the numbered flowers on the ice-cream sticks with the corresponding number of bindis. This activity also helped the students learn to count.




**4. Identify the Half:** This game, I cut numerous apple pictures into two halves; one half had a number ranging from 11–20, while the other half had seeds drawn on it from 11–20. Showing these pictures to my students, I told them to pair the numbered half of an apple picture with its corresponding half (with the same number of seeds). Subsequently, my students brought together the two halves and matched them to form a whole picture, thus learning to count till 20.


Example: Picture with 18 seeds matched with apple half numbered 18.


### 5. Zero board

This board was used to teach the concept of zero (0). On a piece of cardboard, I drew two columns and wrote the numbers 0 to 9 on one of them. Subsequently, I made 45 (9 + 8 + 7 + 6 + 5 + 4 + 3 + 2 + 1) cotton buds/rolls. While playing this game, a student placed the buds on the column with the corresponding number in descending order (from 9 to 1). When students reached number 0, they learnt that 0 means nothing, and that no buds had to be placed on its column.

### 6. Missing Shapes


For this activity, I took a cardboard saree box and cut some big shapes, within which mini shapes were cut again. I first showed the bigger shapes without their inner parts. I then asked the students to find the inner (smaller) shapes and fit them inside the correctly paired bigger shapes. Each time a student performed this activity, he/she enjoyed identifying the shapes correctly. However, if he/she could not do so, the other students enthusiastically helped their classmate to identify the shapes correctly.






***Zero board***

In this way, both individual and collective learning occurred in the classroom. I developed this game to help my young students think logically.



### 7. Find the little brother

For this game, I used cardboard pieces, coloured papers, two token coins, and printouts of alphabets (both in capital and small letters), which I arranged randomly on the board. When I placed a token coin on a big brother (i.e. a capital letter), the students were required to identify its little brother (i.e. a small letter) and place the other coin on it. For instance, when I placed a coin on capital A, a student placed the other coin on small letter a. This game was continued in the same manner until all the students had taken turns. Later, this game could be played again by dividing the students into groups. During this activity, the teacher should monitor the class carefully and help the students whenever they make mistakes. Consequently, the



students are familiarized with English alphabets and enjoy learning the same through a fun game like this.

Throughout this academic year, I engaged my students in such type of activities and games in the classroom, whereby I noticed a huge difference in their observational and creative skills within a span of three months. I was happy to see that my students are not only walking on the path of progress but also jumping more steps at the same time. They are attracted to learning through such kind of activities and games, which help them enjoy school and motivate them to attend classes regularly. Their vocabulary and listening skills have improved considerably. I further observed that these activities made them better concentrate and focus on the concepts I taught in class. Thus, I succeeded in attaining the learning goals I set at the beginning of this academic year. Moreover, I gave my students activity sheets to complete at home (colouring, counting, and writing), which also helped them make progress at the pace I had planned for them.



**R. RAJAVANTHIGA**
PST
GPS CHINNAKALAPET

# NUMBER GAMES
## IN KINDERGARTEN

I wish to share my first experience of participating in the event Medayil Thisaimani and discuss my experiences in teaching number sense to my UKG students. At the beginning of an academic year, if numbers are taught using only the blackboard and/or arithmetic book, young students can develop a fear of numbers. Thus, I always make it a point to teach numbers through interactive games.

For instance, at the beginning of a lesson, I initiate a conversation by asking my students questions such as “what did you eat today?” Every time, the students provide different answers. However, the majority of answers include food items such as dosa, idly or poori. Taking the students’ responses into consideration, I ask a follow-up question: “How many idlys (or pooris/dosas) did you eat?” Usually, the students’ answers range between one to three. Subsequently, I ask another question: “How do you know the number of idlys you have eaten?” Most of the students answer by showing in action that here one and there one.



Following this discussion, I teach my students the number “one” by asking them to clap once. Afterwards, I ask them to clap twice to teach the number “two”. Throughout the same day, this activity is repeated several times with certain time intervals. I instruct my students to repeat this activity till they can clap correctly. By the end of the day, I introduce the abstract symbols “1” and “2” to the students. Similarly, this activity is performed to teach all the numbers till ten. This interactive game is highly effective since it helps in capturing the students’ attention, and consequently, help them respond better.

Subsequently, circles are drawn on the floor, inside which numbers ranging from one to ten are written; these circles are connected with arrows. For this activity, I ask the students to jump from one circle to another by uttering the respective circle’s number out loud; they are required to follow the arrow marks while doing so. My students enjoy this activity immensely, since they have to jump from one

circle to another. Moreover, since they jump following the order of the numbers, they are able to understand the number sequence very easily. As this activity involves movements such as jumping and walking, the students feel energetic and excited while participating, which helps in their gross motor development.

Another game is introduced to the students afterwards. Similar to the aforementioned game, circles are drawn on the floor, inside which the numbers are written, and all the circles are connected





- **Numbers sense included even in clapping. The way children clapped rhythmically by saying numbers followed by clapping that many times.**
- **Children were asked to hop over circles and call out the numbers**

with arrows. Subsequently, I tell a particular number to a student, who must go and stand inside the circle with that number. Further, he/she is required to tell the circle's number on which he/she is standing. For example, if I say "3", the student has to run and stand inside the circle where "3" is written and say "3". During this activity, number flash cards are also kept inside the circles. In this manner, the students are able to register the numbers along with their graphic representations. They find this activity to be highly engaging, especially since they are allowed to take the flashcards home. The idea of this activity was shared by Mrs. Poornima during one of the workshops conducted by Azim Premji foundation.

To reinforce my students' number sense, I often ask them a few silly questions such as "how many tails does an elephant have?" Once, a student has answered that "an elephant has two tails." However, to my surprise, another one of my students corrected the student by saying, "No, it has only one." In this way, such discussions are carried out in class, wherein the students talk among themselves to arrive at the correct conclusion. Through such experiences, I learnt how important it is to give all students the space they need to freely express their notions.

Further, I would like to share an invaluable and unforgettable experience in my service. There was a boy in my school who was admitted in LKG, but throughout the academic year, he attended my UKG classes since his admission. When I taught LKG students, he attended my classes, and when I taught UKG students, he attended those classes as well. Even in this academic year, I have a small LKG girl student who is attending my UKG classes.




**MAHESHWARI. M**

PPST
GPS MANAVELI

# SCIENCE EXHIBITION

## BY PRE-PRIMARY KIDS

Social and emotional learning plays a key role in developing a child's personality, perception, and learning from a young age. The participation of child in classroom activities and school events helps them to exercise their self-confidence, and it makes way for their further development in learning. The recently concluded science exhibition at GBPS Villianur has given a new energy in social emotional skill of every pre-primary child.

**Interactive Planning with children for science exhibition:**

The planning for science exhibition was done through a discussion with the children. On the day of the discussion, the various events that could take place in the science exhibition were explained to the children. Certain potential projects and displays were explained to them from the textbook. A few activities were also suggested for children. While some of them accepted, others wanted to have non-textbook related activities.

For example, when the children were asked to choose their topics of interest, one child said, "I want to work on forests."

"Why do you want to work on forests?" I asked.

"I like tiger, elephant, and lion", the child replied.

**List of exhibits children the showcased**:

a) Sense organs

b) Our helpers

c) Flowers—colors and their uses

d) Day and Night

e) Fruits

f) Vegetables

g) National leaders

h) Good habits

i) Personal hygiene

j) Impact of forests

k) Names of Indian states

Change in Children: One boy, whose writing skills were fine, was shy of reading or speaking in front of many children. After this event, he conquered his fear and timidity. Now, he volunteers to ask, discuss, and speak in front of others. Similar changes have been evident among many other children.

- Children were involved in the planning of the event, which improved their learning.
- The teacher has presented a few case studies of children in whom changes were evident after their performance in the science exhibition.
- The teacher involved the parents in school events, and they were happy to see that their children had learnt new things and performed in front of everyone.

**Case 1:** One boy used to be hesitant to come out and talk



in front of others. After he has took part in the event, he has become more communicative. He has started to come out of his shell and take up new challenges of answering questions even if the questions have been posed to others.

**Case 2:** The child who made the presentation on Indian states and capitals has now become more active in the classroom. He often actively participates in the class activities.

**Parents reflection:** The parents were very happy to see their children taking part in one or the other activities. All the parents cooperated for this event and appreciated it. One of the parents had asked about their child's performance in the activity. They expressed their happiness at the fact that their child had been practicing and rehearsing the activity every day at home. Another child's parents added that their child had impressed everyone in their family through this performance. The family was also happy about his participation and performance in the school event. "Almost all the parents expressed their satisfaction to the teacher about their children's performance"

**Future plan:** Conducting more such exhibits or events at the class level, based on the themes, will help build the necessary skills in children that will act as basis for their excellence in primary classes.



**Malini. P**
PPST
GBPS Villianur

# என் உடம்பு

என் உடம்பு என்ற தலைப்பில் மாணவர்களைப் பயிற்றுவிக்க நான் ஒரு புதிய முயற்சியைக் கையாண்டதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அதற்காக நான் ஒரு பார்பி பொம்மையைத் துணிப்பைக்குள் போட்டு மூடி, எடுத்துச் சென்றிருந்தேன். குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் மூடிய பையை நீட்டித் தொட்டுப் பார்க்கச் செய்து அந்த பைக்குள் என்ன இருக்கிறது? என்று கேட்டேன். உள்ளிருக்கும் அப்பொருளுக்குச் சில குழந்தைகள் கை இருக்கிறது, கால் இருக்கிறது, தலை இருக்கிறது என்று கூறி அது ஒரு பொம்மை என்று கூறினர். சில குழந்தைகள் சொல்ல, மற்ற குழந்தைகளும் பொம்மை, பொம்மை என கண்டுப் பிடித்த மகிழ்வோடு கூச்சலிட்டனர். அதற்கு பின் பையிலிருந்து பொம்மையை வெளியே எடுத்துக் காட்டியதும் எல்லா குழந்தைகளும் “பொம்மை, பொம்மை” என சந்தோஷ ஆர்ப்பரிப்பு செய்தனர்.

பின் அந்தப் பொம்மையின் ஒவ்வொரு உறுப்பையும் தொட்டுக் காட்டி பெயரைக் கேட்கும் போது அவர்கள் தங்கள் உடலுறுப்புகளைத் தொட்டுக்காட்டி பெயரைச் சொல்ல வேண்டும் என கேட்டுக்கொண்டேன். அவ்வாறே பொம்மையின் தலை, கண், காது, மூக்கு வாய் என காட்டி கேட்க யூ.கே.ஜி. குழந்தைகள் சரியாகக் கூறினர். எல்.கே.ஜி குழந்தைகள் சிலர் உச்சரிக்க தடுமாறிய போது தெளிவாக உச்சரிக்க கற்றுக்கொடுக்கப்பட்டது. நெற்றி, கன்னம், தாடை, புருவம் போன்றவற்றைக் காட்டுமாறு கேட்டபோது எல்.கே.ஜி. குழந்தைகளில் சிலர் சரியாக அடையாளம் கண்டு காட்ட முடியாமல் மாற்றி காண்பித்த போது அவ்வுறுப்புகள் பொம்மைக்கு எங்கே உள்ளது என்பதை அவர்களையே தொட செய்து தெளிவுபடுத்தினேன்.

பின் குழந்தைகளை எழுந்து நிற்கச் செய்து காலை நேராக வைத்தபடியே அமர முயற்சி செய்யச் சொன்னேன் அவர்களால் அமர முடியவில்லை என்ற கூறினர். பின் எப்பொழுதும் போல் அமருங்கள் என்று சொன்னவுடன் எளிதாக அமர முடிந்தது. குழந்தைகளிடம் முதலில் ஏன் அமர முடியவில்லை? என்ற கேள்வியைக் கேட்டவுடன் கால் முட்டியைக் காண்பித்து இங்கு மடங்கும் என்று கூறினர். பின் முட்டியை தொட்டுத் தடவிபார்க்கச் செய்து இதுதான் கால் முட்டி (knee) என்று விளக்கியவுடன் குழந்தைகள் எளிதாகப் புரிந்துக் கொண்டனர். அவர்களுக்குக் கால்முட்டியின் ஆங்கில வார்த்தையும் (knee) நன்கு பரிச்சயமானது.

**பொம்மையை மூடி வைத்து தொட்டு பார்த்து, அது என்னவாக இருக்கும்? என மாணவர்களை யூகிக்க வைத்தது. அந்த பொம்மையைக் கொண்டே உடல் உறுப்புகளை அறிமுகப்படுத்தியது.**

**உடலின் மூட்டுகளை அறிமுகப்படுத்த குழந்தைகளை நேராக கை, கால்களை வைத்துக்கொண்டு அமர முயற்சி செய்ய சொல்லுதல். அவர்களால் அமர முடியாமல் விழிக்கும் போது, முட்டி இருக்கும் இடத்தில் மடங்கும் என சொல்லி, பின் கால் மூட்டு, கை மூட்டு ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது**

**பறவைகளின் படத்தை அதனுடைய நிழலுடனும் வண்ணத்துடனும் பொருத்துதல். ஒரே செயல்பாட்டில் பல்வேறு கற்றல் திறன்களை மேம்படுத்தும் முயற்சி.**

இவ்வாறே கைகளை மடக்கியும், தோளைத் தொடச் செய்தும், இரண்டு கைகளைச் சேர்க்கச் செய்தும் கை மடங்கும் இடத்தைத் தொட்டுப் பார்க்கச் செய்து கைமுட்டி (elbow) என்பதை விளக்கினேன். உடல் உறுப்புகள் பற்றிய ஒரு மணி நேரம் வரை உரையாடல் மிக விறுவிறுப்பாக அமைந்ததை குழந்தைகள் உற்சாகத்தோடு இதில் பங்கு பெற்றதன் மூலம் உணர்ந்து கொண்டேன்.

மற்றொரு நாள் பூக்கள் தலைமையை

அடிப்படையாகக் கொண்டு அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் ஒரு செயல்பாடு திட்டமிட்டு செய்தது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அந்த செயல்பாட்டின் தொடக்கத்தில் 10 ஜோடி பூக்கள் தனித்தனியாக ஒட்டப்பட்ட அட்டைகள் கலந்து LKG குழந்தைகள் முன் வைக்கப்பட்டது. அதிலிருந்து சரியான பூக்களை ஜோடியாகத் தனியே எடுக்க வேண்டும். இந்த செயல்பாட்டில் எல்கேஜி குழந்தைகள் போட்டி போட்டிக்கொண்டு ஆர்வத்துடன் பங்கேற்றனர். சில குழந்தைகள் பார்த்த உடனே அடையாளம் கண்டு மிக விரைவாகச் செய்து முடித்தனர். சில குழந்தைகள் ஒவ்வொரு பூக்களின் அருகிலும் அட்டைகளைப் பொருத்திப்பார்த்து கண்டுபிடித்தனர். சில குழந்தைகள் சற்று தடுமாறினர். அவர்களுக்கு வழிகாட்டும் விதமாக விளக்கி கூறிய பின் புரிந்து கொண்டு செய்தனர். இந்த செயல்பாட்டின் மூலம் குழந்தைகளுக்கு உற்று நோக்குதல், உருவ ஒற்றுமை மற்றும் வேறுபாடுகளை உணரும் திறன் மேம்படுகிறது.

மேற்கண்ட செயல்பாட்டினை யுகேஜி மாணவர்களுக்கு மேற்கொள்ளும் போது, ஐந்து இணை பூக்கள் (ரோசா, தாமரை, செம்பருத்தி, சாமந்தி, டெய்சி) ஒட்டப்பட்ட அட்டைகளைக் கலந்து, கவிழ்த்து, இருவரிசையாக அடுக்கி வைக்கப்பட்டது. இதில் ஏதாவது இரு அட்டைகளை எடுத்து திருப்பிப் பார்க்கும் போது இரண்டும் ஒரே ஜோடி என்றால் வெளியே அவற்றை வைத்துவிட்டு அவர்களுக்கு ஒரு பாயின்ட் கொடுக்கப்பட்டது. அவற்றில் வேறு பூக்கள் இருந்தால் மீண்டும் எடுத்த இடத்திலேயே கவிழ்த்து வைக்கும்படி கூறப்பட்டது. அடுத்து எடுக்கப்படும் முதல் அட்டையில் உள்ள பூவின் இணை ஏற்கனவே மாறி வந்தபோது வைக்கப்பட்ட இடத்தை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து சரியாக எடுக்குமாறு கூறப்பட்டது

ஒரு குழந்தைக்கு ஐந்து வாய்ப்பு வழங்கப்பட்டது. முதலில் புரிந்து கொண்டு செயல்பட தடுமாறினர்கள். அனைவருக்கும் நான்கு வாய்ப்பளித்த போது யோசித்து விளையாடினர். எப்படியாவது சரியாகக் கண்டு பிடித்து எடுக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் இணை சரியாக வராத போது கவிழ்த்து வைக்கும் பூவின் இடத்தை நிதானித்துப் பார்த்துக் கொண்டனர்.



இச்செயல்பாடு குழந்தைகளுக்கு நினைவற்றலை மேம்படுத்தவும், ஏற்கனவே பார்த்ததை யோசித்து நினைவுக்குக் கொண்டு வரும் ஆற்றலை மேம்படுத்தவும் பெரிதும் உதவுகிறது.

## நிஜம் நிழல் வண்ணம் பொருத்துதல்:

எனது மழலையர் வகுப்பறையில் பறவைகள் பற்றிய கற்றலுக்காகப் பல்வேறு செயல்முறைகள் கையாளப்பட்டன. அவற்றில் ஒன்று நிஜம் நிழல் வண்ணம் பொருத்தும் செயல்பாடு. ஒரே செயல்பாட்டில் பல்வேறு திறனை குழந்தைகளிடம் மேம்படுத்துவதற்காக இச்செயல்பட்டினை தேர்ந்தெடுத்தேன்.

## கற்றல் உபகரணங்கள் தயார் செய்யப்பட்ட விதம்:

ஒரு அட்டையின் ஒரு பக்கத்தில் ஒன்றின் கீழ் ஒன்றாக மயில், கிளி, கொக்கு, காகம், வாத்து, ஆகிய பறவைகளின் நிஜ உருவங்கள் ஒட்டப்பட்டன. ஒவ்வொரு பறவையின் அருகிலும் அதன் உடலில் உள்ள பெரும்பான்மையான வண்ணத்தை கொண்ட சிறு சதுர அட்டை ஒட்டப்பட்டது. எதிர் பக்கத்தில் பறவையின் நிழல் உருவப்படம் ( நிஜ உருவப்படத்தை வைத்து வெளிக்கோடு வரைந்து பென்சிலால் கருப்பு வண்ணம் தீட்டப்பட்டு தயாரிக்கப்பட்டது) நேருக்கு நேர் வராதவாறு, மாறி மாறி இருக்குமாறு ஒட்டப்பட்டது. அட்டையில் ஒட்டப்பட்ட நீலம், பச்சை, வெள்ளை , கருப்பு, பழுப்பு வண்ண சிறு சதுர



அட்டைகளின் நிறத்தைக் கொண்ட சிறு சதுரப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன.

## செயல்பாட்டின் விளக்கம்:

குழந்தைகள் அட்டையில் உள்ள பறவைகள் ஒவ்வொன்றின் பெயரையும் கூறினர். பின் நிஜ பறவை உருவத்துடன் ஒத்துபோகும் நிழல் உருவத்தை உற்று நோக்கி ஒப்பீடு செய்து சரியாகக் கண்டுபிடித்தனர். பின்னர் நிஜ பறவை உருவத்தின் அருகில் ஒட்டப்பட்ட வண்ண சதுர அட்டையைக் கூர்ந்து கவனித்து அதே வண்ண சதுர பெட்டியை நிஜ உருவத்தின் சரியான நிழல் உருவத்தின் பக்கத்தில் வைத்தனர்.

இவ்வாறு மயிலுக்கு நீலம், கிளிக்குப் பச்சை, கொக்கிற்கு வெண்மை, காகத்திற்குக் கருப்பு, வாத்திற்குப் பழுப்பு என சரியாகப் பொருத்தினர்.

UKG குழந்தைகள் பலர் முதல் முறையிலேயே நிஜம் நிழல் வண்ணம் பொருத்துவதைச் சரியாகச் செய்தனர். மேலும் பச்சை, வெள்ளை, கருப்பு ஆகிய வண்ணங்களைத் தெளிவாக அடையாளம் கண்டதோடு அவ்வண்ணங்களின் பெயர்களைச் சரியாகக் கூறினர்.

சிலர் இரண்டாவது முறை செயல்பட்டபோது ஐந்து நிறங்களின் வேறுபாட்டையும் அதன் பெயர்களையும் சரியாகக் புரிந்துகொண்டு கூறினர். குழந்தைகள் ஆர்வத்தோடு பங்கேற்றனர். சில சமயம் நீலம், பழுப்பு வண்ணங்களின் பெயர்களைச் சொல்ல தடுமாறியபோது, நான் சொல்லி தர வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இச்செயல்பட்டின் மூலம் உற்றுநோக்கல், ஒப்பிடல், யூகித்தல், யோசித்து செயல்படுதல், போன்ற திறன்கள் மேம்படுவதற்கானப் பயிற்சி பெற்றனர். இச்செயல்பாடு பல முறை செய்ய வைக்கப்பட்ட போது, மிக எளிதில் உருவ ஒப்பீட்டின் மூலம் பறவைகளின் உடலமைப்பு, வண்ண வேறுபாடுகளைத் தெளிவாகத் தெரிந்துக் கொண்டனர்.

---



**அமுதா. க.ச.**
முன்மழலையர் ஆசிரியர்
அ.ந.ப. இலாஸ்பேட்டை

# முன்மழலையர் வகுப்பில் ஒரு நாள் பொம்மலாட்டம்.

## முன்னுரை:

ஒரு மகிழ்வான சூழலைத்தான் வகுப்பறையில் குழந்தைகள் எதிர்பார்க்கிறார்கள். கண்டிப்பு, அடக்குமுறை ஆகியவை மனதளவில் அவர்களைச்சோர்வடையச்செய்கின்றன. ஆனால் பாட்டு, விளையாட்டு ஆகிய செயல்பாடுகள் மூலம் கற்பித்தல் நடைபெறும் போது, அது சிறப்பான தாக்கங்களை உருவாக்கி, மழலைக் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்குத் தூண்டுகிறது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் உருவானதுதான் இந்த பொம்மலாட்டம். மேலும், இது வகுப்பளவில் ஒரு முன்மழலையர் பள்ளி ஆசிரியரின் செயல்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

## பொம்மலாட்டம்.

தாயையும், தாய் மண்ணையும் இவள் என்று பிறந்தவள் என்றறிவாத இயல்பினளாம் எங்கள் தாய்த்தமிழையும் வணங்கி

முன்மழலையர் வகுப்பில் ஒரு நாள் என்ற தலைப்பினைக் கொண்ட பொம்மலாட்டம்

அனைவரும்: வணக்கம் வணக்கமுங்க நாங்க

வணக்கம் சொல்லுறோமுங்க - (2)

பொம்மலாட்டம் பார்ப்பதற்கு வந்திருக்கும்

அனைத்து உள்ளங்களுக்கும் வணக்கம்!

வணக்கம் வணக்கமுங்க நாங்க வணக்கம் சொல்லுறோமுங்க -(2)

நிலா (கன்னிகா): ஏய் அழகி சீக்கிரம் வா பெல்லடிச்சிடப் போகுது.

அழகி: நிலா இன்னைக்கு நமக்கு புது டீச்சர் வரப்போறாங்களாம்





நிலா: அவங்களும் நம்மள அடிப்பாங்களா?

அழகி: தெரியலையே

நிலா: இப்படித் தெரியலை தெரியலைனு சொல்லித்தானே பழைய டீச்சர்கிட்ட நீ நிறைய அடிவாங்கின?

அழகி: தெரியலைனா தெரியலைனுதானே சொல்ல முடியும், அதுக்குப்போயி அடிக்கறாங்க.

நிலா: தெரியாததை அவங்க தான் சொல்லித்தரனும். இதுவே அவங்களுக்குத் தெரியலை. அதான் நம்மளப்போட்டு அடிக்கிறாங்க.

அழகி: நிலா நம்ம கனவுல வர தேவதைகள் எல்லாம் நமக்கு டீச்சரா வர மாட்டாங்களா?

நிலா: அப்படி வந்தால் எப்படி இருக்கும்?

அழகி: தேவதைகள் குழந்தைகளை அடிக்கவே மாட்டாங்க.

அமுதன்: ம்ம்.. நான் ஸ்கூலுக்கு வரமாட்டேன். எனக்கு ஸ்கூலே பிடிக்கலை. என்ன விட்டுடுங்க..

பாட்டி: நாய் வாலு நிமிரலயாம் நாலு பேரு மதிக்கலையாம் அடேய் பேராண்டி...ஏன்டா இப்படி ஸ்கோல்க்குப் போகமாட்டேனு அடம் புடிக்கறா.. இது நல்லதுக்கு இல்லடா.. சொன்னா

கேளுடா பேராண்டி..

அமுதன்: நான் கேட்க மாட்டேன். ஸ்கூலுக்குப் போனால் அங்க டீச்சர் என்னைய அடிப்பாங்க.

பாட்டி: த.. பாருடா பேராண்டி, படியறதுக்குப் பேருதாண்டா படிப்புஞ்.. அடங்கலைன்னா உன்னை அடிச்சிதாண்டா திருத்துவாங்க.

டீச்சர்: அப்படின்னு யாரு சொன்னது? அன்பா எடுத்துச்சொல்லிக் கூடத் திருத்தலாமே.

பாட்டி: ஆங்ஞ்பாண்டியன் குதிரை தாண்டுதாம் கடல புதுசா இருக்கியே தாயி யாரு நீயி?

டீச்சர்: நான் தான் இந்த ஸ்கூலுக்குப் புதுசா வந்திருக்கற டீச்சர்.

அமுதன்: ஐயையோ புது டீச்சரா..ஆ..

டீச்சர்: தம்பி ஏன்டா அழற

அமுதன்: டீச்சர் எல்லாருமே அடிப்பாங்க, எனக்கு ஸ்கூல் வேணாம்.

டீச்சர்: நான் அடிக்க மாட்டேனே.

பாட்டி: அடியாத்தி.. சில இல்லன்னு சின்னாத்தா ஊட்டுக்குப் போனாளாம். அவ ஈச்சம்பாயைச் சுத்திக்கிட்டு எதிராப்புல வந்தாளாம். அந்தக் கதையா இல்ல இருக்கு இது.

டீச்சர்: ஏம்மா இப்படி சொல்றீங்க?

பாட்டி: அடியாத மாடு படியாது டீச்சர். அடிக்கலைன்னா பிள்ளைக எப்படி உங்களை மதிப்பாங்க?

டீச்சர்: மதிப்பும் மரியாதையும் அடிச்சிப் பயமுறுத்தறதால வந்திடாது. அடங்காதப் பிள்ளைகளை அரவணைச்சி வழிக்குக் கொண்டு வரனும்.

அமுதன்: அப்படின்னா நீங்க, எங்களை அடிக்க மாட்டீங்களா டீச்சர்.

டீச்சர்: ஆமாம்.

பாட்டி: என்னவோ போ.. அத்தாப்பு வீடு கட்டி அதுல நாலு ஜன்னல் வச்சி எட்டி எட்டிப் பார்த்தாலும், உத்தியோகந்தேன் புருஜலட்சணம்..டேய் பேராண்டி நீ நல்லா படிச்சா தான் நல்ல உத்தியோகம் கிடைக்கும். இப்படி முட்டாளா இருந்தீனா ஒன்னுதுக்கும் விலங்காது..

டீச்சர்: குழந்தைகளில் யாருமே முட்டாள் இல்ல. புரிஞ்சிக்க சிரமப்படறவங்கள் தான் இருக்காங்க. அவங்களுக்கும் புரிய வைச்சி சொல்லிக் கொடுக்கறது தான் எங்களோட வேலை. அதை நாங்க சரியாச் செய்வோம். நீங்க கவலைப்படாம போய்ட்டு வாங்கம்மா..

அமுதன்: டாடா..பை..பை..பாட்டி சீயூ..

பாட்டி: ஆத்தி என் பேரன் எவ்வளவு சூப்பரா இங்கிஷ் பேசறான். என் கண்ணே பட்டுடும். என் ராஜா..ம்..த..பாரு டீச்சரு காத்தில்லாம தூசி பறக்காது' அடிக்கமாட்டேனு சொல்லி, இப்படி நல்லா இருக்கற புள்ளைகள கெடுத்து வச்சிடாத..

டீச்சர்: இவ்ளோ பழமொழி சொல்றீங்களே பாட்டி இந்தப் பழமொழியைக் கேட்டுருக்கீங்களா? 'பைய மென்றால் பனையையும் மெல்லலாம்' பொறுமையா சொல்லித்தந்து எல்லாத்தையும் சாதிக்கலாம்.

பாட்டி: ம்க்கும்..மலையைக் கிள்ளி எலியைப் புடிச்சானாம் ஒருத்தன், அது மாதிரியாக இதுவும் வேலைக்காவாத கதை தான். நான் போறேன்.

டீச்சர்: தம்பி. உன் பேரு என்ன?

அமுதன்: அமுதன்

டீச்சர்: அமுதன் நீ என்ன கிளாஸ் படிக்கிற?

அமுதன்: நான் யு.கே.ஜி. படிக்கிறேன் மிஸ்.

டீச்சர்: யுகேஷியா வெரிகுட். அமுதன் உன் பாட்டி இப்படித்தான் நிறையப் பழமொழி சொல்லிட்டே இருப்பாங்களா?

அமுதன்: ஆமாம். மிஸ். அவங்க இப்படிப் பேசி பேசித்தான். எங்க தாத்தாவையே வீட்டை விட்டுத் தொரத்திட்டாங்க.

டீச்சர்: அமுதா பெரியவங்களை இப்படி மரியாதைக் குறைவா பேசக்கூடாது. அது தப்பு. இனி செய்யாத வா நாம வகுப்புக்குப் போகலாம்.

அமுதன்: ம்..சரிங்க..மிஸ்..

குழந்தைகள்: குட்மானிங் மிஸ்

டீச்சர்: ஹாப்பி மார்னிங்..

அழகி: மிஸ் நீங்க தான் எங்களுக்கு வந்திருக்கிற புது டீச்சரா?

டீச்சர்: ஆமாம். உன் பேர் என்ன?

அழகி: அழகி டீச்சர்

நிலா: மிஸ் என் பேரு நிலா

டீச்சர்: ம்ஞ்பேரெல்லாம் அழகா இருக்கே

நிலா: நீங்களும் எங்களை அடிப்பீங்களா?

டீச்சர்; நீங்க சமர்த்தா இருந்தால் நான் ஏன் அடிக்கப்போறேன்

அழகி: அப்ப நீங்க எங்களைத் திட்டக்கூட மாட்டிங்களா..

டீச்சர்: திட்ட மாட்டேனே.

நிலா: நாங்களும் தப்புப்பண்ண மாட்டோமே

அழகி: நாங்களும் நல்லா படிப்போமே

டீச்சர்: அப்படியா வெரிகுட்..அமுதா இப்போ நீ சொல்லு இந்த ஸ்கூல் எப்படியிருந்தால் உனக்குப் பிடிக்கும்?

அமுதன்: மூடியிருந்தால் பிடிக்கும் மிஸ்.

டீச்சர்: அச்சச்சோ ஏம்பா அப்படிச் சொல்றே?

அழகி: ஸ்கூல் மூடியிருந்தா அன்னைக்கு லீவ் தானே மிஸ். அதான் அமுதன் அப்படிச் சொல்றான்.

டீச்சர்: ஓ அப்படியா? லீவ் தான் உங்களுக்குப் பிடிக்குமா லீவுல நீங்க என்னெல்லாம் பண்ணுவீங்க?

## ஆலமரம்

அழகி: ஆலமர விழுதுல நாம் ஊஞ்சல் கட்டி ஆடலாம்

நிலா: ரெட்டை ஜடையை சிறகாக்கி வட்டமிட்டே பறக்கலாம்.

அமுதன்: அடுத்த வீட்டு ஆட்டுப்பாள் ஆடிக்கறந்து குடிக்கலாம்.

எல்லாரும்: அய்யனாரு குதிரை மேல ஆனந்தமா ஆடலாம்.

ஆயிரம் தான் ஆசைவைச்சோம் மனசிலஞ்.

எங்கள ஸ்கூலுக்குள்ள அடச்சிவைச்சா பிடிக்கலா..

எங்களுக்குப் பிடிக்கவே இல்லை..

டீச்சர்: இந்த வயசுல ஓடியாடி விளையாடுறது தான் படிப்பு.

நிலா: எப்படி?

டீச்சர்: விளையாட்டு, பாட்டு, நாடகம், கதை, என்று எத்தனையோ ஷாலியான, விஜயங்கள் மூலமாகவே நாம் படிக்கலாம்.

அமுதன்: மிஸ், அப்போ நாங்க கையைக்கட்டிகிட்டு வாயில கைவச்சுட்டு உட்கார வேண்டாமா?

டீச்சர்:வேண்டவே வேண்டாம். இப்போ நாம பாடிக்கிட்டே, விலங்குகளைப் பத்தி படிக்கலாம்.

நிலா: ஓ! படிக்கலாம் மிஸ்.

டீச்சர்: ஒரு அழகான

பிள்ளைகள்: ம்..

டீச்சர்: அடர்த்தியான

பிள்ளைகள்: ம்..

டீச்சர்: அட்டகாசமான

பிள்ளைகள்: ம்..

டீச்சர்: ஒரு அற்புதமான காடு இருந்துச்சாம்

அழகி: காடாஞ் அங்க விலங்குகள் எல்லாம் இருக்குமே.

டீச்சர்: என்னென்ன விலங்குகள் இருக்கும்னு சொல்லு.

நிலா: சிங்கம் புலி கரடி யானை

அழகி: ஓநாய் வரிக்குதிரை ஒட்டகம்

அமுதன்: சிறுத்தையும் ஒட்டகச்சிவிங்கியும் குரங்கும் காட்டுல தான் இருக்கும் பாம்பும் கூட காட்டுல தான் இருக்கும்.

டீச்சர்: ம்.. சரியா சொன்னீங்க. இந்த

விலங்குகளை எல்லாம் காட்டு விலங்குகள் என்று சொல்லுவாங்க. என்ன சொல்லுவாங்க.?

அனைவரும்: காட்டு விலங்குகள் மிஸ்.

டீச்சர்: ஆமாம். இதெல்லாம் ஆபத்தான விலங்குகள். இவை மட்டுமின்றி சில வீட்டு விலங்குகளும் இருக்கு. உங்க வீட்டுல இல்ல உங்க வீட்டுக்குப் பக்கத்தில ஏதாவது விலங்குகள் இருக்கா?.

நிலா: மிஸ் எங்க வீட்டுல நாய் இருக்கு.

அமுதன்; மிஸ் எங்க வீட்டுக்குப் பக்கத்துல, ஆடு, மாடு, பூனையெல்லாம் இருக்கு மிஸ்

அழகி: மிஸ் நான் TV ல பாலைவன ஒட்டகம் பார்த்தேன். ஒட்டகமும் வீட்டு விலங்குதானாம்.

டீச்சர்: நாம இப்போ விலங்குகளை வச்சு ஒரு பாட்டுப்பாடலாமா?

பிள்ளைகள்: ஓ! பாடலாமே!

பாட்டு ( பவ்பவ் வவ்வவ் வவ்வு)

பிள்ளைகள்: அனைவரும், ஏ, ஜாலி.

நிலா: மிஸ் அங்கே யாரோ நிக்கிறாங்க மிஸ்,

அமுதன் பாட்டி நீங்க இன்னும் வீட்டுக்குப் போகலையா?

டீச்சர்: நீங்க இன்னும் இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?

பாட்டி: ஹி..ஹி..அது ஒன்னும் இல்லை டீச்சரம்மாஞ்நீங்க புள்ளைகள அடிக்க மாட்டேனு சொன்னீங்க இல்ல...

டீச்சர்: ஆமாம்.. அதுக்கு

பாட்டி: நீங்க நல்லா சொல்லித்தருவீங்களோ மாட்டிங்களோனு எனக்குச் சந்தேகம். புலிக்குத் தப்பி புதை குழியிலே விழுந்துடக்கூடாது பாருங்க. அதான் ஒளிஞ்சி நின்னு பாத்தேன். ஹே எதுவுமே இல்லை. நீங்க வேணா ஒரு ஆப்பச்சட்டி தந்தா நான் புரு பண்ணிக் காட்டுறேன்ஞ்.

நிலா: இப்போ எதுக்கு ஆப்பச்சட்டியில் ப்ரூ காபி போடப்போறீங்க?

பாட்டி: ஐயையோ...உனக்கு இங்கிலிப்சே தெரியலை...ஏன் பேராண்டி சூப்பரா பேசுவான் அவன் கிட்டக் கத்துக்கோ.. பேராண்டி சொல்லுடா பாட்டி என்ன சொன்னேன்னு.

அமுதன்: ஆப்பச்சுனிட்டி குடித்தா பாட்டி புரூவ் பண்ணுவாங்க.

டீச்சர்: அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்மா.. நாங்க நம்புகிறோம்.

நிலா: பாட்டி சந்தேகமே வேண்டாம் நாங்க சந்தோஜமா படிக்கிறோம்.

அமுதன்: பாட்டி நான் ஸ்கூலுக்கு வர இனி அழவே மாட்டேன்.

அமகி: இனிமே ஜாலியா படிப்போம்

டீச்சர்: கலைகள் மூலமா கற்பிக்கும் கல்வி மகிழ்ச்சியான கல்வியா இருக்கும்.

வணக்கம் வணக்கமுங்க நாங்க

வணக்கம் சொல்லுறோமுங்க..

கல்வியும் கலையும் சேர்ந்தால் தானே

மகிழ்ச்சியா இருக்கும் வகுப்பு! (வணக்கம்)

## முடிவுரை;

மழலைக் குழந்தைகளின் மனதைக் கவரவும், அறிவு வளர்ச்சியைக் கூட்டி, அவர்களின் படைப்பாற்றல் மற்றும் சமூக உணர்வுகளை வெளிப்படுத்தவும், அவர்களின் மொழித்திறன், உடல் இயக்கம் மற்றும் நுண்தசை வளர்ச்சியை மேம்படுத்தவும் இது போன்ற பொம்மலாட்டங்கள் பெரிதும் உதவுகின்றது.



**உமாதேவி. ஆ**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, மீனாட்சி பேட்டை



**சிவகாமசுந்தரி. ம**
முன்மழலையர் ஆசிரியர்
அ.தொ.ப, இந்திராநகர்

NOTES

NOTES

# MEDAIYIL THISAIMAANI



One test of the correctness of educational procedure is the happiness of the child.

"Education is a natural process carried out by the child and is not acquired by listening to words but by experiences in the environment."

The child's mind is not the type of mind we adults possess. If we call our type of mind the conscious type, that of the child is an unconscious mind. Now an unconscious mind does not mean an inferior mind. An unconscious mind can be full of intelligence. One will find this type of intelligence in every being, and every insect has it.

It would be so simple to allow children, when tired of sitting, to rise, and when tired of writing, to desist, and then their bones would not be twisted.



Maria Montessori
(1870-1952)

AZIM PREMJI FOUNDATION
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. RTO, Puducherry - 605 004.
www.azimpremjifoundationpuducherry.org, www.azimpremjifoundation.org

Send us your feedback :
thisaimaani@azimpremjifoundation.org
✆ 9500400446 - 8220001765

MOTHER'S GRACE 0413 2336204